# வழி பிறந்தது



மாத்தளை-கார்த்திகேசு

# வழி பிறந்தது

[நாவல்]

மாத்தளை-**கார்த்திகேசு**

**இளவழகன் பதிப்பகம்**
**4, இரண்டாவது தெரு,**
**ஆண்டவர் நகர், கோடம்பாக்கம்,**
**சென்னை-600 024**

வழி பிறந்தது
(C) மாத்தளை-கார்த்திகேசு

இலங்கையில் வெளியீடும் விற்பனை உரிமையும்

**குறிஞ்சி வெளியீடு**

**129/25 ஜெம்பட்டா வீதி**

**கொச்சிக்கடை**

**கொழும்பு-13**

---

அச்சிட்டோர் :

ஸ்ரீ கோமதி அச்சகம்
41, சூரப்ப முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | VAZHI PIRANTHATHU |
| Language | : | Tamil |
| Wr tten by | : | Matalai-Karthikesu |
| Copy right of | : | Author |
| Published by | : | ELAVAZHAGAN PATHIPPAGAM Madras-600 024 |
| First Edition | : | March 1992 |
| Types Used | : | 10 Point |
| Number of Pages | : | XII + 148 |
| Number of copies | : | 1200 |
| Printed by | : | Sri Gomathy Achagam Madras-600 005 |
| Wrapper Designed by | : | V. Karunanithy |
| Subject | : | Navel |
| Price | : | Rs. 20.00 [INDIA] |

வல்லிக்கண்ணன்

வள்ளலார் பிளாட்ஸ்;
புதுத்தெரு, லாயிட்ஸ்ரோடு,
சென்னை—5

# அணிந்துரை

இலங்கை மலையகத் தமிழர்கள்—தோட்டத் தொழிலாளர்கள் வாழ்க்கையையும் அவர்களது பிரச்சினைகளையும் உணர்ச்சியோடு தீவிரமாக எடுத்துக் கூறும் படைப்பு 'வழிபிறந்தது' நாவல்.

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர் மாத்தளை—கார்த்திகேசு, மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சிரமங்களையும் சிக்கல்களையும் நன்கு உணர்ந்திருக்கிறார்; அவை பற்றி ஆழ்ந்து சிந்தித்திருக்கிறார்; உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் நலங்கள் பிறப்பதற்குத் தேவையான வழிவகைகள் குறித்து வெகுவாக யோசித்திருக்கிறார். அதன் விளைவுதான் 'வழி பிறந்தது' என்ற இந்நாவல். நாவலைப் படிப்பவர்கள் இதை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

மலையகத் தமிழர்கள்-தோட்டத் தொழிலாளர்களது வாழ்க்கை மற்றும் அவர்களது பிரச்சினைகள் குறித்து இதற்கு முன்பும் சில நாவல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும், அவற்றிலிருந்து வித்தியாசமான ஒரு படைப்பாக அமைந்துள்ளது மாத்தளை—கார்த்திகேசுவின் 'வழிபிறந்தது' நாவல்.

தோட்டத் தொழிலாளர்களின் வறுமையையும் வாழ்க்கைச் சோகங்களையும் உள்ளது உள்ளபடி சித்தரிக்கும் கார்த்திகேசு, அந்நிலைமைக்கு அடிப்படையான காரணங்

களைப் பற்றியும் சிந்தித்து, மக்களின் குறைபாடுகளையும் அவர்களை தங்கள் நலனுக்காகப் பயன்படுத்திக் கொழுக்கிற அரசியல்வாதிகள் போக்குகளையும் சுட்டிக்காட்டுகிறார்.

"பொதி சுமக்கும் கழுதைக்கு முன்னாலே, நீட்டு தடியிலே, எட்டாத தூரத்தில், பார்ப்பதற்கு மட்டுமே தூக்கப்பட்ட கறட் கிழங்கு எவ்வளவோ தேவையில்லை! பாட்டாளிகள் என்ற கழுதை மீது அமர்ந்து சோஷலிசம் என்ற கறட் கிழங்கைக் காட்டியபடி அரசியல்வாதிகள் உல்லாசப் பயணம் நடத்துகின்றார்கள். கழுதைகள் இவ்வளவு காலத்திற்கும், இவ்வளவு தூரத்திற்கும் ஏமாற்றப்பட்டு விட்டார்கள்."

"நாம தொழிலாளர். பாட்டாளிவர்க்கம். நம்மகிட்ட உள்ள ஒரேயொரு மூலதனம் உழைப்புச் சக்திதான். இந்த உழைப்புச் சக்தியை உற்பத்திக்கு உபயோகிக்கக் கூடிய அரசாங்கம் ஆட்சிக்கு வரவில்லை. இதனால் பாட்டாளிவர்க்கம் நடுத்தெரு நாராயணர்களாக அலையும் அவலத்தைப் பார்க்கிறோம். பாட்டாளி வர்க்கம் வாழ்க என்று கோஷம் போடும் அரசியல் வாதிகள்கூட, தோட்டத் தொழிலாளரான நம்மைக் கண்ணைத் தொறந்து பார்க்காத போது ஆண்டவனா கண்ணைத் தொறந்து பார்க்கப் போறான்!"

"தோட்டத்துல வேலை செய்த முந்தின தலைமுறையினர் கோழைகள். தாங்கள் சுரண்டப்படுவதை உணராது, 'வேலை தந்தவனுக்கு விசுவாசமா உழைக்கணும் என்கிற அடிமைப்புத்தியிலே ஓடாக உழைத்த அப்பாவிகள். அவங்க வர்க்க போதம் அடையல்ல. தாங்க வாழ்ந்த தோட்டமே முழு உலகமும் என்ற அறியாமையிலே வாழ்ந்துட்டாங்க. விசுவாசம் என்ற சொல்லு முதலாளி வர்க்கத்தைப் பொறுத்த மட்டில் வெறும் அலங்காரச் சொல். தொழிலாள வர்க்கத்தைச் சுரண்டித் தன் வசதிகளைப் பெருக்கிக்

கொள்வது தான் முதலாளி வர்க்கத்தின் சுபாவம். இந்த இரண்டு வர்க்கங்களும் முரண்பட்டவை. 'நடுவழி' என்றும் 'ஜனநாயக சோஷலிசம்' என்றும் 'கலப்புப் பொருளாதாரம்' என்றும் ஒட்டுப் பிளாஸ்திரி போட்டு, இந்த முரண்பட்ட இரண்டு வர்க்கங்களுக்குமிடையில் இணக்கம் கண்டு விட முடியாது. பெற்றி பூர்ஷ்வா வர்க்கத்தினரும் தேசிய முதலாளிவர்க்கத்தினரும் ஆட்சியைக் கைப்பத்துறதுக்கு இந்தக் கோஷங்கள் உதவலாம்.''

இந்த விதமாக, பெரியசாமி என்கிற கதாபாத்திரத்தின் எண்ண ஓட்டம், உரையாடல்கள் வாயிலாக, பல உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார் கார்த்திகேசு.

தொழிலாளர்களின் அறியாமையையும், ஒற்றுமைக் குறைவையும் பயன்படுத்திக் கொண்டு அரசியல்வாதிகளும், தலைவர்களும் லாபம் பெற்றுக் கொண்டிருப்பது நாவல் நெடுகிலும் சுட்டப்படுகிறது.

''வர்க்கத்தின் விமோசனத்திற்கான விடிவு அரசியல் வாதிகளினாலே வந்து சேரும் என்ற நம்பிக்கை ஊட்டுவதாக இங்கு அரசியலும் நடைபெறவில்லை'' என்று அறிவுறுத்தும் ஆசிரியர், யாழ்ப்பாண மண்ணின் அரசியல் மனோ பாவத்தை ராவுத்தர் என்ற பாத்திரத்தின் பேச்சு மூலம் புலப்படுத்துகிறார்—

''தமிழர்கள் தமிழர்கள்தானே? இலங்கைத் தமிழர் என்றும், இந்தியத் தமிழர் என்றும் இரண்டு சாதியார் தோன்றக் காரணமாக இருந்தவர்கள் யார்? இந்தியத் தமிழர்களுடைய வாக்குரிமை பறிக்கப்பட்ட பொழுது, இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் எத்தகைய மனோ பாவத்தைக் கடைப் பிடித்தார்கள்? ஏன்?....''

மேலும் இந்த விமர்சனம் அரசியல் தலைவர்களின் மனப்போக்கை அம்பலப்படுத்துகிறது.

அரசியல் ரீதியான கோஷங்களுக்கும் கொள்கைப் பிரகடனங்களுக்கும், வாழ்க்கை நடைமுறைகள் மக்களின் செயல்பாடுகளுக்கும் இடையே காணப்படுகிற முரண்பாடுகள் பற்றிய சிந்தனைகளும் இந்நாவலில் இடம் பெற்றிருக்கின்றன.

பண ஆசை பிடித்தவர்களின் திட்டமிட்ட சூழ்ச்சிப் போக்குகளும், நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டே கூடச் சேர்ந்தவர்களுக்கு துரோகம் இழைக்கிறவர்களின் நய வஞ்சக இயல்புகளும் மைக்கேல், பரமசிவம் போன்ற கதை மாந்தர் வாயிலாக வெளிச்சப்படுத்தப்பட்டுள்ளன. 'இரண்டு பக்கமும் பிழையிருக்கிறது. இந்நாட்டிலே பரம சிவத்தைப் போன்ற வேஷதாரிகளும்' மக்கள் மத்தியிலே காணப்படுகிறார்கள் என்ற யதார்த்த நிலையையும் நாவல் அறிவிக்கிறது.

''தொழிலாளர்களை மிரட்டியும் பயங்காட்டியும் சில தொழிற்சங்கங்களும் அவற்றின் தலைவர்களும் வளர்ந்துக் கிட்டிருக்காங்க. தொழிலாளர்களுடைய வயித்துல அடிச்சி அவங்க வயித்த நிரப்புறாங்க. மலையகப் பாட்டாளிவர்க்கத்தின் மனச்சாட்சிகள் நீண்டகாலமாக உறங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களை விழிப்படையச் செய்வதுதான் எங்களுடைய இலட்சியம்'' என்று முழக்கமிடுகிறான் அறிவு விழிப்பும் சிந்தனைத் தெளிவும் பெற்றுள்ள பெரிய சாமி.

தொழிலாளர்கள் வர்க்க ரீதியில் ஒன்றுபட்டு முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடத் துணிந்து, அணிவகுத்து முன்னேறும் முடிவை உணர்ச்சிகரமாகச் சித்தரிக்கிறது 'வழி பிறந்தது' நாவல்.

சமூக அவலங்கள், பொது வாழ்வில் நிலவுகிற குறைபாடுகள் முதலியவை அங்கங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன.

'மனுஷத்துவம், மொழி-இனம் நாடு என்ற எல்லைகளைக் கடந்த ஓர் உன்னத இலட்சியம்' என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அறிவு விழிப்பு ஏற்படுத்தவும், சிந்தித்துச் செயல்புரியவும் உதவக்கூடிய முறையில் இந்த நாவலைப் படைத்திருக்கிறார் மாத்தளை-கார்த்திகேசு. வாழ்க்கையை யதார்த்தமாக பிரதிபலிக்கும் இந்நாவலில் இயற்கை வர்ணிப்புகள் நயம் சேர்த்துள்ளன. உறுதிக்கும், நம்பிக்கைக்கும் அமைதிக்கும் உருவகமாக சிவனொளிபாத மலை, நாவல் நெடுகிலும், வெவ்வேறு தன்மைகளில் வர்ணிக்கப்பட்டிருப்பது பாராட்டக் கூடிய விதத்தில் விளங்குகிறது.

நாடகங்கள் பல எழுதி, மேடை ஏற்றியும் குணசித்திர பாத்திரங்களில் நடித்தும் பாராட்டுகளும் பரிசுகளும் பெற்றுள்ள மாத்தளை-கார்த்திகேசு, நாவலிலும் வெற்றிகரமாகத் தனது திறமையை நிரூபித்திருக்கிறார். முற்போக்கு இலக்கியவாதியும் சுய சிந்தனையாளருமான கார்த்திகேசு தன் ஆற்றலை வெளிப்படுத்தி மேலும் புதுமை இலக்கியம் படைப்பார் என எதிர்பார்க்கலாம். அவருக்குப் பாராட்டுகளும் வாழ்த்துக்களும்.

**வல்லிக்கண்ணன்**

# முன்னுரை

மலையகத்தில் நாவல் இலக்கிய முயற்சிகள் மிகவுங் குறைவானது என்பதை ஒப்புக் கொள்ளுதல் வேண்டும். பிரசுர வசதிக் குறைவே அதற்கு முக்கியக் காரணம். பத்திரிகைகளில் ஒருசில நாவல்கள் தொடராக வந்த போதும், நூல்களாகப் பிரசுரமான நாவல்கள் மிகக் குறைவாகும். மலையக மண்வாசனையைக் கொண்ட நாவல்கள் சமீப காலத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு வெளி வந்தபோதும் அதுவும் அந்தப் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர்களினால் எழுதப்படவில்லை என்ற குறைபாடும் கூறப்படுகின்றது.

இவற்றை மனத்திலிருத்திக் கொண்டுதான் நாவலிலக்கியப் பகுதிக்குள் நுழைகிறேன். ஒரு நாவல் எழுத வேண்டும், அதில் நான் பிறந்த மலையக மண்வாசனையைப் பின்னி எழுத வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே எனக்கோர் ஆசை. அந்த ஆசையில் பிறந்ததுதான் 'வழி பிறந்தது' நாவல். இது இற்றைக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன் என்னால் எழுதப்பட்டது. மலையகத்தின் அக்கால கட்டத்தைப் பிரதிபலிப்பதாக இந்நாவல் அமைந்துள்ளதை வாசகர் உணரலாம்.

ஒரு காலகட்டத்தில் ஒப்பந்தக் கூலிகளாக இந்தியா வில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட எமது மூதாதையர்கள் கொடூர மிருகங்களோடும் கொடிய நோய் களோடும் போராடி, காட்டையும் மேட்டையும் பண்படுத்தி னர். எத்தனையோ ஜீவன்கள் தம் ரத்தத்தையும், சதை யையும், எலும்பையும் உரமாக ஈந்து காப்பியையும், ரப்ப ரையும், தேயிலையையும் நட்டு இந்த மண்ணைப் பொன் னாக்கினர். இந்த மண்ணே உலகமென்று அல்லும் பகலும் உழைத்தனர்.

தன்னுடைய ரத்தத்தை நீராக்கி இளம் தேயிலைச் செடிக்கு வார்த்து, மலையகத்தை வளப்படுத்திய தோட்டத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள்தான் எத்தனை. உழைப்பையே மூலதனமாகக் கொண்ட மலையக சமூகத் துக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள்தான் எத்தனை. அவையாவும் எதிர்காலத்தில் நம் மலையக எழுத்தாளர் களின் கைவண்ணத்தில் நாவல்களாக மலரவேண்டும். இந்தத் தேயிலைச் செடிக்கு மட்டும் இறைவன் பேசும் சக்தி யைக் கொடுத்திருந்தால் அவை எத்தனை எத்தனையோ நெடுங்கதைகள் சொல்லும்.

நாவல் இலக்கியத் துறையில் பின் தங்கி விடாது மலையக எழுத்தாளர்கள் முனைந்து முன்னேற வேண்டி யது அவர்களது கடமையாகும். இந்த நாவலின் குறை களைக் குத்திக் காட்டுவதோடு நிற்காமல் நிறைவையும் எண்ணிப் பார்க்கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

இந்நாவல் என்னுடைய முதற்படி. இன்னும் பலபடிகள் அமைக்க உங்கள் ஆதரவு தேவை.

இந்நூலை வெளிக் கொணர ஆர்வமும், உறுதுணையும் நல்கிய அன்புக்கும் பெரும் மதிப்புக்கும் உரிய வே. கருணாநிதி அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்களுக்கும் விரைவில் வெளிவர ஏற்பாடு செய்த இளவழகன் பதிப்பகத்தாருக்கும் என் இதயங்கனிந்த நன்றி உரித்தாகட்டும்.

129/25, ஜெம்பட்டா வீதி மாத்தளை-கார்த்திகேசு
கொச்சிக்கடை,
கொழும்பு—13

# பதிப்புரை

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தும் முதன்மையான நோக்கில் செயல்படும் இளவழகன் பதிப்பகம் மாத்தளை -கார்த்திகேசுவின் இந்நாவலை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறது.

கார்த்திகேசு அவர்களால் இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன், அக்கால கட்ட மலையக மக்களின் சமூக, அரசியல் பொருளாதாரப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாவல் தமிழகத்திலேயே முதன் முதலாக வெளியிடப்படுகிறது.

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள் தமிழகத்தில் வெளியிடப்படுகின்ற அதே வேளை ஈழத்து வாசகர்களையும் சென்றடைவதில் இரட்டிப்பு மகிழ்ச்சியே. கொழும்பு குறிஞ்சி வெளியீட்டின் அனுசரணையுடன் தமிழகத்தில் இந்நாவல் வெளியிடப்படுகிறது.

இந்நாவலின் அச்சுப் பணியில் உதவிய ஸ்ரீகோமதி அச்சகத்தார் அனைவருக்கும், கவிஞர் நெ. அ. பூபதி அவர்களுக்கும், எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்களுக்கும் என் நன்றி.

வே. கருணாநிதி
இளவழகன் பதிப்பகம்

சென்னை—24

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வண. பிதா. தனி நாயகம் அடிகளார் தலைமையில் பிற நாட்டு அறிஞர்கள் மத்தியில் 'காலங்கள் அழுவதில்லை' நாடகம் மேடை யேறியது.

தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனம் நடத்திய திரைக் கதை, வசனம் எழுதும் போட்டியில் இவருடைய, 'சுட்டும் சுடர்கள்' என்ற திரைக்கதைக்கு இரண்டாம் பரிசு கிடைத் தது. இது தவிர 'அவள் ஒரு ஜீவநதி' என்ற திரைப் படத்திற்குத் திரைக்கதை வசனம் எழுதி இவரே தயாரித் துள்ளார்.

தொலைக்காட்சியில் 'காலங்கள்' என்ற இவரது நாடகம் தொடர் நாடகமாக ஒளிபரப்பப்பட்டது 'குடும்பம் ஒரு கலைக் கதம்பம்' என்ற நாடகத்தையும் தொலைக் காட்சிக்காக எழுதி நடித்ததோடு, இலங்கை மலையகப் பாரம்பரியக் காமன் கூத்தையும் தொலைக்காட்சிக்கு அமைத்தளித்தார்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் இணைச் செய லாளர்களில் ஒருவராகவும், இலங்கை கவின் கலை மன்றத் தின் தலைவராகவும், இந்து சமய கலாச்சார அமைச்சின் நாடகக் குழு உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறார்.

—அமிர்த பாரதி

## ஆசிரியரும் ஈழத்து அறிமுகமும்

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் மாத்தளை -கார்த்திகேசு. மாத்தளை விஜே கல்லூரியிலும், கிறிஸ்தவ தேவாலயக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர்.

இருபத்தைந்துக்கும் மேல் மேடை நாடகங்கள் எழுதி இவரைச் சார்ந்த கவின்கலை மன்றத்தின் மூலம் மேடையேற்றியும், குணச்சித்திர பாத்திரங்களில் நடித்தும் பாராட்டுப் பெற்றவர்.

1974 ஆம் ஆண்டு — 'களங்கம்'

1975 ஆம் ஆண்டு — 'போராட்டம்'

1976 ஆம் ஆண்டு — 'ஒரு சக்கரம் சுழல்கிறது'

ஆகிய இவர் எழுதி நடித்த நாடகங்கள் நாடக விழாவில் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளன.

இவரது 'காலங்கள் அழுவதில்லை' என்ற நாடகமே இவருக்குப் புகழைத் தேடித்தந்த நாடகமாகும். மறைந்த பேராசிரியர் டாக்டர் கைலாசபதி அவர்களாலும் பேராசிரியர் டாக்டர் சிவத்தம்பி அவர்களாலும் பாராட்டப்பட்டு விமர்சிக்கப்பட்டது.

இலங்கை மத்தியவங்கி நடத்திய நாடக விழாவில் 'காலங்கள் அழுவதில்லை' நாடகத்தின் மூலம் சிறந்த நாடகம், சிறந்த நாடக ஆசிரியர், சிறப்பு நடிப்புக்கும் உரிய பரிசைப் பெற்றவர். யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது

# வழி பிறந்தது

## 1

'முருகா!' என்று பெருமாளின் உதடுகள் முணு முணுத்துச் சொல்லுகின்றன. அந்த முணுமுணுப்பு அவனுடைய செவிகளிலே கூட விழாத அளவுக்கு மிகவும் இலேசானது தொய்மையானது. இருப்பினும் பக்தியின் ஓங்காரம் அந்த முணுமுணுப்பிலே படிந்திருந்தது.

காலைச் சேவல் கூவும் நேரங்கூட அரும்பவில்லை. ஆனாலும், தனக்கு விழிப்பு ஏற்பட்டால் பொழுது புலர்ந்து விட்டது என்பது பெருமாளின் இயல்பான கணிப்பு. மலை களிலே தவழ்ந்து தொங்கும் குளிர் பெருமாளின் தோலை ஊடறுத்துத் தசைக்குள் ஊசி ஏற்றுகின்றது. பாயிலே படுத்தவாறே தலைமாட்டின் திசையிலே வலக்கையை நீட்டித் துளாவுகின்றான்.

கையிலே சுருட்டும் தீப்பெட்டியும் அகப்பட்டு விட்டன. சுருட்டைப் பற்றி இரண்டு இழுப்பு புகையை உறிஞ்சி, இருமலின் கக்கலுடன் வெளியேற்றிய பின்னர்தான் குளிரி லிருந்து விடுதலை பெற்றதான சுகமான உணர்வு படர்கின்றது.

பாயிலே குந்தி இருந்ததும் பல சிந்தனைகள் பெருமாளை மொய்த்துக் கொள்ளுகின்றன. கொழும்புக்குச் சென்றிருக்கும் பெரியசாமியைப் பற்றிய நினைவுகள் நெஞ்சை நெருக்குகின்றன. இருளைக் கிழித்துக்கொண்டு சுருட்டு நுனியிலே நெருப்புப் பளிச்சிடுகின்றது. அந்தச்

சிவப்பிலே ஒரு நம்பிக்கையும் புரையோடிக் கிடப்பதான நினைவும் எழுகின்றது. அது பெரியசாமியின் குபேர எதிர்காலம் பற்றி, காலநதி தீரத்தில் அமர்ந்து பெருமாள் கட்டிய நம்பிக்கைக் கோட்டை. அவன் கொழும்பிலிருந்து அனுப்பக் கூடிய லெட்டர் கிட்டாதா என்ற ஏக்கம் பெருமாளை மறுகணம் சடுதியாக வாளைத்துக் கொள்ளுகின்றது. சுருட்டைப் பற்களுக்கிடையில் சப்பியபடி மீண்டும் ஒரு இழுப்பு புகையை உறிஞ்சி உடம்பைச் சூடேற்றியபடி எழுகின்றான்.

ஸ்தோப்பு கொடியின் பக்கமாகப் பெருமாளின் கைகள் தாவுகின்றன. அதிலே தொங்கும் துண்டை எடுத்து முண்டாசு கட்டிக் கொள்ளுகின்றான். பழக்கத்தின் தோஷம்.

மகள் கோமதி படுத்துறங்கும் பக்கமாகத் தனது கவனத்தைப் பெருமாள் திருப்புகின்றான். 'கோமதி!' என்று அழைக்க எழும் நாக்கு, அதனை அடக்கிக் கொள்கிறான்,

'பாவம், கோமதி இன்னும் சித்த நேரம் தூங்கட்டும்!' என்று நெஞ்சமெல்லாம் பாசம் பரப்பும் நினைவுகள்.

நித்திய கடமைகள் தொடருகின்றன; துரத்துகின்றன.

ஸ்தோப்பு வாசலைத் தாண்டியதும் 'தண்ணிக்கானை நோக்கி, தேயிலைச் செடிகளை ஊடறுத்து ஒரு குறுக்குப் பாதை ஓடுகின்றது. அந்தப் பகுதிக்குப் புதிதாக வருபவர்களுக்கு பட்டப்பகல் நேரத்திலே கூட அது ஒரு பாதையாகத் தோன்றாது. அதிலே போக்குவரத்துப் பழக்கமும் அரிதே. எனவே, கல்லும் முள்ளும் தாராளமாக அந்தப் பாதை நெடுகிலும் கிடக்கின்றன. பாதையும் ஒவ்வொரு தேயிலைச் செடிக்கும் ஒவ்வொரு திருப்பம் என்ற தோரணையில் வளைந்து வளைந்து செல்லும்.

எவ்வித தடுமாற்றமுமின்றி பெருமாள் அந்தப் பாதையினால் நடக்கத் தொடங்கினான். ராஜபாட்டையிலே தேர் ஊர்வலம் வருவதைப் போன்ற நேர்த்தி. யாராவது பெருமாளின் கண்களைக் கட்டி விட்டாற்கூட எவ்வித சிரமமும் இல்லாமல், அந்தத் தண்ணிக்கான் கல்லுப் பாறையிலே வந்து நிற்பான். ஒவ்வொரு நாளும் அதிகாலையிலே ஒரு வருடமா, இரண்டு வருடங்களா?... பெரியசாமி மகனாகப் பிறப்பதற்கு முன்னாலிருந்தே.... எத்தனை வருடங்கள் என்ற கணக்கும் பெருமாளுக்கே தெரியாது. காலைக் கடன்களிலே முதல் அங்கமாக இடம் பெறும் மலம் கழித்தற் கடமையை அவன் அந்தக் கல்லுப் பாறையிலேதான் நடத்தி வருகின்றான். மலசலங் கழிக்கக்கூட வசதிகளற்ற லயங்களில் வாழ்பவர்கள், இத்தகைய கல்லுப் பாறைகளைத்தான் கக்கூசுகளாக நியமித்தும் அனுபவித்தும் வருகின்றார்கள் என்ற குமுறலோ ஆத்திரமோ பெருமாளை என்றும் தன் வசப்படுத்தியதில்லை.

அந்தப் பாறையிலே அவன் அப்பொழுது இயற்றும் கருமத்தை, லயங்களிலிருந்தோ, "அன்றேல் மலை மேலுள்ள பங்களா நோக்கி நிமிர்ந்து செல்லும் தார் ரோட்டிலிருந்தோ யாரும் பார்த்துவிட முடியாது. சுருட்டு நுனியிலே படிந்திருந்த சாம்பலைத் தட்டி, மீண்டும் சுருட்டுப் புகையை இழுக்கும்பொழுது, ஒரு சின்னஞ் சிறு சிவப்புப் புள்ளியை மட்டும் யாராவது பார்க்கலாம். மிகப் பெரியனவற்றின் படுதாவிலே ஓர் அற்பமான சிவப்புப் புள்ளி.

ஒரு வாசலைப் புகை இழுப்பதற்கும், இன்னொரு வாசலைக் கழிவை இறக்குவதற்கும் தன்னிச்சையாக விடுத்த பெருமாளின் கண்கள் கிழக்குத் திக்கில் வெகு தூரம் வரையிலே ஊடறுத்துச் செல்லுகின்றன. தூரத்திலே, சிவனொளி பாத மலை வைகறை வேளையில் ஊமை இருளிலும் கம்பீரமாக—அந்தக் கம்பீரத்திற்கு உவமையே கிடையாது. கம்பீரத்திற்குப் பூரண அர்த்தப்பொலிவினை

ஊட்டிய சுந்தரத்தில்—எழுந்து நிற்கின்றது. மலையின் உச்சிக்கு ஏறும் பாதையிலே ஏற்றப்பட்டுள்ள தீபங்கள் சில சமயங்களில் தரையைத் தழுவிய தாரகைகளாக மின்னுகின்றன. தன் மகன் பெரியசாமியைப் பற்றித் தந்தைப் பாசம் வியாபித்துள்ள உள்ளத்திலே பெருமாள் கட்டியுள்ள கற்பனைக் கோட்டையின் உயரம் எத்தகையது? அந்த உயரத்திற்கு இந்தச் சிவனொளிபாத மலையின் உயரங்கூட ஈடாகமாட்டாது.

வந்த அலுவல் முடியவுள்ளது. மெதுவாக இறங்கித் தண்ணிக்கானுக்கு வந்தான். தண்ணிக்கானிலே பெருமாள் சென்றவாரம் தன்கைகளாலே தோண்டிய குழி இன்னமும் தூர்ந்து போகாமல் இருக்கின்றது, அதிலே அடி கழுவும் வேலையை முடித்துக் கொண்டு தன் காம்பராவுக்குத் திரும்பினான்.

★ ★ ★

பொழுது புலர்ந்துவிட்டது. கிழக்கில், கம்பீரத்திற்கு இலக்கணம் வகிப்பதுபோல நிமிர்ந்து நிற்கும் சிவனொளிபாத மலைக்கும் அப்பாலே படுதாவாக விரிந்திருக்கும் வானத்திலே மங்கல குங்குமத்தின் இலேசான சிதறல்கள். இருப்பினும், முகிற் போர்வையை உதறி எறியாமல், குறிஞ்சி நங்கை தன் பருவ எழிலை மறைக்கும் லாவண்யம்.

தேயிலை மார்களினாலே மூண்டெரியும் அடுப்பிலே தோசைக்கல் ஏற்றப்படுகின்றது. அதிலே தட்டிவைக்கப் பட்ட கடைசி ரொட்டி பதமானநிலையை அடைகின்றது. தோசைக் கறண்டியினாலே கிளப்பி எடுத்து, அதையும் சுளகிலே போடுகிறாள் கோமதி. நெருப்பைச் சற்றே கிளறி கேத்தலை எடுத்து அடுப்பிலே வைக்கின்றாள்: கேத்தலிலே அளவுத் தண்ணீரே ஊற்றி வைத்திருந்தாள். தேயிலைத் தண்ணி கலப்பதற்கான வெப்பநிலையை அடைவதற்கு

அதிகநேரம் எடுக்காது என்பதைக் கோமதி அனுபவ ரீதியாக அறிவாள்.

சற்றே சிரமத்துடன் அவள் அம்மியின் பக்கமாக நகருகின்றாள். சம்பல் அரைக்கும் வேலை துவங்கிவிட்டது. கோமதி தன் கைப்பட அரைக்கும் சம்பலுக்கு நிகரில்லை என்று பெருமாள் அடிக்கடி பெருமை சொல்வதுண்டு. அந்தச் சம்பலின் சுவை, பெருமாளுக்குக் காலஞ்சென்ற தன் மனைவி மாரியை நினைவுபடுத்துவதும் உண்டு. தாய்க்கும் மகளுக்கும் சமையற்கலையில் ஒத்த கைராசி.

பெருமாள் வேலைக்குப் புறப்படத் தயாராகிவிட்டான். லயத்துத் தொங்கல் கோடிக் காம்பராவிலே குடியிருக்கும் வீரையனும் அவன் மகள் மரகதமும் வேலைக்குப் புறப் படுவதற்கு முன்னர், தான் லயத்திலிருந்து புறப்பட்டுவிட வேண்டும் என்ற ஒரு நியதியைக் கடந்த ஒரு வருட காலமாகவே பெருமாள் கடைப்பிடித்து வருகின்றான். அந்த அவல நிகழ்வு அவர்களுடைய நயமான நட்பினை அறுப்பதற்கு முன்னர், வீரையனும் பெருமாளும் ஒட்டிப் பிறவாத இரட்டையர்களாகவே காணப்பட்டார்கள். நெருங்கிய நட்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாக அவர்களைப் பிரஸ்தாபிக்காதவர்கள் அந்தத் தோட்டத்தில் இல்லையென்றுகூடச் சொல்லலாம். பின்னர் இருவரையும் பிரித்துவைத்த அந்தப் பகையை நினைத்துப் பார்க்கவே பெருமாளின் நெஞ்சம் ஒப்புவதில்லை. குற்றம் தன் பக்கந் தான் என்ற உறுத்துதல் என்றும் பெருமாளுக்கு உண்டு. எனவே, அவர்களுடைய பார்வையிலிருந்து எவ்வளவு ஒதுங்கலாமோ, அவ்வளவுக்கு ஒதுங்கியே வாழ அவன் விரும்பினான்.

"கோமதி...கோமதி...!என்னம்மா செஞ்சுகிட்டிருக்க... நேரமாகுதில்ல? நான் வேலைக்குப் போறதில்லையா?" உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தான் பெருமாள். அந்தக் குரலிலே பொறுமையின்மையின் ஒருவகை வேகம் இலேசாகத் தொனித்தது.

“இந்தா வந்திட்டேன் அப்பா!” கோமதியின் குரல் பெருமாளின் அவசரத்திற்கு ஈடுகொடுக்கும் வேகத்தில் உள்ளே இருந்து வந்தது.

“காலங் காத்தால எழும்பிவிட்டேன். இன்னும் என்னாத்தான் செஞ்சிட்டிருக்கோ..” என்று முணுமுணுத்த பெருமாள், ‘கோமதி ரொட்டி சுடாட்டி பரவாயில்லம்மா.... கொஞ்சம் தேத்தண்ணி ஊத்திக்கிட்டு வா! நேரமாகுது...” என்று கோமதியின் செவிகளிலே விழும்படி கூறுகின்றான்.

“ரொட்டி சுட்டுட்டேன் அப்பா....சம்பல்தான் அரைக்கச் சுணங்கிரிச்சி... சாப்பிட்டுட்டு போங்கப்பா...” என்று உள்ளே இருந்து வெளிக்கிளம்பிய குரல் கூடவே, கோமதி காம்பரா வாசலிலே தோன்றினாள். அவளை அதற்கு இப்பால் நடக்க விடக்கூடாது என்ற அக்கறையுடன் பெருமாள் அவள் கையிலிருந்த ரொட்டியையும் சம்பலையும் பெற்றுக்கொண்டான். ரொட்டியின் ஒரு துண்டைப் பிய்த்துச் சம்பலிலே தோயித்து, வாயிற் போட்டுக்கொள்ளுகின்றான். சம்பலின் சுவை மனைவி மாரியின் நினைவைச் சட்டென்று மனத்திற்குக் கொண்டு வருகின்றது. ‘அவள் மகாராசி...முழுப் பாரத்தையும் என் தோளிலே போட்டிட்டுப் பூவோடும் பொட்டோடும் போயிட்டாள்..” என்று எழுந்த நினைவு அறிவுக்கு ரஸபோதமாகவும் படுகின்றது. அந்த நினைவுகளிலிருந்து விடுபட, “கோமதி! இன்னைக்கு பெரியதொர காலையிலேயே வேலைக் காட்டுக்கு வருகிறாராம்...நேரத்தோட வேலைக்காட்டுல நிக்கனும்முனு நேத்தே பெரிய கங்காணியார் சொல்லிட்டாரு...” என்று கூறியபடியே சம்பற் கலவையிலே தோய்ந்த ரொட்டித் துண்டுகளை விழுங்குகின்றான்.

கோமதி பேச்சுக் கொடுக்காது உள்ளே போனாள்.

பெருமாள் ஏதேதோ யோசனைகளுடன் ரொட்டியைச் சாப்பிடுவதில் ஈடுபட்டிருக்கின்றான். ஆவி கக்கும்

தேநீருடனும் ஒரு கருப்பட்டித் துண்டுடனும் மீண்டும் கோமதி காம்பரா வாசலில் தோன்றினாள்.

"என்னால்தானே அப்பா ஒனக்குக் கஷ்டம்..." தனக்குத்தானே பேசும் ஒரு சுருதியிலே அவள் பேசினாலும் அவ்வார்த்தைகள் பெருமாளின் செவிகளிலே விழத் தவறவில்லை. இந்தச் சொற்களைக் கேட்கும் பொழுதெல்லாம் பெருமாளின் நெஞ்சம் இடிந்துவிடும்.

தன் வேதனையை வெளியே காட்டாது, முகத்திலே பாசப் பிரகாசத்தைப் பரப்பி, முறுவலின் பிரதிபலிப்பையுங் குழைத்து, "எனக்கு என்னம்மா கஷ்டம்?" என்று கேட்டுத் தேநீரையும் கருப்பட்டியையும் பெற்றுக் கொள்ளுகின்றான்.

"என்ன வீட்டிலயே வைச்சுச் சோறுபோட வேண்டி இருக்கில்லையா அப்பா..."

"இத்தன வயசு வரைக்கும் ஒன்ன வளத்திட்டேன். ஒண்ட அண்ணனையும் கஷ்டப்பட்டுப் படிக்க வைச்சிட்டேன்... இனி என்னம்மா கஷ்டம். ஒன் அண்ணன் பெரியசாமிக்கு ஒரு நல்ல வேல கெடச்சிரிச்சினாக்கும்... அப்புறம் எனக்கு என்னா இருக்கு? ஒன்னையும் ஒரு நல்ல இடத்தில முடிச்சிக் கொடுத்திட்டா... அப்புறம் நான் நிம்மதியாக கண்ணமூட வேண்டியதுதானே...!"

"அதில்ல அப்பா...எனக்கு மட்டும் இந்தக் காலு நல்லா இருந்திருந்தா ஒனக்கு இவ்வளவு கஷ்டம் இருந்திருக்காது தானே அப்பா? நானும் நாலு பேத்தப்போல வேல செஞ்சி மாசம் ஐம்பது அறுவதுனு சம்பளம் எடுத்திருப்பேன்பாரு. இப்படி பாரமா மூலையிலே மொடங்கி கெடக்காம..." தேநீர்க் கோப்பையைத் தந்தையிடமிருந்து தாங்கும் அவசரத்தில் காலை எட்டி வைக்கின்றாள்.

அவளுடைய இடக்கால் ஊனம். பிறவியிலேயே அப்படித்தான். பூரண அழகையும் அவள் உடலிலே

தாராளமாக அள்ளிச் சொரிந்த கடவுள், அவளுடைய அந்தக் காலை ஊனமாக்கி இப்படி வஞ்சித்து விட்டானே! அநேக சந்தர்ப்பங்களிலே, மனிதனிலும் பார்க்கக் கடவுள் ஓரவஞ்சகமானவன் என்பதற்குக் கோமதியின் ஊனம் சாட்சியம் என்று பெருமாள் நினைப்பதும் உண்டு

"அதுக்கு என்னா செய்யிறது... நாம நினைக்கிறபடி எதுதான் நடக்குது? எல்லாமே கடவுள் விட்டபடிதான். இந்தத் தோட்டக்காட்டிலயே கொழுந்து பறிக்கிற சுறுக்கில உன் அம்மா மாரியாயிய வெல்றதுக்கு இன்னொருத்தி பிறக்கல்ல... ரெண்டு பேருமா கஷ்டப்பட்டுத்தான் ஒன் அண்ணன் பெரியசாமியப் படிக்க வச்சம்... உன் அம்மா எப்பவும் ரோஷக்காரி. ஒன் அண்ணன் உழைப்பிலே சாப்பிடக்கூடாது என்று போயிட்டா..." மனைவியின் பிரிவுத் துயரம் தொண்டையை அடைக்கப் பெருமாளின் பேச்சுத் தடைபடுகின்றது. தனது வேதனையை வெளியே காட்டாத ஓர் அவசரத்தில் தன் கண்களை ஸ்தோப்புக்கு வெளியே திருப்புகின்றான்.

தொங்கல் காம்பிராவில் குடியிருக்கும் மரகதம் கொழுந்துக் கூடையுடன் புறப்பட்டு வருவது தெரிகின்றது. அவளுடைய பார்வையை நேரிலே சந்திக்கச் சக்தியற்ற பெருமாள், காம்பராவுள் ஏதோ வேலை இருக்கும் சாட்டில் உள்ளே சென்றான். தந்தை உள்ளே சென்றதற்கான காரணத்தைக் கோமதி அறிவாள். ஆனால், அதைப் பற்றி யாருமே பிரஸ்தாபிப்பதில்லை. இத்தகைய ஊமை ஏற்பாடுகள் சில அவர்களுடைய வாழ்க்கைக்கு அமைதி சேர்க்கின்றன.

கோமதி ஸ்தோப்பிலேயே நின்றாள். கோமதியைப் பார்த்தும் பார்க்காத பார்வையுடனும், சிரித்தும் சிரிக்காத சிரிப்புடனும், லயத்திலிருந்து மலையில் ஏறும் ஒற்றையடி குறுக்குப் பாதையிலே மரகதம் ஏறி விரைவாக நடக்கத் தொடங்கினாள் இரண்டுகால்களையும் அநாயாசமாக எட்டி

வைத்து, அவள் நடந்து செல்லும் துள்ளலையும் அழகையும் பார்த்து நின்றாள் கோமதி.

“கடவுள் என்னைக்குத்தான் நம்ம குடும்பத்த கண்ணத் தொறந்து பார்க்கப் போறானோ.... போன பயலிடமிருந்து ஒரு தாக்கலயும் காணம்... அவன் கையில சல்லி வேற இருக்கல... நான் நம்ப கணக்கப்பிள்ள கிட்ட சம்பளம் போட்டதும் தருறேன்னு வாங்கிக் கொடுத்த இருபத்தி ஐஞ்சி ரூபாவோடதான் கொழும்புக்குப் போனான். டவுனு காட்டுல போய் என்னா செய்யி றானோ...” என்று கூறி, சுவரிலே ஒட்டப்பட்டிருந்த முருகன் படத்தைப் பக்தியுடன் ஒரு தடவை பார்த்துக் கொள்ளுகின்றான்.

“இந்தத் தடவ எப்படியும் அண்ணாவுக்கு வேல கெடச்சிடும் அப்பா... நானும் நம்ம மாரி ஆத்தாவுக்கு நல்லா நேந்து காணிக்க வேற முடிஞ்சி வச்சிருக்கேன், மாரியாத்தா நம்மள கைவிட மாட்டாளப்பா....”

“நானும் அப்படித்தான் நெனைக்கிறேன். நானும் நேராத நேத்திக்கடன் எல்லாம்நேந்திருக்கேன். அவனுக்கு வேல கெடைக்கணும்முனுதான்....”

“அண்ணாவுக்கு மட்டும் வேல கெடச்சிரிச்சினா இந்த வருஷம் மாரியாத்தாவுக்கு நம்ம தோட்டத்தில கரகம் பாலிக்கும்போது என் கையாலயே மாவிளக்கு போடுறதாக நேந்திருக்கேன்...”

“ஏதோ ஒண்ட ஆசை நிறைவேறனும் அதுக்குத் தானே கோமதி நானும் பல்லக் கடிச்சிட்டு நாயாக் கஷ்டப் படுகிறேன். அவனுக்கு மட்டும் வேல கெடச்சிட்டா நான் ஏன் காலம் காத்தாலே எந்திரிச்சி இந்த வயசில வேலைக்குப் போகப் போறேன்...”

இந்த உரையாடல் கோமதிக்கும் பெருமாளுக்கும் இடையில் நடக்கும்பொழுதே கோமதி வெற்றிலை -

பாக்கு—புகையிலை—சுண்ணாம்பு முதலியவற்றைக் கணக்காக எடுத்து வைத்து ஒரு பார்சல் செய்து தந்தையிடம் கொடுக்கின்றாள். அந்தப் பார்சலைத் தன் மடியிலே சொருகி வைத்தபடி, ''கதைச்சிக்கிட்டே இருந்தா இன்னைக்கு வேலைக்குப் போனாப்புலதான்'' என்று கூறியபடி மூலையிலே கிடந்த மண் வெட்டியை எடுத்துத் தோளிலே வைத்துக் கொள்ளுகின்றான்.

அன்பான சிரிப்பு ஒன்றின் மூலம் கோமதியிடமிருந்து விடைபெற்ற பெருமாள், சற்று நேரத்திற்கு முன்னர் மரகதம் சென்ற அதே பாதையிலே நடந்து சென்றான்.

அந்தத் திக்கிலே பார்த்த கோமதியின் பார்வையிலே, பெரட்டுக்களம் நோக்கிச் செல்லும் மேட்டு ரோட்டிலே மரகதமும் வேறு இரண்டு பெண்களும் நடந்து செல்வது தெரிகின்றது.

தோட்டக்காட்டிலே கொழுந்து பறிக்கப் போக முடியாது. உழைத்து வாழ முடியாத, ஊனமாகத் தான் வாழ்வதை நினைத்து வருந்தியவாறே கோமதி காம்பராவிற்குள் நுழைந்தாள். பிஞ்சு மனத்திலிருந்து புறப்படும் அந்தப் பெருமூச்சிலேதான் எத்தகைய காங்கை!

## 2

கடல் அலைகள் கரை தட்டி மடிகின்றன. பாற்குடங்கள் உடைந்தனவா? பால் நுரைகள் சிதறித் தெறிக்கின்றன. மங்கிய நிலவொளியில், மேற்குத் திசையிலே எல்லையற்ற கடல் விரிந்து கிடக்கின்றது. கொழும்புத் துறைமுகத்திற்குள் நுழைவதற்காக மூன்று அந்நியக் கப்பல்கள் நங்கூரமிட்டு நிற்கின்றன. அக்கப்பல்களிலே ஒருவகை தீப அலங்காரங்கள். மனித உழைப்பின் ஆண்மையையும், புதிய உலகின் முன்னேற்றத்தையும் பறை சாற்றுவதைப் போன்று பல மாடிக் கட்டிடங்கள் பின்னணியில் எழுந்து நிற்கின்றன. அவற்றின் பிரமாண்

டங்களைப் பார்க்க விரும்பாதவனைப் போல, பெரியசாமி கடற்கரையை நோக்கியே குந்தியிருந்தான்.

சமுத்திரக் கன்னியின் சாகஸத்தைப் பார்த்தபடி கொள்ளையாக வீசி வரும் காற்றுத் தன் உடலை அநுபவிக்க ஒப்புக் கொடுத்தவாறு, காலிமுகக் கடற்கரையின் மணலிலே அவன் குந்தியிருந்தான். மேலே, கடலரிப்புக்குப் பாதுகாப்பாக எழுந்துள்ள சுவருக்குமேலே, தார் ரோட்டின் நசுக்குதலுக்கு விலகிக் கிடக்கும் காலிமுகத் திடலில் கொழும்பு நகர வாழ்க்கையின் பல்வேறு கோலங்கள் திட்டுத்திட்டாகச் சிதறிக் கிடக்கின்றன. இரவிலே உடை களையும் அசிங்கங்களின் முனைப்புகள்... அவற்றைப் பார்க்க மனங் கூசியவனாகவே, இந்த ஒதுக்குப் புறத்தினைத் தஞ்சமடைந்தான்.

இந்த ஒதுக்குப்புறமும் தனிமையும் பல்வேறு விஷயங் களைச் சிந்திக்கவும், ஒரு சில முடிவுகளை எடுக்கவும் வசதியைச் சமைத்தன. அந்த வசதியை அவன் பெரிதும் விரும்பினான்.

ஒரு வாரமாக இந்தக் கொழும்புநகர் முழுவதையும் ஓர் உத்தியோகத்தைத் தேடிக் கொள்வதற்காகச் சல்லடை போட்டுச் சலித்துப்போனான். உத்தியோகம் தேடி முயன்ற அவனுடைய முயற்சியையும் பிரயத்தனத்தையும்வைக்கோற் போரிலே தொலைந்துபோன ஊசியைத் தேடுவதிலே செலுத்தியிருப்பானானால், ஒருவேளை வெற்றி யீட்டுதல் சாத்தியம்.

பாடசாலையிலும் தோட்டக்காட்டிலும் இத்தனை ஆண்டுகளும் படித்தவற்றைப் பார்க்கிலும் பன்மடங்கு படிப்பினையை ஒரு குறுகிய காலத்திலே பெற்ற ஒரு ஞானநிலை. இந்த ஞான வளர்ச்சி மகிழ்ச்சி தருவதாக இல்லை. கசப்பு என்றாலும் உண்மைகள். உண்மைகளை

அறிந்து கொள்ளுதல் வாழ்க்கையின் பயன். தான் வேலை தேடி அலைந்த ஒரு வார காலத்திற்கிடையிலே படித்துக் கொண்ட சில உண்மைகளை அவன் இரைமீட்டிப் பார்த்தான்.

சீனியர் பரீட்சையிலே சித்தியடைந்துவிட்டால், உடை அழுக்காகாத உத்தியோகம் ஒன்றைப் பெற்றுவிடலாம் என்ற நிலை வெள்ளைக்காரன் ஆட்சி வெளியேறியதும், அவன்கூடவே அதுவும் கப்பலேறிவிட்டது. இன்று சீனியர் சித்தி பெற்றவர்கள் மட்டுமல்ல, பல்கலைக் கழகம் சென்று பட்டம் பெற்றவர்கள்கூட, உத்தியோகம் என்றமாயமானை வேட்டையாடிக் களைத்துச் சலித்து விரக்தியின் நடமாடும் உருவங்களாகத் திரிகின்றார்கள்.

திறமையையும் தகுதியையும் வைத்துமட்டும் உத்தி யோகம் பெறும் போட்டியிலே வெற்றி பெற்றுவிட முடியாது. பின்கதவு வழியில் நுழைந்து, அரசியற் செல்வாக்குள்ள யார் யாருடைய எதை எதையோ பிடித்து, எதை எதையோ கொடுத்து உத்தியோகம் பெறும் நாணயமற்ற பிழைப்பு வெகு வேகமாக வளர்ந்துவிட்டது. இந்தப் பண்பு ஜனநாயக நாகரிகம் என்ற பெயரிலே வளர்ந்திருப்பது அவனுக்கு எரிச்சலைத் தந்தது

'உத்தியோகம் பெறும் விஷயத்தில் மட்டுமல்ல, சமுதாயப் பொது வாழ்வின் சகல துறைகளிலும் ஈழம் வாழ் தமிழ் மக்கள் இரண்டாந்தர பிரஜைகளாகவே மதிக் கப்படுகின்றார்கள். இந்த இரண்டாந்தரத்திலும் மேற்தளம் கீழ்த்தளம் என்ற இருவகைகள் என்ற கணிப்பு வேறு. கீழ்த் தளத்தில் உள்ளவர்களையும் தனது தளத்திற்கு ஏற்கும் அங்கீகார மனோபாவம், சகலருக்கும் பொது வானதும் சமமானதுமான ஒரே தரத்தினை உருவாக்கும் பலத்தினைச் சீக்கிரம் உருவாக்க உதவலாம் என்னும் அறிவுச் சுரணை இரண்டாந்தர மேற்தளத்திலே நிற்கும் பெருந்தொகையான தமிழர்களுக்கு ஏற்படுவதாகவும் இல்லை.

'மலைநாட்டுத் தமிழர்கள் சாறு பிழியப்பட்ட சக்கைகளா?'

'இந்நாட்டிலே இப்பொழுது நடைபெறும் ஆதாயமான பிஸ்னஸ் அரசியல் பேசுவதுதான்!'

'பணக்காரர்களை அரசியல்வாதிகளாக்குவதற்கு ஒரு கட்சி!'

'அரசியல்வாதிகளை பணக்காரர்களாக்குவதற்கு இன்னொரு கட்சி!'

'இந்தக் கட்சிகளை விட்டால் ஜனநாயகம் செத்துவிடும் என்ற அவலம் மக்களுக்கு!'

'பொதி சுமக்கிற கழுதைக்கு முன்னாலே, நீட்டுத் தடியிலே, எட்டாத தூரத்தில், பார்ப்பதற்கு மட்டுமே தூக்கப்பட்ட 'கறட்' கிழங்கு எவ்வளவோ தேவையில்லை!' பாட்டாளிகள் என்ற கழுதை மீது அமர்ந்து 'சோஷலிஸம்' என்ற கறட் கிழங்கைக் காட்டியபடி அரசியல்வாதிகள் உல்லாசப் பயணம் நடத்துகின்றார்கள். 'கழுதைகள் இவ்வளவு காலத்திற்கும், இவ்வளவு தூரத்திற்கும் ஏமாற்றப் பட்டு விட்டார்கள்.'

'கறுப்புச் சந்தை—ஊழல்–லஞ்சம் ஆகிய நோய்கள் நாட்டின் பொருளாதார ஆரோக்கியத்தைத் தீவிரமாகத் தின்று புசிக்கின்றன...'

இந்த எண்ணச் சிதறல்களை இரைமீட்டிய பொழுது பெரியசாமிக்கு தன்மீதே ஒருவகை வெறுப்பு ஏற்பட்டது. மூன்றுக்கும் மேற்பட்ட தலைமுறைகளாக இந்நாட்டிலே வாழ்ந்தும், வாக்குரிமையற்ற மனித மந்தையைச் சேர்ந்த தான், இவ்வளவு நேரமும் அரசியல் மேதையைப் போன்று யோசித்தமை அவனுக்கு ஒருவகைக் கூச்சத்தினையும், ஏற்படுத்தியது. இந்தச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு, சகாக்கள் தங்கும் அறையை—புறாக் கூட்டுக்கு மனித

நாகரிகம் கற்பித்துள்ள பெயர்—நோக்கி நடக்கத் தொடங்கினான்.

★ ★ ★

தத்துவம் அறிவுக்கு விருந்துதான். அறிவினாலும், அதன் வித்துவத் தொடுப்பான தத்துவத்தினாலும் மனித வயிறுகள் நிரம்பி விடுவதில்லை. புத்திஜீவிகளும் சாமான்ய மனிதர்களே என்ற சமத்துவத்தை நிலைநாட்டத்தான் ஆண்டவன் பசியைப் படைத்தானா? மிக ஆக்ரோஷமான கோஷங்களினாலே கூட வயிற்றை நிரப்ப முடியாது. பசி ஏனையவற்றிலும் பார்க்கச் சர்வ வியாபகமானது.

பசி தன் வயிற்றைக் கிள்ளி எடுப்பதைப் பெரியசாமி உணர்ந்தான். ''காட்டை'' ஒன்றினைக் குடித்துத் தன் பசியை மந்தப்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் பக்கத்தில் எதிர்ப்பட்ட சைவக் கடைக்குள் நுழைந்தான்.

'வுப் ரீ'—ஒருவன் உள்ளே குரல் கொடுக்கின்றான்.

'சூடா முறுவல் ஒன்று'—முதலாவது சர்வரின் குரலுக்கு மேலாக இன்னொரு குரல் ஓங்காரமாக ஒலிக்கின்றது.

'மாத்தயாவுக்கு எண்பது சதம்' என்று ஒருவன் காஷ்யர் அமர்ந்திருக்கும் திக்கிலே குரல்கொடுக்கின்றான்.

'சினிமாக் கதையைக் கேட்டபடி அங்கை நிக்கிறியா? சீக்கிரம் மேஜையைத் துடையடா!'—சர்வர், மேஜை துடைக்கும் பையனிலே தன் அதிகாரத்தைச் செலுத்துகின்றான். தான் அந்தப் பையனின் நிலையிலிருந்து, சில மாதங்களுக்கு முன்னர்தான் சர்வராக உயர்ந்ததை அவன் மறந்துபோனான்.

சர்வரின் அதட்டலைக் கேட்டு அதிர்ந்த இன்னொரு பையன் மூன்று லோட்டாக்களில் தண்ணீர் கொண்டுவந்து மேஜையிலே வைப்பதில் சுறுசுறுப்புக் காட்டுகின்றான்.

இலையிலே இடியப்பம் கொண்டு வந்து வைத்து, அதன் மீது சாம்பார் என்ற ஒருவகை விநோதத் திராவகத்தை ஊற்றியபடி, 'வடை...கிழங்கு...' என்று கேட்டு வியாபாரத்தைப் பெருக்கும் உத்தியிலே கவனம் செலுத்துகின்றான் ஒருவன்.

சைவக் கடையின் தோசையிலும் இடியப்பத்திலும் சிக்கனமாக இரவுச் சாப்பாட்டினை முடித்துக்கொள்ளலாம் என்ற ஞானம்பெற்ற, நடுத்தர வர்க்கத்தின் 'உத்தியோக காரர்கள்' மேஜைக்கு மேஜை அமர்ந்திருக்கின்றார்கள்.

இந்தக் கடையிலே ஓடியாடி வேலை செய்யும் அத்தனை சிப்பந்திகளுமே மலை நாட்டுத் தமிழர்கள் என்பதைப் பெரியசாமி அறிவான். கொழும்பிலுள்ள அத்தனை சைவக் கடைகளிலும் மேசை துடைத்தும், இலை தூக்கியும், லோட்டா சுமந்தும் பிழைக்கும் இவர்களுடைய பெற்றோர்கள், தமது பிள்ளைகள் கொழும்பிலே உத்தியோகம் பார்த்துச் சம்பாதிப்பதாகத் தோட்டக் காட்டிலே பேசி மகிழ்கின்றார்கள். எத்தகைய ஊமை மகிழ்ச்சி

இவற்றையெல்லாம் எண்ணியபடி, 'காட்டை'யைக் குடித்து வெளியேறிய பெரியசாமி, நேராகத் தான் தங்கி நிற்கும் அறையை நோக்கி நடந்தான்.

பரமசிவம் தங்கியிருக்கும் அறையிலேதான் பெரியசாமி தங்கியிருந்தான். மரகதத்தின் கரம் பற்றி அவள் உடல்மீது ஆதிக்கம் செலுத்தும் அதிர்ஷ்டசாலி பரமசிவம் கடை ஒன்றிலே சிப்பந்தியாக உழைக்கின்றான். அவனும், அவனைப் போன்ற மூன்று கடைச் சிப்பந்திகளும் கூட்டாக கன்னாரத் தெருவிலுள்ள தோட்டத்து வீடு ஒன்றிலே வசித்து வருகின்றார்கள். தன் மனைவி மரகதம் வாழும் அதே லயத்திலே வாழுபவன் பெரியசாமி என்று அறிந்ததுமே, தன் அறையிலே சிறிது காலத்திற்குப் புகலிடங் கொடுத்தான்.

அறையை அடைந்த பெரியசாமி, பரமசிவத்தை அங்கு காணாது சற்று ஏமாற்றம் அடைந்தான். வழக்கத்திலே பரமசிவம் ஏழு மணிக்கெல்லாம் அறைக்குத் திரும்பி விடுவான்.

பரமசிவத்தின் பாயை விரித்து அதிலே அமர்ந்து கொண்டான் பெரியசாமி. முன் அறையில் குடியிருக்கும் ஒருவன் குப்பி லாம்பின் வெளிச்சத்திலே 'பேசும் படம்' படிப்பதிலே, படிப்பதிலும் பார்க்க அதில் வெளியாகியிருந்த சினிமா நடிகைகளின் படங்களைப் பார்ப்பதிலே - கவனம் செலுத்திக் கொண்டிருந்தான்.

கொழும்பு நகரின் காரோடும் தார் வீதிகளை மட்டுமே பார்ப்பவர்கள் பரமசிவம் வசித்துவரும் அறையைப் பற்றி அறிந்திருக்க நியாயமில்லை. தோட்டக் காட்டிலே எட்டடிக் காம்பராதான் ஒரு குடும்பத்தின் வீடு! முன்னால் எட்டடிக் காம்பரா ஒன்று; பின்னால் எட்டடிக்காம்பரா ஒன்று. இந்த இரண்டையும் ஒரு கதவினால் இணைத்ததுதான் கொழும்புத் தோட்டங்களிலுள்ள ஒரு வீடு. முன் அறையில் இருவரும் பின் அறையில் இருவருமாக இந்த வீட்டைப் பங்கு போட்டிருக்கின்றார்கள். பரமசிவத்தின் அறை பின் அறையின் வலப்பக்கம். ஒரு டிரங்குப்பெட்டி, ஒரு பாய், ஒரு பக்கூஸ் பெட்டி ஆகிய சொத்துக்கள் அங்கு காணப்படுகின்றன.

இடப்பக்கப் பகுதியில் வாழ்பவர் பாண்டியன். தோழர் பாண்டியன் என்றால் எல்லோரும் அவரைப் பேர் விலாசமாக அறிந்துகொள்வார்கள். அந்த வீட்டிலே வாழ்பவர்கள் மட்டுமல்ல, அந்தத் தோட்டத்தில் வாழ்பவர்கள் சகலருமே பாண்டியனைத் 'தோழர்' என்று மரியாதையாகத்தான் அழைத்தார்கள். சாமி படங்களுக்குப் பதிலாக மார்க்ஸ்-ஏங்கல்ஸுடைய பெரிய படம் ஒன்றினைத் தலைமாட்டிலே மாட்டி வைத்திருக்கின்றான். இடதுசாரித் தொழிற்சங்கம் ஒன்றில் கணிசமான புள்ளி. அவர் நிறைய வாசிப்பார்.

'பேசும் பட'ப் பிரியரின் சகாவாக முன் அறையின் மறு பகுதியில் வாழும் மைக்கேலுடன் எப்பொழுதும், தோழர் உக்கிரமான தர்க்கங்களிலே ஈடுபடுவார். அவன் தமது பகுதிச் சுவரிலே 'வாத்தியாரின்' பலதரப்பட்ட போஸ்"களில் உள்ள படங்களை ஒட்டி வைத்திருக்கின்றான். பூக்கள் வைத்து, சூடம் காட்டிப் பூஜை செய்யாத குறை ஒன்றை மட்டுந்தான் மைக்கேல் விட்டு வைத்திருக்கின்றான். கொழும்பில் எந்தத் தியேட்டரிலாவது வாத்தியாரின் படம் திரையிடப்பட்டால், முதலாவது ஷோவுக்கு, முதலாவது ரஸிகனாகத் தியேட்டருக்குள் மைக்கேலே நுழைவான் என்றால், அவனுடைய வீரதீரப் பிரதாபங்களுக்கு வேறு சான்றுகள் தேவையில்லை.

தோழரும் மைக்கேலும் வந்தால் சுவாரஸ்யமான சம்பாஷனைகளைக் கேட்கலாம் என்று முதலிலே பெரியசாமி நினைத்துக் கொண்டான். மறுகணம் தோட்டக்காட்டிலே பாடுபடும் வயோதிகத் தந்தையையும், இள வயதுக் கனவுகளை எல்லாம் நெஞ்சில் சுமந்தும், வாழ முடியாது ஊமையாக வீட்டின் மூலையில் முடங்கிக் கிடக்கும் தங்கை கோமதியையும் நினைத்துக் கொண்டான்.

அவன் கொண்டு வந்திருந்த பணம் முற்றாகக் கரைந்து விட்டது. பரமசிவமும் தோழர் பாண்டியனும் மனங் கோணாது அருளும் தயவிலேதான் ஒரு மாதிரியாகக் காலத்தினை ஓட்டிக் கொண்டிருந்தான். அவர்கள் அவனுக்கு உறவினர்களல்லர். இரண்டு நாள்களுக்கு விருந்தினராய்த் தங்கினால் உறவினர்களே முகம் சுழிக்கும் இந்தக்காலத்தில், அவர்களுடைய தாராளத்தினை அதிகம் சுரண்டுவதான ஒரு குற்ற உணர்வும் அவன் நெஞ்சிலே தலை தூக்கத் துவங்கியுள்ளது. தோழரின் முயற்சிகள் எல்லாம் வீணாயின 'காஸுவல் லேபர்' வேலைக்கு மேலே எந்த வேலையும் பெற முடியாது என்று சொல்லி விட்டார். இங்கே கூலி வேலை செய்வதிலும்

பார்க்கத் தோட்டத்திற்கே சென்று கூலி வேலை செய்து வாழ்வது கௌரவமானது என்பது பெரியசாமியின் கட்சி. அவனுடைய கட்சியிலே நியாயம் இருப்பதாகத் தோழரும் ஒப்புக் கொண்டார்.

இன்றே தான் தன் தோட்டத்திற்குத் திரும்பி விட வேண்டும் என்று பெரியசாமி, காலையில் பேச்சுவாக்கில் பரமசிவத்திடம் சொன்னான். 'ஏம்பா அவசரப்படுகிறாய், சம்பளம் குறைஞ்சாலும் உன் படிப்புக்கேற்ற உத்தியோகம் போட்டுத் தரும்படி ஓர் இடத்தில் கேட்டிருக்கேன், நாளைக்கு முடிவாச் சொல்லி விடுவாங்க... நானும் மரகதத்தப் பார்த்து நாளாகுதில்ல. நாளை முடிவு தெரிஞ்சதும், ஒண்ணாப் போகலாம் என்று பரமசிவம் தடுத்து விட்டான். சரி மேற்கொண்டும் இரண்டு நாள்கள் தானே என்ற தேறுதலில் பல்லைக் கடித்துக் கொண்டு கொழும்பை வட்டமிட்டான்.

முன் அறையிலிருக்கும் பேசும்பட ரஸிகன் சினிமாப் பாட்டு ஒன்றை 'விசில்' அடிக்க ஆரம்பித்த பின்னர் அதனைப் பாடவுஞ் செய்தான். சாரீரம் பிழையில்லை. இருப்பினும், தன்னை ஒரு கிட்டப்பாவுக்கும் அப்பன் என்ற கற்பிதத்திலே பாட்டின் சொற்களை ரப்பராக இழுத்தது பெரியசாமிக்குப் பிடிக்கவில்லை.

பிடிக்கிறதோ இல்லையோ, பரமசிவமும் தோழர் பாண்டியனும் வரும் வரையிலும் அந்தப் பாட்டுக் கச்சேரியைச் சகிக்க வேண்டியும் இருந்தது.

கொழும்பிலே தங்கிய நாள்களிலே, ஓய்வு நேரங்களி லெல்லாம் தோழர் வாசிக்கும் புத்தகங்களையும் சஞ்சிகை களையும் வாசிப்பதைப் பெரியசாமி வழக்கமாக்கிக் கொண்டான். சிறுகதை—நாவல்களைப் போல அவை வாசிப்பதற்கு அவ்வளவு சுவாரஸ்யமானவையாக இல்லை ஆனால் அவற்றை வாசிக்கும் பொழுது புதிய உண்மைகள்

சிலவற்றைக் கற்றுக் கொள்வதான ஆர்வம் மேலோங்கியே வருகின்றது. தோழர் எட்டாம் வகுப்புக் கூடப் பாஸ் செய்யவில்லை என்ற செய்தியைப் பெரியசாமியால் நம்ப முடியவில்லை. தன்னைப் பார்க்கிலும் தோழருக்கு நிரம்பிய விஷயஞானம் உண்டு என்று பெரியசாமி நியாயமாகவே நம்பினான்.

தோழர், நேற்றுத் தான் கொண்டு வந்து வைத்திருந்த பத்திரிகை ஒன்றினை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். தம்முடைய நூல்கள் எவற்றையும் அநுமதியின்றி வாசிக்கலாம் என்ற உரிமையைத் தோழர் பெரியசாமிக்கு வழங்கியிருந்தார்.

இந்தோ—சீன நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடைபெற்ற போர் பற்றிய வரலாறு ஒரு கட்டுரையிலே எழுதப்பட்டிருந்தது. கலப்பற்ற தேசிய உணர்வு, ஏகாதிபத்தியத்தின் மிலேச்ச ராணுவ பலத்தினை முறியடித்தே தீரும் என அந்தக் கட்டுரையாளர் தமது ஆருடத்தையும் எழுதியிருந்தார். ஆருடம் பொய்க்கவில்லை என்பதற்குப் பெரியசாமி ஒரு சாட்சி!

முன் அறையிலிருந்த பேசும்பட ரஸிகன் தனது பாட்டுக் கச்சேரியை நிறுத்தி விட்டான். இப்பொழுது தனது சுருள் சுருளான கேசத்தினை வாரிக் கொண்டிருந்தான். இப்படி அவன் 'சலூன்' வேலைகள் சிலவற்றை மேற்கொண்டால் வெளியே புறப்பட ஆயத்தப்படுத்துகின்றான் என்பதுதான் அர்த்தம்.

பெரியசாமி சற்றும் எதிர்பார்க்காத ஒரு வேளையிலே தோழர் அறைக்குள் வந்தார். பெரியசாமியைப் பார்த்துத் தோழர் பெருமூச்சு விட்டார். வழக்கமான உற்சாகத்தையும் குறும்புத் தனத்தையும் அவருடைய முகம் இழந்திருப்பதைப் பெரியசாமி அவதானிக்கத் தவறவில்லை. தோழரும் பரமசிவமும் ஒன்றாகத் திரும்பலாம்

என்றே அவன் எதிர்பார்த்திருந்தான். தோழர் தனியே வந்து நின்றது அவனுக்குப் பெரிய ஏமாற்றத்தைத் தந்தது. ''எங்க பரமசிவ அண்ணாச்சியக் காணல்ல...'' என்று பெரியசாமி தோழரைக் கேட்டான். தோழர் பெரியசாமியின் கண்களை உற்றுப் பார்ப்பதுபோலப் பார்த்தான்.

அமைதி நிலவியது. தன்னுள் படபடக்கும் நெஞ்சுத் துடிப்பைப் பெரியசாமி துல்லியமாகக் கேட்டான் தோழர் மெதுவாகப் பெரியசாமியின் பக்கமாக வந்தார். முன்னறையில் நின்று சிகையலங்காரத்தில் ஈடுபட்ட பேசும்பட ரஸிகனுக்குக் கேட்காத குரலிலே தோழர் சொன்னார்: 'பரமசிவத்தைப் போலீஸார் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள்!'

'தான் கேட்ட வார்த்தைகள் பொய்யாக இருக்கக் கூடாதா' என்பதுதான் பெரியசாமியின் முதலாவது பிரதிபலிப்பாக இருந்தது. பரமசிவத்தைப் போன்ற ஒரு நல்லவனிடம் போலீஸாருக்கு எவ்வித அலுவலும் இருக்க முடியாது என்றே அவன் நம்பினான்.

## 3

பெரட்டுக் களத்திலே பெண்கள் கொழுந்துக் கூடைகளுடன் வரிசையாக நிற்கின்றார்கள். மரகதப் பவுண் விளைச்சலிலே இவர்களுடைய உழைப்பின் பங்களிப்பு மகத்தானது. மென்மைக்குப் பெண் எனும் உருவத்தை ஆண்டவன் கொடுத்திருக்கிறான் என்ற கற்பனை காவியமயமானது. சத்திய உழைப்பிற்குத் தங்களைப் பலிப் பொருளகளாய் நியமித்துள்ள இவர்களைப் பார்க்கும் பொழுது உழைப்பிற்கு ஓர் உருவங் கொடுப்பதற்காகத் தான் இந்தப் பெணகளை அவன் படைத்தான், என்று எணணுதல் மிகவும் யதார்த்தமானதாகவுந் தோன்றுகின்றது.

கதைகளிலே வரும் நாயகியர்கள் அழகிகளாக இருத்தல் வேண்டும் என்ற நியதிக்காக, மரகதத்தின் அழகு இங்கு பிரஸ்தாபிக்கப்படவில்லை. நாகரிகப் பூச்சுகளினாலே சோரம் போகாத கிராமிய அழகு அவளிடம் கொள்ளை. முகத்தின் நேர்பாதியை அடைத்திருக்கும் அந்த வட்டக் கருவிழிகளையும், பெண்ணின் தன கலசங்கள் எந்த அளவிலும் உருவத்திலும் இருந்தால் அழகு திமிர்க்கும் என்பதற்கு இலக்கணம் கற்பித்துச் சோபிதஞ் சேர்க்கும் பாங்கத்தையும், காட்டு ரோஜாக்களுக்கு அலையும் சினிமாக்காரர்கள் பார்க்க நேர்ந்தால், ஓர் அதியற்புத அழகி இந்தத் தோட்டத்திலே தன் அழகினை வீணே கரைத்துக் கொண்டிருக்கிறாளே என மனம் நோவார்கள்.

இன்று எந்த மலைக்குக் கொழுந்து பறிக்கக் கணக்கப்பிள்ளை அனுப்பப்போகின்றாரோ என்ற எண்ணமே அந்தப் பெண்களின் மனங்களிலே எழுந்து சதுராடுகின்றது. 'இன்னைக்கு மட்டக்கொழுந்து மலைக்கு அனுப்பினால் நல்லது' என்ற எண்ணம் மரகதத்தின் மனத்திலே அரும்பு கூட்டுகின்றது. வசதியை எதிர்பார்த்து முளைக்கும் ஆசைகள். ஏனெனில், மட்டக்கொழுந்துமலை அவள் லயத்திற்குப் பக்கத்தில் இருக்கிறது. அடுத்தது தன்னையான மலை. வரக்கட்டு எதுவும் இல்லை. இவை ஆசைகளே. கணக்கப்பிள்ளை நியமிக்கும் இடத்திற்குத் தானே அவர்கள் போயாக வேண்டும்.

மரகதத்தின் மனத்திலே, இலேசாகத் தன் வயிற்றுச் சுமை பற்றிய எண்ணமும் ஊறுகின்றது. இந்த எண்ணம் இன்பமானதா? அல்லவா; என்று இனங்காண முடியாத ஒரு மயக்கம். அவள் குளியாமல் நின்று மூன்று மாதமா கின்றது. ஏழு மாதம் தாண்டினாற்றான் ஏதாவது சலுகை கேட்கலாம் என்பதை அவள் அறிவாள்.

முதலாம் நம்பர் மலைக்குப் போகும்படி கணக்கப் பிள்ளையின் கட்டளை பிறக்கின்றது. மரகதம் உட்பட

இருபது பெண்கள் வரை முதலாம் நம்பர் மலையை நோக்கி நடக்கின்றார்கள். தலையின் பின்னாலே தொங்கும் கூடைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வதாகத் தோன்றும் ஒரு விரைவினைத் தமது நடைக்குச் சேர்த்து முதலாம் நம்பர் மலையை அடைகின்றார்கள்.

மூதலாம் நம்பர் மலைக்கு இவர்களுக்கு முன்னரே சடையன் கங்காணி வந்து சேர்ந்துவிட்டார். கையிலே கம்புத்தடியும் கவ்வாத்துக் கத்தியுமாகத் தோட்டத் தொழிலாளர் மத்தியிலே தான் விசேஷ இனம் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றார். ஆண்டவன் கங்காணிமார் களுக்கு மூன்று கைகளைப் படைக்கவில்லை என்ற எந்த மனக்குறையும் இன்றி, மடக்கப்பட்ட குடை தோளின் பின்புறத்திலே தொங்கிக் கொண்டிருக்கின்றது. தலையிலே அவர் கட்டியுள்ள முண்டாசு அவருடைய அதிகார தோரணைக்கு ஒரு தத்துவத்தினைச் சேர்க்கின்றது. வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுக் குதப்பியபடி, பெரட்டுக் களத்திலிருந்து வரும் பெண்களை மறித்து நிறுத்துபவரைப் போலக் காட்சியளிக்கின்றார்.

"மீனாச்சி, தையிலம் என்னா அங்க கத? இரண்டேக்கர் தொங்கல்—அந்தச் சவுக்கு மரத்திலிருந்து நிரை பிடியுங்க... இன்னைக்கு இந்த மலையப் பகலுக்குள்ள முடிச்சி, எட்டேக்கருக்குப் போகனும்·வெரசுபடுத்துங்க...' என்று சடையன் கங்காணி, போர்க்களத்திலே போர்வீரர் களுக்குக் கட்டளையிடும் தலைவனின் கம்பீரத்துடன், கட்டளை பிறப்பிக்கின்றார்.

எல்லாப் பெண்களும் சவுக்கு மரத்துத் தொங்கலில் இருந்து தங்கள் தங்கள் நிரையிலிருந்து கொழுந்தைப் பறிக்கத் துவங்கினார்கள். சில பெண்கள் கொழுந்தைப் பறித்துக் கூடையிலே போட்டுக்கொள்ளுகின்றார்கள். வேறு சில பெண்கள் கூடையை ரோட்டிலே வைத்துவிட்டு, கொங்கானித்துணியைப் பணித்து, இடையின் இரு பக்கமும்

சொருகியவாறு, கொழுந்தைப் பறித்து அதிலே போடுகின்றார்கள்.

தேயிலை மரங்களிலே வெடித்துப் பரவியிருக்கும் தளிர்கள், இரண்டு இலைகளும் அதன் நடுவில் உயிர்ப்பு வைக்கும் இலைக் கன்னியும், இவற்றை அந்தப் பெண்களின் கைகள் ஓர் எந்திர வேகத்திலே பறிக்கின்றன. எந்திர வேகம் என்பது விரைவினைச் சுட்டுவதற்கு மட்டுந்தான். மற்றும்படி கொழுந்து பறிக்கும் பொழுது அந்தப் பெண்களுடைய அங்க அசைவுகளிலே நிச்சயமாக ஒரு கலைத்துவம் கோலங்காட்டி மிளிர்கின்றது.

' மரத்த விட்டுட்டு வந்திடாதீங்க...''

''முத்தக் காம்ப எடுக்காதீங்க!''

''முத்தக் காம்பு ஒடச்சிப் போடுங்க!''

என்று சடையன் கங்காணி, தான் அங்கே நின்று அவர்கள் செய்யும் வேலையை மேற்பார்வை செய்வதை ஞாபகம் ஊட்டும் ஒரு பாங்கத்திலே, கட்டளையிட்டுக் கொண்டிருக்கின்றான். இத்தகைய சத்தங்களினாலே அவர்களுடைய சுறுசுறுப்பு ஓயாதிருக்கும்படி பார்த்துக் கொள்ளலாம் என்று, தன் மயமான ஒரு பற்றுதலினாலே சடையன் நினைத்துக் கொள்ளுதல் அவர் சுபாவம்.

பதினொரு மணியளவில், அந்த மலையிலே கொழுந்து பறித்து முடியும் நிலையில், மரகதமும் இன்னும் சில பெண்களும் ரோட்டிலே இறங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதனைப் பார்த்த சடையன் கங்காணி வேலையை ஒரு குத்து மதிப்பீடு செய்பவரைப் போலப் பார்க்கின்றார். சில பெண்கள் பின்தங்கிய நிலையில் தங்கள் நிரையில் நிற்பது அவருடைய கழுகுக் கண்களுக்குப் படாமலில்லை

நிரையை முடித்து ரோட்டிற்கு வந்துள்ள பெண்களை நோக்கி, ''எதுத்து நிரை பிடிச்சி மலைய முடிச்சிட்டு ரோட்டுக்கு வாங்க...'' என்று சடையன் கங்காணி சத்தம் போடுகின்றான்.

எதிர்த்து நிரை பிடித்து, கொழுந்து பறித்து, மலையை முடித்தாகி விட்டது!

எல்லாப் பெண்களும் ரோட்டிற்கு வந்துவிட்டார்கள். தங்கள் தங்கள் கூடைகளைத் தலையின் பின்புறம் தொங்கும் வகையிலே மாட்டிக்கொண்டு, ஓர் அமைதி பயின்று கொழுந்து மடுவத்தை நோக்கிய பயணத்தினை இயற்றத் தொடங்கினார்கள்.

வழியில் மலைச் சரிவில் ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரைக் கண்டதும், மரகதம் கூடையை இறக்கி வைத்துவிட்டு முகத்தைக் கழுவிக் கொள்ளுகின்றாள். உழைப்பினால் முகத்திலே சுரந்துவிட்ட வியர்வைப் பசையைக் குளிர்ந்த நீரிலே கழுவிக் கொள்வது ஓர் உற்சாகத்தினைத் தருகின்றது. இளவயதுப் பெண்கள் சிலரும் மரகதத்தைப் பின்பற்றுகின்றார்கள்.

முகத்தைக் கழுவி நிமிர்ந்த மரகதத்தின் பார்வையிலே மேட்டிலுள்ள சுடுகாட்டு மாமரம் தென்படுகின்றது. அந்த மரத்திலே மாங்காய்கள் காய்த்துத் தொங்குகின்றன. அவற்றைக் கண்டதுமே மரகதத்தின் வாய் ஊறுகின்றது. உடனேயே ஒரு மாங்காயைக் கடித்துத் தின்ன வேண்டும் என்ற ஓர் ஆசை விஸ்வரூபம் எடுக்கின்றது. ஆசை வெட்கம் அறியாது என்பார்கள். மரகதம் தனக்குப் பக்கத்தில் நிற்கும் தையலம்மையைப் பார்த்து, ''தையிலம்ம அந்தச் சுடுகாட்டு மரத்தப் பாத்தியா? சரியாக் காய்ச்சிருக்கு...'' என்று அவளுடைய செவிகளிலே முணு முணுக்கிறாள்.

''அது ஒரே புளி...'' என்று தைலம்மை கூறுகின்றாள். அவளுக்கும் இரகசியக் குரலுக்கும் பிறவியிலிருந்தே ஜன்மப் பகை.

காமச்சிக் கிழவிக்கு எப்பொழுதும் செவி கூர்மை. அவள் அர்த்த புஷ்டியுடன் சிரித்துக் கொள்ளுகின்றாள்.

''புளிப்பா இருந்தா என்னடி? அவ மாசக்காரி. அது தான் வாய் ஊறுது. பணிஞ்ச வாதுல உள்ள காயில இரண்ட அடிச்சுக் குடுங்கடி...'' என்று காமச்சிக் கிழவி கூறுகின்றாள். தான் இழந்துவிட்ட பருவத்தினை, இந்தச் சிறுசுகள் அநுபவித்துக் கொண்டிருக்கின்றனவே என்று எந்தக் குறையும் அவளுக்குக் கிடையாது.

சடையன் கங்காணியினுடைய பார்வை தங்களை மோப்பமிடவில்லை என்பதை நிதானித்த பின்னர், தையலம்மையும் காளியும் கம்புகள் சகிதம் சுடுகாட்டு மாமரத்திலே தொடுத்த போரின் விளைவாக இரண்டு மாங்காய்கள் வீழ்த்தப்படுகின்றன.

மரகதம் ஒரு மாங்காயைத் தன்னுடைய மடியிலே பக்குவப் படுத்தி வைத்துக் கொண்டு, சிறிய காயைக் கடிக்கின்றாள். மாங்காயின் புளிப்பிலே பற்கள் கூசி, முகம் ஒரு கணம் சுருங்கிக் கோணி ஒரு மாறுதல் காட்டிய போதிலும், புளிப்பிலே தன் நா கொண்டு விட்ட ஒரு தாகத்தின் பிரீதியிலே முகம் மலர்கின்றது

பெண்கள் கூடைகளை மறுபடி தூக்கித் தொங்கவிட்டுக் கொண்டு கொழுந்து மடுவத்தை வந்தடைகின்றார்கள்.

கூடையிலே இருந்த கொழுந்தைத் துணியிலே தட்டிக் காம்புகளையும் முத்தல் இலைகளையும் கந்தப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது கணக்கப்பிள்ளை வந்து சேர்கின்றார்.

கொழுந்து நிறுத்துப் பொறுப்பேற்கப் பட்டுச் சாக்குகளிலே கட்டப்படுகின்றது.

இனி, பின்னேரம் ஒரு மணிக்கு எட்டேக்கருக்குக் கொழுந்து பறிக்கப் போக வேண்டும். காலையிலே சுட்டு வைத்த ரொட்டித் துண்டு மரகதத்தின் வரவை நோக்கிக் காம்பராவிலே காத்திருக்கின்றது.

லயத்தை நோக்கி நடக்க ஆரம்பித்த மரகதத்தைக் கணக்கப்பிள்ளையின் குரல் வலித்துத் திருப்புகின்றது. மரகதத்திற்கு வந்த கடிதத்தினை அவளுக்குக் கொடுக்கின்றார். தோட்டத்து பெண்களுக்கு கடிதங்கள் வருவதில்லை. அவர்களில் அநேகருக்கு படிப்பு வாசனையே இல்லை. அந்தக் கல்விச் சம்பத்து அவர்களுக்குத் தேவையற்ற ஒன்று என்பது சாதாரண மாமூல். ஆனால், மரகதம் ஐந்தாம் வகுப்பு வரையிலும் படித்திருக்கின்றாள். அவளுடைய அழகுடன் இந்தப் படிப்புத் தகைமையுஞ் சேர்ந்துகொள்ளவே, கொழும்பு மாப்பிள்ளையான பரமசிவம் அவள் கழுத்திலே மூன்று முடிச்சைக் கட்டினான்.

மரகதத்திற்குக் கடிதம் வருவதென்றால், அது அவள் கணவன் பரமசிவத்திடம் இருந்துதான் வந்திருக்க வேண்டும். கவரைக்கிழித்து கடிதத்தை ஒவ்வொரு சொல்லாக எழுத்துக்கூட்டி வாசித்து, பொருளை விளங்கிக் கொள்ளுகின்றாள்.

வேலை தேடி வந்திருக்கும் பெரியசாமி தன்னுடன் தங்கியிருக்கும் செய்தியைக் குறிப்பிட்டு, அவனுக்கு வேலை கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறு உண்டு என்று தெரிவித்திருந்தான். மரகதம் குளிக்காமல் இருப்பதை அறிந்து தான் சொர்க்க லோகத்திலே மிதந்து கொண்டிருப்பதாகவும் எழுதியிருந்தான். திராவிடர் கழக எழுத்தாளர் ஒருவர், தமிழக மந்திரி சபையிலே இடம்

பெற்று பூச்சி மருந்து தெளித்தல் என்ற 'பெருஞ் சேவையிலே' ஈடுபடுவதற்கு முன்னர், எழுதிய பழைய கதைப் புத்தகம் ஒன்றின் துணையுடன் மரகதத்தின் அழகையும் அவன் வர்ணித்திருந்தான். அந்த வர்ணனையை வாசிக்கும்பொழுது பரமசிவத்துடன் நடத்திய கல்யாண வாழ்க்கையில் சில காட்சிகள் அவளுடைய மனத்திலே பளிச்சிட்டு மறைகின்றன. இந்த நினைவுகளுடன் கூடவே பெரியசாமியின் நினைவும் அவளுடைய மனக்கோடியிலே தலையைத் தூக்குகின்றது. மறுகணம், குலமகள் இப்படி நினைத்தல் முறையல்ல என்ற மரபு எண்ணம் வரவே, அவள் உள்ளம் நொந்து கொள்ளுகின்றது.

கடிதத்தின் வாசகங்களிலே சிரத்தை ஊன்றியபடி நடந்துகொண்டிருந்த மரகதம் எதிரிலே அப்புகாமி வந்து கொண்டிருப்பதை அவதானிக்கவில்லை. மிகச் சமீபமாக வந்தபொழுதுதான் பார்த்தாள்.

அப்புகாமி அத்தோட்டத்திலே ஒரு தொழிலாளர் லைவர். முரட்டுச் சுபாவம் உள்ளவன். இவற்றை அறிந்து வைத்திருக்கும் மரகதம் மரியாதைக்காக ரோட்டிலிருந்து விலகி தேயிலைச் செடிப்பக்கமாக ஒதுங்கி வழிவிடு கின்றாள்.

"கொழும்பிலிருந்து லெட்டர்?" என்று மரகதத்தின் கையிலிருந்த தபாலைப் பார்த்து அப்புகாமி கேட்டான். இந்தச் சாட்டினை வைத்து மரகதத்துடன் கொஞ்சம் பேசுவதற்கு அப்புகாமிக்கு ஆசைதான். மரகதம் பதில் எதுவுங் கூறாது, உதட்டுச் சிரிப்பு ஒன்றினால் மழுப்பி விடவே, அப்புகாமி அந்த இடத்திலே அதிக நேரம் நிற்கவில்லை.

லயத்திற்கு வரும் மலையிலிருந்து இறங்கிக் கொண் டிருந்த மரகதத்திற்கு ஸ்தோப்பிலே அமர்ந்திருக்கும்

கோமதியினுடைய உருவம் தெரிகின்றது... மரகதம் வருவதை அவதானிக்காது, பிரம்புக் கூடை பின்னுவதிலே கோமதி சிரத்தை ஊன்றி இருக்கின்றாள். கால் ஊனம் காரணமாக அவள் பெயர் பதியப்படவேயில்லை. தான் தன் குடும்பத்திற்குப் பாரமாக இருப்பதான மனக் குறையிலே அவள் உள்ளம் நொந்து கொண்டிருந்தாள். தங்கையிடம் குடிகொண்டிருந்த இந்த மனக் குறையை மாணவனாக இருந்த காலத்திலேயே பெரியசாமி இனங் கண்டு கொண்டான்.

அவன் தனது பாடசாலையிலே கைவேலை கற்பிக்கும் ஆசிர்வாதத்திடம் பிரம்பிலே கூடை பின்னும் வேலையை நன்கு கற்றுக்கொண்டு, அதனைத் தன் தங்கைக்கும் பழக்கிக் கொடுத்துவிட்டான். இப்பொழுதெல்லாம் கோமதி பின்னும் கூடைகளுக்கு தோட்டத்திலே ஒரு தனி மதிப்பு இருந்தது. அவற்றை விற்பதன் மூலம் அவள் கணிசமான வருவாயையும் பெறலானாள்.

கொழும்புக்குப் பயணம் வைப்பதற்கு முன்னர், பெரியசாமி தன் தங்கையின் தேவைக்கும் அதிகமான பிரம்பினை வெட்டிக் கொண்டுவந்து போட்டிருந்தான்.

இப்பொழுது கோமதி உரக் கூடை ஒன்றினைப் பின்னுவதிலே கவனஞ் செலுத்தியிருந்தாள். யாரோ தன்னை உற்று நோக்குவதான ஓர் உள்ளுணர்வு இடித்துக் கொள்ளவே, நிமிர்ந்து பார்த்தாள். மரகதம் எதிரிலே சிரித்தபடி நின்றாள். அவள் கையிலே கடிதம் ஒன்று காணப்படவே, அந்தக் கடிதம் தன் அண்ணன் பெரியசாமி எழுதியதாக இருக்கக் கூடாதா என்ற ஆசை எழுந்தது. மறுகணம், அது மரகதத்தின் கணவன் பரமசிவம் எழுதிய தாக இருக்கலாம் என்பதை நிதானித்துக் கொள்ளுகின்றாள்.

"கோமதி ஒன் அண்ணன் கொழும்பிலே சௌக்கியமாம்...இவரு கூடத்தான் அவர் தங்கியிருக்கிறாராம்..." என்று மரகதம் சமாச்சாரத்தைச் சொன்னாள்.

"ஏதாவது வேலை கிடைக்கிற வாய்ப்பு இருக்காமா?" என்று கோமதி ஆசை பொங்கக் கேட்டாள்.

"கிடைக்கும்போல இருக்காம்..." என்று மரகதம் சொன்னபோது, செவிகளிலேதேன்பாய்ந்தது போன்றிருந்து கோமதிக்கு. இந்த வருஷம் மாரியாத்தாவுக்குத் தோட்டத்தில் கரகம் பாலிக்கும்போது தன் கையால் மாவிளக்குப் போடுவது போன்ற ஒரு குதூகலம் அவள் உள்ளத்திலே பளிச்சிட்டு மறைந்தது

இதை வெளியிற் காட்டிக்கொள்ளாது, "வேற என்ன புதினமாம்?" என்று வெறுமனே கேட்டாள் கோமதி.

"நாளானைக்கு ஒங்க அண்ணாவும் நம்ம இவரும் ஒண்ணாத்தான் வருவாங்க போல இருக்கு..." என்று கூறிய மரகதம், கோமதி உற்று நோக்கிய திசையிலே திரும்பிப் பார்த்தாள். பெருமாள் வந்து கொண்டிருப்பது தெரிகின்றது மேற் கொண்டு பேச்சை வளர்க்காது, மரகதம் தன் காம்பராவை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

"மாரியாத்தா! தாயே...எங்களக் கைவிட்டிடாதே...." என்று பக்தி பூர்வமாகக் கோமதி நினைத்துக் கொண்டே கூடை பின்னுவதில் ஆழ்ந்தாள்.

## 4

கோமதி கூடை பின்னுவதில் ஆழ்ந்திருந்தாள். பெரிய சாமி வந்ததை அவள் கவனிக்கவில்லை.

'இவ்வளவு நிறைந்த அழகினைத் தங்கைக்குக் கொடுத்த ஆண்டவன், அவளுடைய இடக்காலினை ஊனமாகப் படைத்து வஞ்சித்துவிட்டானே' என்ற நினைவு தன் நெஞ்சினை வருத்த, கூடை பின்னிக் கொண்டிருக்கும் அவளைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டே நின்றான். இந்த மௌனத்தைத் தானே பொறுக்க இயலாத அவதியுடன், ''தங்கச்சி'' என்று பாசத்தைக் குரலிலே குழைத்து அழைத்தான்.

நிமிர்ந்து பார்த்த கோமதி தன் எதிரிலே பெரியசாமி நிற்பதைப் பார்த்து மகிழ்ச்சியிலே கண் மலர்ந்தாள்.

''வா அண்ணா...இப்பதான் வாரீயா?'' என்று கோமதி வரவேற்றாள்.

கையிலிருந்த துணி'பேக்'கைச் சுவரிலே அறைந்திருந்த ஆணியில் மாட்டியபடி, ''ஆமா...இப்பதான் வந்து கொண் டிருக்கிறேன்'' என்றான்.

''இப்பகூட ஒன்னத்தான் நெனச்சேன். அதுக்குள்ள வந்திட்ட...'' தன் மகிழ்ச்சியை அடக்கமுடியாத ஆரவாரத்துடன் அழகுச் சிரிப்பினை உதிர்த்தாள்.

புட்டுவம் ஒன்றை எடுத்துப்போட்டு, அதிலே உட்கார்ந்த படி, ''என்ன நெனச்சயா? எதுக்கு?'' என்று கேட்டான்.

அரையும் குறையுமாக பின்னப்பட்டிருந்த கூடையைக் காம்பிராவுக்குள் எடுத்துச் சென்று வைத்தபடி, ''காலத்தால அப்பா வேலைக்காட்டுக்குப் போறதுக்கு முன்னாலேகூட ஒன்னபத்தித்தான் ஏங்கிட்ட கதச்சிட்டு போச்சி...'' என்று கூறியவாறு மீண்டும் ஸ்தோப்பிலே வந்து நின்றாள்.

''என்னா கதைச்சிச்சி அப்பா என்ன பத்தி?...''

''இந்தத் தடவை ஒனக்கு எப்படியும் வேல கெடைக்கணும்னுதான் சொல்லிச்சி...''

"ஆமா...ஆமா....இந்த முறை கட்டாயம் வேல..."

"வேல கெடச்சிரிச்சா அண்ணா...அதுதானே பார்த்தேன் நாம கும்பிடுற மாரியாத்தா லேசா என்ன?... நம்ம தோட்டத்து மாரியாத்தா சக்தி உள்ளது அண்ணா. நான் நேந்துக்கிட்ட மாதிரி என் அண்ணனுக்கு வேல கெடச்சிரிச்சி...அப்பா சொன்ன மாதிரி ஆண்டவன் நம்ம குடும்பத்தக் கண் தெறந்து பார்த்திட்டான்...." என்று குழந்தையைப் போன்று ஆரவாரத்துடன் ஜோமதி கூறினாள்.

அந்த மகிழ்ச்சியைத் தன் தங்கை இழப்பதை அவன் விரும்பவில்லை. ஆனால், உண்மையை அவள் அறிந்து கொள்ளவேண்டும் என்ற அக்கறையும் அவனுக்கு இருந்தது.

"ஆண்டவன் என்னைக்கமா கண்ண தொறந்து பார்த்தான்? அப்படியே கண்ணத் தொறந்தாலும் நம்ம குடும்பத்தையா பார்ப்பான்?" என்று சுருதியற்ற மொட்டை யான குரலிலே சொன்னான்.

அதிர்ச்சியைத் தாங்க மாட்டாதவளைப்போல, "என்னண்ணா அப்பிடிச் சொல்லுற..." என்று இழுத்தாப்போல நிறுத்தினாள்.

தன் தங்கைக்குச் சில உண்மைகளைச் சொல்ல வேண்டும் என்று பெரியசாமி நிச்சயித்துக் கொண்டான்.

'நாம தொழிலாளர். பாட்டாளி வர்க்கம். நம்மகிட்ட உள்ள ஒரேயொரு மூலதனம் உழைப்புச் சக்தி தான். இந்த உழைப்புச் சக்தியை உற்பத்திக்கு உபயோகிக்கக் கூடிய அரசாங்கம் ஆட்சிக்கு வரலேல்ல...இதனால பாட்டாளி வர்க்கம் நடுத்தெரு நாராயணர்களாக அலையும் அவலத்தைப் பார்க்கிறம்...! பாட்டாளி வர்க்கம் வாழ்க!' என்று கோஷம் போடும் அரசியல்வாதிகள் கூட, தோட்டத் தொழிலாளரான

நம்மைக் கண்ணைத் தொறந்து பார்க்காதபோது ஆண்டவனா கண்ணத் தொறந்து பார்க்கப் போறான்?''

''நான் என்னமோ சொல்லிக்கிட்டிருக்கேன்...நீங்க ஏதோ....''

''நான் ஒண்ணும் சொல்லல்ல...நம்மளக் கண்தொறந்து பார்க்க வேண்டியவங்களே பார்க்காதப்போ ஆண்டவன் எங்க பார்க்கப் போறாருனு சொன்னே...சரி கொஞ்சம் தண்ணி கொண்டா... அதையாவது குடிப்பம்...''

''தேத்தண்ணி தரவா அண்ணா...''

''வேணாம்மா...பச்சைத் தண்ணியே கொண்டா...''

கோமதி தண்ணி கொண்டு வருவதற்காகக் காம்பராவுக்குள் நுழைந்தாள்.

''ஆண்டவன் கண்ணைத் தொறப்பானோ?, இலக்கக் காலதேவன்தான் கண்ணைத் தொறப்பானோ? தோழர் பாண்டியன் சொல்றதுதான் சரி. தேர்தலிலே நின்று 'பாட்டாளி வாழ்க!' என்று கோஷம் போடுற அரசியல்வாதிகளே பதவி கெடச்சவுடனே எப்படி மாறிடுறாங்க...நம்ம நாட்டில கறுப்புச் சந்தை வியாபாரங்கூட அரசியலைப் போல அவ்வளவு சாழியல்ல....'' என்று பெரியசாமி தனக்குத்தானே பேசும் ஒரு குரலிலே கூறினான்.

தண்ணீர் லோட்டாவைக் கொண்டுவந்து பெரியசாமியிடம் கொடுத்துக் கொண்டே, ''என்னா அண்ணா பேசினீங்க...'' என்று கோமதி கேட்டாள்.

''ஏதோ பேசினேன்'' என்று உணர்ச்சியற்ற குரலிலே சொல்லி, தண்ணீரை ஒரே மடக்காகக் குடித்து லோட்டாவை நிலத்தில் வைத்தான்.

''அப்ப ஒங்களுக்கு வேல கெடக்கலையா?'' என்று கோமதி கேட்டாள். உள்ளே பீறிட்டெழுந்த அழுகையை

மறைக்கக் கோமதி எடுத்துக் கொண்ட பிரயத்தனத்தினை யார் அறிவார்?

"கெடைக்கல அம்மா...நம்ம அப்பா எவ்வளவு கஷ்டத்துக்கு மத்தியில என்னப் படிக்க வைச்சிச்சினு ஒனக்குத்தான் தெரியுமே...கோமதி. நான் ஜீ. ஸீ. ஈ. பாஸ் பண்ணி ரண்டு வருஷமாயிரிச்சி. வேல கெடைக்கிறாப்புல இல்ல... நானுந்தான் எங்க எங்கேயோ எல்லாம் வேலைக்கு எழுதிப்பார்க்கிறேன். அலைச்சலும் பணச்செலவும்... சஞ்சலமுந்தான் மிச்சம் கொழும்பு டவுன சுத்திட்டேன். வேலை கெடச்ச பாடுதான் இல்ல..." என்று கூறிய பெரிய சாமி, பேச்சை மாற்றும் முகமாக, "கொழும் பூரில ஒரு அதிசயம் ஒனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்

"நீங்கதான் அந்த அதிசியத்தைச் சொல்லல்லே அண்ணா..."

"மிந்திப் பணிய கணக்கில இருந்தாரே பழனிசாமிக் கணக்குப்பிள்ளை..."

"ஆமா... நம்ம கொழுந்து கணக்கப்பிள்ளைதானே..."

"அவருடைய மகன் ராமசாமி பாரு..."

"அட அந்தக் கொழும்புல வேல பாக்குதுனு சொல்றாங்களே..."

"அவன்தான்.... அவன் ஒரு கம்பெனில வேல பார்க்கிறான். அவன்கிட்ட நம்ப நிலைய சொல்லி உதவி — அதுதான் வேல— கேட்கலாமுணு போனேன... ஆளோ மாறி இருக்கான். தாவாக் கொட்டையில ஒரு தாடியும் கண்ணாடியுமா இருக்கான்.... நான் போய், 'பிறதர்! நீங்க நம்ம பழனிசாமி கணக்கப்பிள்ள ஐயா மகன் ராமசாமி தானே?" என்று கேட்டப்போ, 'நோ... நோ... ஐயேம் ராம்சன்' என்னிட்டான்..."

"அப்ப நீ வேற யாரையோ பார்த்துட்டு ராமசாமினு நினைச்சி கேட்டிருக்கே..."

"சரியா போச்சி! எனக்குத் தெரியாது? நம்ம தோட்டத்தில இருந்த பயல்! தோட்டத்து ஸ்கூல்ல ஒண்ணாப் படிச்சோம்..."

தந்தை பெருமாள் வருவதைக் கண்டதும், பெரியசாமி தன்னுடைய பேச்சைச் சடுதியாக நிறுத்திக் கொண்டான். அவருடன் என்ன பேசுவது என்று அறியாது பெரியசாமி மௌனமானான். இந்த மௌனத்தைக் கலைத்துச் சகஜ நிலையை உருவாக்கும் எத்தனத்தில், "என்னப்பா, இன்னைக்கு நேரத்தோடயே வந்திட்டியே..." என்று கோமதி கேட்டாள்.

"இன்னைக்கு என்னடானா புதுசா அந்தப் புதுக் காட்டுப் புது ரோட்டு வெட்டிக்கிட்டுப் போறாங்க பாரு. அதுல ஒரு கல்லுப்பாற... அத கல்லு வெடிவச்சி ஒடைக்க காலையிலையெ பெரட்டுல இருந்து கணக்கப்பிள்ள அனுப்பிட்டாரு. என்ன செய்ய? ஏலாதுணு சொல்ல முடியுமா?.... அர நேரம் வேல செஞ்ச தோட, நின்று வேல செய்ய முடியல... ஒரு மாதிரியா இருந்திச்சி... அதுதான் கங்காணிகிட்ட சொல்லிட்டு வந்திட்டேன்... அது சரி, சாமி ஒனக்கு வேல கெடச்சிதா?"

"வேல கெடைக்கலையாம் அப்பா... அதுவும் கொழும்பு டவுனுல வேலைக்கு நாயா அலைஞ்சிட்டு வந்திருக்கு..."

"ஏண்டா சாமி... உன் சிநேகிதன் வேலயிருக்குணு வரச்சொல்லி கடதாசி போட்டிருக்கானுதானே போன..."

"ஆமா அப்பா, அவனுக்குத் தெரிஞ்ச ஒருத்தர் ஒரு கம்பேனியில மேனேஜரா இருக்கிறாரு. அவர் மூலமா எனக்கு வேல வாங்கித்தரலாம் என்கிற நம்பிக்கையிலதான் என்ன வரச் சொல்லி எழுதி இருக்கான்..."

"மேனேஜர பார்த்துப் பேசினிய? என்ன சொன்னாரு..."

"இப்ப தொழிற்சாலையில நிலம சரியா இல்லியாம். ஏற்கனவே தொழில் முடக்கம்...."

"அப்படினா தொழிற்சாலை எல்லாத்தையும் மூடியா போட்டாங்க... தொழிலில ஏண்டா முடக்கம்?..."

"அதுக்குப் பல காரணங்க... கடைசில பார்த்தா எல்லாக் குளறுபடிகளும் அந்நியச் செலவானித் தட்டுப்பாட்டில வந்து நிக்குதுன்னு சொல்றாங்க..."

"நாசமா போச்சி போ.... காச செலவு செஞ்சி கொழும்புக்குப் போய் வந்தது தான் மிச்சம்... அட, சாமி எத்தின கஷ்டத்தில ஒன்ன படிக்க வைச்சேனு ஒனக்குத் தெரியுந்தானே? எப்படியாவது ஒன்ன படிக்க வைச்சி ஆளாக்கி விட்டா நம்ம குடும்பத்து தலையெழுத்தே மாறிடும்முணு நெனைச்சேன்... ஆனா நம்ம தலை யெழுத்த யாராலும் மாத்த முடியாதுனு இப்பதான் தெரிஞ்சிகிட்டேன்... இம்..."

இந்த உரையாடலின் போக்குக் கோமதியின் மனத்தை வருத்தியது.

"அதுக்கு அண்ணா என்னப்பா செய்யிற?..." என்று கோமதி குறுக்கிட்டாள்.

"ஒன் அண்ணனைப் படிக்க வைக்கிறதுக்கு செலவு செஞ்ச காச மட்டும் மொத்தமா சேத்து வைச்சிருந்தாக் கூட நான் ஒரு பெரிய பணக்காரனா இருந்திருப்பேன்..."

"ஏனப்பா மனம் நொந்து பேசுற... எனக்கு வேல கெடைக்காமலா போயிடப் போகுது..." என்று பெரியசாமி மெதுவாகக் கூறினான்.

"ஆமா.... ஆமா... ஒனக்கு வேல கெடக்கிறதுக்குள்ள நான் கட்டலையில போயிடுவேன்... மாரியாயி நீ எப்பவும்

ரோஷக்காரிதான். ஒன் மகன் உழைப்பில சாப்பிடக் கூடாது என்னு போயிட்ட...''

''அப்பா! அண்ணா இப்பதான் வந்தது... அதுக்கிடயில தர்க்கமா? அப்புறமாப் பேசிக் கொள்ளலாம்... இரண்டு பேரும் களைச்சிப் போய் இருக்கீங்க... கைகால கழுவிட்டு சாப்பிடுங்க...'' என்று கோமதி அழைத்தாள்.

அவளுடைய அழைப்பு நியாயமானது என்பதை இருவருமே உணர்ந்தார்கள். பெருமாள் மௌனமாகப் புட்டுவத்திலே அமர்ந்தான். மயான மௌனம் போன்ற நிசப்தம்.

அந்த மௌனத்தைக் கலைக்கப் பெரியசாமி முந்தினான்.

''இவ்வளவு நாளும் உன் கையால வாங்கிச் சாப்பிடாமல் எனக்கு என்னமோ மாதிரி... கொழும்பு ஊர்ல ஓட்டலில் சாப்பிட்டு சாப்பாடே வேணாணு போயிரிச்சி .. சாப்பாடா போடுறாங்க ஓட்டல்களில...''

''ஏண்ணா அப்படிச் சொல்லிட்ட...''

''பின்ன என்னா? ஒரு கடையில சாப்பிடப் போனேனா... கீர வைச்சான் பாரு... பாதி புல்லு... அதுனாலும் பரவாயில்ல... ஒரு கடையில தோசைக்கு சாம்பாருனு எதையோ ஊத்தினான் பாரு அந்தக் கடைக்காரன். என்னாத்தப் போட்டுச் சாம்பாரு வைச்சிருக்கானு அந்தச் சாம்பாரு வாளியில நீந்தித்தான் பார்க்கணும்.... இல்லேனா பத்து சதம் கொடுத்துக் குருவிச் சாத்திரந்தான் பார்க்கணும்...'' என்று பெரியசாமி கூறியதும் கோமதி குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.

சிரிப்பிற்கிடையில், ''ஐயோ அண்ணா!'' என்று கூவியுங் கொண்டாள்

பெரியசாமிக்கும் கோமதிக்கும் இடையில் நிலவும் சகோதர பாசம் பெருமாளுக்கு எப்பொழுதும் பெருமையைத் தந்தது.

அதே கணம், சற்று முன்னர் பெரியசாமியுடன் அந்தக் காட்டமான வார்த்தைகளை உபயோகித்திருக்கக்கூடாது என்ற குற்ற உணர்வும் அவனைப் பற்றிக் கொண்டது.

''கோமதி... எடு சோத்த... இன்னைக்கி நானும் பெரிய சாமியும் ஒண்ணாக் குந்திச் சாப்பிடணும் என்று ஆசையா இருக்கு...'' என்று கூறியபடி, பெருமாள் ஸ்தோப்புக்கு வெளியே இருந்த பீலியை நோக்கி நடந்தான்.

வீட்டிலே வீசும் புயல், பாசம் என்ற கட்டுக்குள்ளே, எவ்வளவு சீக்கிரமாகத் தென்றலாக மாறிவிடுகின்றது என்று பெரியசாமி நினைத்துக் கொண்டான்.

பெருமாள் கைகால் கழுவிக் கொண்டுகாம்பிராவிற்குள் நுழையும் வரை காத்திருந்த பெரியசாமி கைகால்களைக் கழுவிக் கொள்ள ஸ்தோப்புக்கு வெளியே வந்தான்.

அவனையும் அறியாமல் அவனுடைய கண்கள் மரகதம் வாழும் காம்பராப் பக்கம் திரும்பியது. அந்த ஸ்தோப்பு வெறிச்சோடிக் கிடந்தது.

ஒரு நெருப்புக் குருவி மட்டும் குந்தியிருந்தது.

வேறு ஜீவ நடமாட்டமே இல்லை.

தான் கொண்டு வந்திருக்கும் செய்தியை மரகதம் தாங்குவாளா என்று பெரியசாமி நினைத்துப் பார்த்தான்.

அவள்மீது அவனுக்கு என்றுமே ஒரு விசேட பாசம் நிலைத்தே வந்திருக்கின்றது.

பரமசிவத்தின் மனைவியாகவேனும் மரகதம் சீரும் சிறப்புடனும் வாழவேண்டும் என்று அவன் மானசீகமாக வாழ்த்தியும் இருக்கின்றான்.

தோழர் பாண்டியன் ஓடியாடி வேலை செய்கின்றார். அவர் எப்படியும் பரமசிவத்திற்கு நேர்ந்துள்ள சிக்கலைத் தீர்த்து வைப்பார் என்று பெரியசாமி பெரிதும் நம்பினான்.

அந்த நம்பிக்கை மட்டும் இல்லாது போனால்....

அவனுக்கு அதனை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

அதே சமயம். "அண்ணா!" என்று கோமதி காம்பிராவிலிருந்து குரல் கொடுப்பது அவனுடைய செவிகளிலே விழுகின்றது.

தன்னுடைய குடும்பத்தினரிடமிருந்து மறைந்து வாழவேண்டிய புதிய உள்ளம் ஒன்று தன்னுள் உருவாகி வருவதாகப் பெரியசாமி நினைக்கலானான். இந்த நினைவு அவனுக்குத் துன்பத்தையும் தந்தது.

அந்த நெருப்புக் குருவி பறப்பது அவன் பார்வையில் விழுந்தது.

அந்தக் குருவியைப் போன்று பெரியசாமி தன் சிந்தனைகளுக்கும் சுயேட்சை அளித்தான்.

"கோமதி.. சோறு ரெடியா?" என்று கேட்டுக் கொண்டே காம்பராவை நோக்கி நடந்தான்.

## 5

சிவனொளிபாத மலையின் தரிசனம் மீண்டும் விழிகளை அடைத்துக் கொள்ளுகின்றது. 'இதோ வானத்தைத் தொடப்போகின்றேன்' என்னும் ஒரு கம்பீர இறுமாப்பிலே அதன் அழகு மிளிர்கிறது.

காலமெல்லாம் பார்த்தாலும் சலிக்காத அந்தத் தரிசனத்திலிருந்து விழிகளைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு, மரகதம் பீலியை நோக்கி நடக்கின்றாள்.

கொத்துக் கொத்தாக, அழகுத் திட்டுகளாக, மரகதப் பசுமைக்குப் புதியதொரு பொருளியல் அழகு சேர்க்கும் தேயிலைச்செடிகள். அந்தச் செடிகளுக்கு மேலாக குத்திச் சாய்க்கப்பட்ட இராட்சத வேழம் போல, கரும் பாறை ஒன்று கிடக்கின்றது அந்தப் பாறைக்கு அடியிலே, களனி கங்கையிலே சேர்ந்து, ஈற்றில் இந்துசமுத்திரத்திலே சங்கமமாகும் ஓர் அவதியுடன், அன்றேல் ஒருவகை நியதியுடன். அந்தச் சிற்றாறு ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த ஆற்று நீர் தேயிலைச் செடிகளையும் பசளையையும் அரித்துக் கொண்டு செல்வதை ஓரளவு தடுக்கும் முயற்சியில், இடையிடையிலே கல்லுக் கட்டுகள் அமைக்கப் பட்டுள்ளன. இந்தக் கட்டுகளால் அந்தச் சிற்றாறு ஓரளவு கட்டுக்குள் சீராக ஓட வழி அமைக்கப்பட்டுள்ளது. நேர்த்தியான இடத்திலே பீலி பொருத்தப்பட்டிருக்கின்றது. அந்தப் பீலி மூலமாக ஓடிவரும் நீர் ஒரு சிறிய நீர் வீழ்ச்சியைப் போன்று பாய்ந்து வீழ்கின்றது

மரகதம், ஒதுக்குப் புறமாக இருந்த சவுக்கு மரத்தின் மறைவிலே, சேலைகளைந்து பாவாடையை உடுத்திக் கொண்டு,பீலியை நோக்கி வந்து குளிக்கத் தொடங்கினாள். தலைப்பிள்ளைத்தாச்சியின் பூரண லாவண்யத்திலே, மரகதம் புது அழகு சிந்தி, ஓவியர்கள் தவங்கிடக்கும் ஒரு 'மாதிரி'க்கு மானசீகச் சுந்தரமாகப் பீலி நீரிலே குளித்துக் கொண்டிருந்தாள்.

குளிர்ந்த நீரிலே தன் உடலைத் தன்னிச்சையாக ஒப்புக் கொடுத்துச் சோர்வினை அகற்றுவதிலே அவள் மகிழ்ந்தாள்.

★★★

தோழர் பாண்டியனுடைய வாழ்க்கையில் திடீர் மாற்றங்கள் நிகழும் என்பது அவரே எதிர்பாராத ஒன்று.

குடும்பம், காற்கட்டு, வாய்க்கட்டு என்று எந்த உறவுகளும் அவருடைய இலட்சியப் பயணத்திற்குத் தடையாக இருக்கவில்லை. தன் வயிற்றைக் கழுவுவதற்கும்

மற்றவர்கள் மத்தியிலே போலியான கௌரவத்தை நாட்டி, வெள்ளை வேட்டியாக நடமாடுவதற்குமே தனது உத்தியோகம் பயன் படுவதான எண்ணம் வலுப்படுவதாயிற்று.

அரசியல் வகுப்புகளிலே அவர் பெற்றிருந்த அனுபவத்தினாலே வர்க்கச் சமருக்கு இந்நாட்டுப் பாட்டாளிகளைத் தயார் செய்தல்கூட ஓர் புனித இயக்கம் என்று தோழர் பாண்டியன் நினைக்கத் தலைப்பட்டார். உழைப்புக்கு வியர்வை; சோகத்திற்குக் கண்ணீர்; போராட்டத்திற்கு ரத்தம் அழகு சேர்ப்பதாக அவர் கூறுவதை 'பையித்தியம்' என்று சில படு சித்தாந்தவாதிகள் கேலியாக விமர்ச்சித்த போதிலும், ஓர் இயக்கத்திற்காகத் தன்னையே அர்ப்பணிக்கக் கூடிய புண்ணியர் தோழர் பாண்டியன் என்பதை யாரும் ஆட்சேபித்தது கிடையாது. உத்தியோகத்தைத் துறந்து, ஒரு முழுநேரத் தொழிற் சங்கவாதியாக மாறி, சமத்துவ சமவுடமைச் சமுதாயத்தை உருவாக்க உழைக்கும் உழவாரப் படையின் முன்னணித் தொண்டனாகத் தம்மை நியமித்து, மனித குலத்தின் நேசிப்புக்கு அப்பாற்பட்ட எந்தப் பந்தபாச உறவுக்கும் கட்டுப்படாத ஒரு தவ வாழ்க்கையை மேற்கொள்வது பற்றித் தோழர் பாண்டியன் சிலபல காலமாகவே யோசித்து வந்துள்ளார்.

இத்தகைய ஒரு தவ வாழ்க்கைக்கு ஆர்வம் மட்டுந் தளமாக அமையமாட்டாது. இந்தக் கர்மயோகத்திலே கட்டித்த பக்தியும் உறுதியுந் தேவை. அத்தகைய தகைமைகள் தோழர் பாண்டியனிடம் இருப்பதை மேலிடத்தார் அவதானிக்கவும கணிக்கவும் தவறவில்லை.

எதற்கும் ஒரு வேளைவந்து வாய்க்க வேண்டுமல்லவா? அந்த வேளையும் வந்து வாய்த்தது. பரமசிவத்திற்கு நேர்ந்த அவலக்கதியின் மூலம், இந்நாட்டின் வளத்திற்கு உழைத்தும், பாட்டாளி வர்க்கத்தின் அதுவும் வைரம் பாய்ந்த பாட்டாளி வர்க்கத்தின் ஒரு சாரார் அடிமை

களிலும் கேவலமாக நடத்தப் படுவதை நேரடியாகவுந் தாளாரமாகவும் அறிய முடிந்தது.யதார்த்தஞானப்பிரகாசம் தோழர் பாண்டியனுடைய தவத்தாகத்தினை அதிகரிக்கச் செய்தது. உத்தியோகம் என்ற பற்றுகளைத் துறந்தார். மேலிடத்தின் ஆசியைப் பெற்றரர். பெரியசாமி—பெருமாள் கோமதி—மரகதம் ஆசிய பாத்திரங்கள் நடமாடும் தோட்டத்தை உள்ளடக்கிய மாவட்டத்திற்குத் தோழர் பாண்டியன் முழு நேர ஊழியனாக அனுப்பப்பட்டுள்ளார் என்று கட்சியின் மேலிடத்தார் விளங்கிக் கொண்டாலும், அவரைப் பொறுத்த அளவில் புதிய சுவிசேஷத்தினைப் பரப்பும் பரமார்த்த ஊழியராகவே வந்து சேர்ந்தார்.

கொழும்பிலே ஏற்படுத்திக் கொண்ட பழக்கத்தின் பயனாகப் பெரியசாமியுடன் தொடர்பு கொண்டு இயங்குதல் ஒரு நியதியாகக்கூட வாய்த்தது. எனவே, பெரியசாமியுடன் தொடர்பு கொண்டு, பல விஷயங்களையும் தோழர் பாண்டியன் எடுத்துக் கூறினார்.

மரகதத்தின் கணவனான பரமசிவத்திற்கு நடந்த அவலக்கரியைத் தோழரிடமிருந்து முதன் முதலாகக் கேட்டபொழுது, அவ்வளவும் வெறும் கதையாகவும் கனவாகவும் இருக்கக்கூடாதா என்றுகூடப் பெரியசாமி நினைத்தான். தன்னாலேயே சற்றும் சடுதியாகத் தாங்கிக் கொள்ள இயலாத செய்தியை, மரகதம் எவ்வாறு தாங்கிக் கொள்ளுவாள் என்ற வியாகூலத்தினைப் பெரியசாமி தோழரிடம் தெரிவித்தான். தாங்கிக்கொள்ளக்கூடிய ஒரு சந்தர்ப்ப சூழலிலே சொல்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. இப்படி அந்த விஷயத்தைச்சொல்வதை ஒத்தி வைத்ததுகூட தோழரின் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது

சீக்கிரமே விஷயத்தை மரகதத்திற்குத் தெரியப்படுத்துவது தான் சிறந்தது என்பதை வலியுறுத்தும் பேச்சிலே தோழர் பாண்டியன் ஈடுபட்டிருக்க, இருவரும்—தோழரும்

பெரியசாமியும்—எதேச்சையாக அவ்வழியால் நடந்து கொண்டிருந்தார்கள்.

பீலியிலே மரகதம் குளித்துக் கொண்டிருப்பதை முதலிலே பெரியசாமியே கண்டான். தோழர் பாண்டிய னுடைய கவனமும் கரிசனையும் வேறு திசையிலே! மரகதம் குளித்துக் கொண்டிருக்கும் காட்சியைப் பெரியசாமி ஒருகணப் பொழுது நேரம் மானசீகமாக ரஸித்தான். மறுகணமே, சமுதாயத்தின் ஒழுக்க நியதிகளுக்கு ஒவ்வாத கீழ்த்தரமான வேலையிலே தன் மனம் ஈடுபட்ட தற்காகப் பெரியசாமி பெரிதும் வருந்தலானான். பெரியசாமியின் பரவ மாற்றங்களைத் தோழர் பாண்டியன் தற்செயலாக அவதானித்த போதிலும், அதற்காக அர்த்தங் களைக் கற்பித்துக் கொள்ளுவதற்காக அவர் தமது சிந்தனைக்கு வேலை கொடுத்து அலட்டிக் கொள்ளவில்லை.

“அந்தப் பீலியிலே குளித்துக்கொண்டிருப்பது...” என்று மௌனத்தைக் கலைத்துப் பேசத்தொடங்கிய பெரியசாமி நிறுத்தினான்.

அவனுடைய சங்கடத்தை உணர்ந்த தோழர், “கண்பார்வை கூர்மையற்றவர்கள்கூட அவள் ஓர் அழகி என்பதை வெள்ளெழுத்து நிதானத்துடன்கூறிவிடுவார்கள்” என்று தோழர் சூதுவாது ஏதுமற்ற குரலிலே கூறினார்.

“அவள் தான் மரகதம்...”

இப்படியான ஓர் அழகிய தோட்டத்துப் பெண்ணுக்கு நேர்ந்துள்ள துர்க்கதியை நினைத்துத் தோழரின் மனம் மீண்டும் வருந்தியது. சமுதாயமாற்றம் இத்தகைய ஆயிரக் கணக்கான அபலைப் பெண்களுக்குப் புனர்வாழ்வு அளிக்காதா என்று பாட்டாளி வர்க்கத்தின் பரமார்த்த ஊழியரான தோழர் ஒரு கணம் நினைத்துப் பார்த்ததிலே, அவருடைய பேச்சு அறுந்து கிடந்தது.

திரும்பிப் பார்த்த மரகதம் பெரியசாமியும் தோழரும் தனக்குச் சமீபமாக நிற்பதைக் கண்டாள். அந்தக் கோலத்திலே— நீரிலே நனைந்துஉள்பாவாடை மேனியுடன் ஒட்டி தன் அங்க அமைப்புகள் போதிய மறைப்பின்றித் தெரியும் அந்தக் கோலத்திலே— தான் பெரியசாமிக்குக் காட்சி அளிப்பது குறித்து மரகதம் சட்டென்று வெட்கப் பட்டாள். நாணம் அவளை மறைவிடம் நோக்கி ஓடத் தூண்டியது அவளை அத்தகைய ஒரு கூச்சத்திற்குள் உட்படுத்தியிருக்கக்கூடாது என்பதுபோல, இருவரும் லயங்களுக்குச் செல்லும் குறுக்குப் பாதையிலே இறங்கி நடப்பதை அவதானித்தாள்.

நாணம் தூர்ந்தது. புதிய கவலைகள் அவளுடைய மனத்தினைப் பிறாண்டலாயின.

பெரியசாமியுடன் தோட்டத்திற்குத் திரும்புவதாகப் பரமசிவம் கடிதம் எழுதியிருந்தான், கணவன் பரமசிவம் குறிப்பிட்ட திகதியில்வருவாரென மரகதம் காத்திருந்தாள். அன்று அவளுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. மறுநாளும் காத்தலும் ஏமாற்றமும். இந்தக் கோலத்தினைப் பார்த்துச் சில சமயம்மரகதத்தின் தந்தை வீரையன் எரிச்சற்பட்டதும் உண்டு.

பெரியசாமி தனியாகத் திரும்பியுள்ள விபரத்தினை மரகதம் கோமதி மூலமே அறிந்தாள். 'பெரியசாமிகூட ஏன் பரமசிவம் வரவில்லை?' என்ற விஷயத்தினை அறியும் நோக்கத்துடன் மரகதம் எழுப்பிய கேள்விகளுக்குக் கோமதியால் பதில் கூற முடியவில்லை.

பெரியசாமியைச் சந்தித்து விபரம் அறியவேண்டும் என்று மரகதம் தவியாய்த் தவித்தாள். பெரியசாமியின் நடமாட்டத்தினை அக்கறையுடன் வேவு பார்த்துச் செயற் பட்ட மரகதம், சில தினங்களுக்குள் பின்னர், வழியிலே எதிரும் புதிருமாகச் சந்திப்பதிலே வெற்றி பெற்றாள்.

மரகதம் எத்தனையோ ரூபங்களிலே கேட்டபோதிலும் பரமசிவத்திற்குக் கொழும்பில் எதிர்பாராத அவசர வேலைகள் இருந்ததினால் தன் கூட வரவில்லை என்றும், சீக்கிரமே வந்துவிடுவதாகத் தாக்கல் சொல்லி அனுப்பியதாகவும் பெரியசாமி கூறினான். இந்தத் தாக்கலை ஏன் கோமதி மூலமாகவேனும் தெரிவிக்கவில்லை என்பதற்கு மரகதம் விடைகாண விழைந்தாள். பெரியசாமி மௌனமே சாதித்தான்.

பெரியசாமி எதையோ மறைத்து மழுப்புகின்றான் என்ற உள்ளுணர்வு ஒன்று அவளை உறுத்தியது. பெரியசாமியிடம் அத்தகைய ஒரு தாக்கலைப் பரமசிவம் சொல்லி அனுப்பியிருந்தால், அதனைத் தோட்டத்திற்குத் திரும்பிய அன்றைக்கே பெரியசாமி சொல்லி அனுப்பியிருப்பான் இந்தத் தாக்கலைச் சொல்லியனுப்புவதில் பெரியசாமி இத்தனை நாள்களும் சிரத்தை எடுக்காதது அவனுடைய சுபாவத்திற்குப் புறம்பானது. பெரியசாமி நாணயஸ்தன் என்று பெயர் எடுத்திருந்தான். அதிலே அவளுக்குச் சந்தேகம் ஏற்படாவிட்டாலும், அவனுடைய கூற்றிலே மரகதத்திற்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

பெரியசாமியின் புதிய போக்கு மரகதத்தின் அறிவுப் பிடிமானத்திற்குள் எட்டுவதாயுமில்லை

□ □ □

பெருமாளும் வீரையனும் அந்தக் காலத்திலே நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்தார்கள். 'கடும் சிநேகம் கண்ணைக் கெடுக்கும்' என்று பொறுமையைத் தீர்த்துக் கொண்டவர்களும் உண்டு. ஒருநாள் முஸ்பாத்தியான சமயத்தில் மரகதத்திற்கும் பெரியசாமிக்கும் மணம் முடித்து வைத்துத் தமது நட்பினை உறவு முறையாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும் என்றும் பரஸ்பரம் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். பின்னர் தெளிவு ஏற்பட்ட

நிலையிலும் இந்தப் பிரகடனத்தினை ஆட்சேபிக்கவில்லை. ஆமோதிப்பது போல அவர்களுடைய நட்பு வலுத்தது.

தமது பெற்றோரின் மானசீக அங்கீகாரம் பெற்ற ஓர் உறவுமுறை தங்களுக்குள் வளரும் என்ற கற்பனைகளிலும் கனவுகளிலும் மரகதம்—பெரியசாமி ஆகிய இருவருமே திளைத்திருக்கின்றார்கள். கற்றுத் தெரிவதில்லை மன்மதக்கலை. ஒருவரைஒருவர் எதிர்கொள்ளும் பொழுது, விந்தையான காதல் உணர்ச்சிகள் அவர்களைத் தடுமாற வைத்ததும் உண்டு. அந்தத் தடுமாற்றங்கள் மன உணர்ச்சிகள் என்ற வரம்பிற்குள்ளேயே வெதும்பி மடிந்தன.

வீரையனின் மனைவி காய்ச்சல் என்று சொல்லி, மல்லித்தண்ணி குடித்துப் பாயிலே ரெண்டே ரெண்டு நாள்களே படுத்திருந்தாள். மூன்றாம் நாள், வீரையனைத் தாலியறுத்தவனாக்கிச் சுடுகாட்டு அமைதியை நாடிய இறுதிப் பயணத்தைத் தேர்ந்தெடுத்தாள். இதை வீரையன் எதிர்பார்க்கவில்லை. பிரச்சினைகளிலிருந்து தப்புவதற்கு வீரையன் குடிப்பழக்கத்தினை ஒரு மார்க்கமாகத் தேர்ந்தெடுத்தான். மரகதத்தைத் தொடர்ந்து படிப்பிக்க இயலவில்லை. மரகதம் காம்பராவிலே சும்மா அடைபட்டுக் கிடப்பதிலும் பார்க்க, கொழுந்து பறிக்கச் செல்வது மேல் என்ற கூற்று வலுத்தது. தோட்டத் தொழிலாளர்களுடைய பொருளாதாரத்திலே இச்செயல் மிகவும் நியாயமானது என்பதை எவருமே ஆட்சேபிக்கவில்லை.

பெரியசாமி படித்து ஜி.ஸி.ஈ. சித்தி எய்தினான். தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த அளவில் பெரியசாமி முன்னோடிச் சாதனை ஒன்றினை நாட்டி விட்டான். படிப்பின் குபேரத்தை வரித்துக் கொண்டதாகத் தோன்றிய அவனை, தோட்டத்திலுள்ளவர்கள் மிகுந்த மதிப்புடன் நடத்தினார்கள். மரகதத்தின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

இனியும் தன் மகள் மரகதத்தின் கல்யாணத்தினை ஒத்தி வைக்க இயலாது என்ற நிர்ப்பந்தம் வீரையனுக்கு.

உத்தியோகம் புருஷ லட்சணம். உத்தியோகம் ஒன்றிலே சேர்ந்து, தன் உழைப்பை நம்பி வாழும் நிலை வாய்க்கும் வரையிலும்மணப்பேச்சுக்கு இடமில்லை என்பது பெரியசாமியின் தளம். அதுவரையிலும் மரகதம் தனக்காகக் காத்திருத்தல் நியாயம்.

பெரியசாமி பல கிறடிட்ஸுடன் சித்தியடைந்ததும், கொழும்பிலே பென்னம் பெரிய கல்லூரியிலே டாம்பீக மாகப் படித்துக் கொண்டிருந்த பெரிய துரையின் மகன் பரீட்சையிலே 'கோட்டை' விட்டதும், தோட்டத்திலே பெரிய அளவிலே பெரிதுபடுத்திப் பேசப்பட்டன. இந்தப் பிரஸ்தாபங்களினாலே சடையன் கங்காணியின் உள்ளத்திலே புதிய ஆசை ஒன்றும், அதனை நிறைவேற்றுவதற்கான திட்டம் ஒன்றும் உருவாகலாயின.

பெரியசாமியின் படிப்புக்கும் கெட்டித்தனத்திற்கும் நல்ல ஓர் உத்தியோகம் கிடைக்கும். சீதனத்தோட அவனுக்குக் கிளிக்குஞ்சு போல பெண்களைக் கட்டிக் கொடுக்க நான் நீ என்று போட்டியிடுவார்கள். பெரிய உத்தியோகம் பார்க்கப் போற ஒருவன், கொழுந்து பறிக்கிற பெண்ணையா கட்டிச் சீரழியிறது? குடிச்சு வாய்க்கு ஏதாவது சொல்லியிருக்கலாம். அதற்கான நிச்சயதார்த்தம் ஆயிட்டதா? நட்பு என்று கண்ணை மூடிக் கொண்டு பெரியசாமியின் வாழ்க்கையைப் பாழாக்குவதா? என்று பலவாறு சடையன் கண்காணியார் பெருமாளுக்கு நாள்தோறும் 'கீதோபதேசம்' செய்து வந்தார். அப்பாவிப் பெருமாள் மசிந்து விட்டான்.

ஒருநாள் வீரையன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. "என் மகனுக்கு எந்தக் காலத்திலும் கொழுந்து பறிக்கிற ஒருத்தியைக் கட்டி வைக்கப்போறதில்லை...' என்று பெருமாள் மிக மொட்டையாகச் சொல்லிவிட்டான்.

இந்தச் சொல்லடியை வீரையனாலே தாங்கிக் கொள்ள முடியவில்லை. "டேய், பெருமாள்! நீ இருந்து பார்! நான்

என்ன மகள் மரகதத்திற்கு ஒரு உத்தியோகக்காரனை கட்டிவைக்காமல் கண்ணை மூடி விடமாட்டேன்'' என்று ஆக்ரோஷத்துடன் அவன் சபதமும் ஏற்றுக் கொண்டான்.

அதிலிருந்து நட்பு அறுந்தது. பகை விஷம் கக்கி விளையத் துவங்கியது.

வீரையனின் வீராவேச மூர்க்கத்திற்கு முன்னால் யாராலும் ஈடுகொடுக்க முடியவில்லை.

எங்கிருந்தோ பரமசிவத்தை அழைத்து வந்து மரகதத்தைக் கல்யாணஞ் செய்து வைத்த பின்னர்தான் வீரையனின் ஓர்ம அக்கினி தணிந்தது.

இந்தக் கடந்த கால நிகழ்வுகளெல்லாம் சினிமாப் படத்தின் 'பிளாஷ்பாக்' போல மரகதத்தின் அகத் திரையிலே ஓடிக் கொண்டிருக்க, மரகதம் மலையின் குறுக்குப் பாதைகளிலே, துள்ளி விரையும் சாகஸத்தைப் பயன்படுத்தி, தோழர் பாண்டியனும் பெரியசாமியும் சற்றும் எதிர்பாராத வகையிலே அவர்களுக்கு முன்னால் நின்றாள்.

என்ன சொல்வது என்பது இருவருக்குந் தெரிய வில்லை.

கணவனின் ஆசையில் அல்ல, சத்தியத்தை அறியும் பரமார்த்த பக்தையாக அவள் அங்கு நிற்பதைத் தோழர் பாண்டியன் நிதானித்தார்.

பெரியசாமிக்குச் சப்த நாடிகளும் ஒடுங்கிய மெலிவு.

''உண்மையை அறியக்கூடாத அளவுக்கு நான் கெட்டவளுமில்லை...'' மரகதம் ஒரே சமயத்தில் அசோகவனத்திலே நோன்பியற்றும் மைதிலி போலவும், பாண்டியன் சபையில் சிலம்பின் செல்வி போலவும் தோழர் பாண்டியனின் மனத்திரையிலே தோன்றினாள்.

"எதைப் பற்றிய உண்மை...?"—தோழர் பாண்டியன் மிகச் சாதாரணமான குரலிலே கேட்டார்.

"என் கணவர் பரமசிவத்தைப் பற்றிய உண்மை..."

"நீ உன் காம்பிராவுக்குப் போ...உன் அப்பா வீரையனையும் கூட்டிக் கொண்டு அங்கு வரனும் என்னு இருந்தேன்...இனனே வந்தாப்போச்சு." மீண்டும் தோழரே பேசினார்.

"நீங்க..." என்று வசனத்தினை முடிக்காது மரகதம் தத்தளித்தாள்...

பெரியசாமி ஏதோ பேசும் பாவனையில் மிரண்டு விழித்தான்

"உன் அப்பாவுக்கு என்னத் தெரியும்..." என்று கூறிய தோழர், எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை என்ற பாவனையுடன் நடக்கத் தொடங்கினார்.

## 6

பரமசிவம் போலீஸின் உதவியுடன் இமிகிரேஷன் அதிகாரிகளினாலே கைதுசெய்யப்பட்டு கொம்பனி வீதியிலுள்ள தடுப்புமுகாமில் அடைக்கப்பட்ட பொழுது, தன்னுடைய எளிமை நிறைந்த வாழ்க்கைக்குப் பின்னாலே இப்படி ஒரு சதிப்பின்னல் சிக்கலாகப் பின்னப்பட்டிருக்கும் என்று கனவுகூடக் காணவில்லை.

யாரோ பொறாமையிலே எழுதிப்போட்டிருக்கக் கூடிய மொட்டைக் கடிதத்தின் விளைவாக, மாமூலாகச் சில தஸ்தாவேஜுகளைச் சரிபார்ப்பதற்காகவே பரமசிவம் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டிருப்பதாகத் தோழர் பாண்டியனும் நினைத்திருந்தார். அவ்வாறுதான் பரமசிவமும் நம்பினான். சில தினங்களிலே எல்லாம் சரியாகிவிடும் என்றும், தடுப்புக் காவலிலே அடைத்து

வைக்கப்பட்டிருக்கும் விஷயத்திலே இரகசியமாக வைத்துச் செயற்படுவது விவேகமானது என்றும் பரமசிவம் தோழரிடம் கூறியும் இருந்தான்.

கொழும்புநகரின் மத்தியிலே, இந்திய வம்சா வழியினருக்காக அமைக்கப்பட்டிருக்கும் தனியொரு நரக உலகத்திலேதான் அடைத்து வைக்கப்பட்டிருப்பதான உண்மையை நிதானிப்பதற்குப் பரமசிவத்திற்கு அதிக நாள்கள் பிடிக்கவில்லை.

தடுப்புக்காவல் முகாமில் பரமசிவம் தங்கியிருந்த அறையிலேயே ரஹீமும் தங்கியிருந்தான். அவனுடைய சோகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்த பொழுது தான் அநுபவிக்கும் துயரம் மிகவும் அற்பமானது என்ற தேறல் பரமசிவத்திற்கு ஏற்பட்டது. அத்துடன் ரஹீமுக்கு ஆறுதல் கூறக் கடைசி அறையிலே வாழ்ந்து கொண்டிருந்த சுல்தான் ராவுத்தர் அடிக்கடி வருவார். எல்லோருடைய தனிப்பட்ட துயர்களையும் மறக்கச் செய்யும் விதத்திலே அவர் வேடிக்கையான அரசியல் விமர்சனங்களும் செய்வார். எல்லோருக்கும் மனுக்கள் எழுதுவதற்கும் அவர் உதவி செய்தார். அவர் அங்கு தங்கியிருப்பது உண்மையில் முகாம் வாசிகளுக்கு ஆறுதலாகவும் இருந்தது.

ரஹீம் இந்த நாட்டிலே பிறந்ததற்குப் பிறப்புச் சான்றிதழ் காட்டியிருந்தான். அத்துடன் இந்நாட்டுப் பிரஜையான ஒருத்தியை மணந்து, கடந்த இருபது வருடத்திற்கு மேலாக இல்வாழ்க்கை நடத்தி வருகின்றான் என்பதற்கு மணச்சான்றிதழ் இருந்தது. ஒவ்வொருநாளும் ரஹீமின் மனைவியும், இருவரின் இல்வாழ்வின் கீர்த்தியைப் பறைசாற்றும் ஒன்பது பிள்ளைகளும் வருவார்கள். வெளியிலே பத்து ஜீவன்கள். முகம் மட்டும் தெரியக் கூடிய தாகப் பொருத்தப்பட்டிருக்கும் 'வயர்மெஸ் கிராதி' மூலமே முகதரிசனம் நடைபெறும். ரஹீம் நன்றாக உழைத்து லொறிகள் என்றும் கார்கள் என்றும் வசதியுடன்

வாழ்ந்தவன் வியாபாரத்திலே மகா கெட்டிக்காரன். வியாபாரத்திலே ஏற்பட்ட போட்டி பொறாமைகளைப் பற்றி அவன் அக்கறைப்பட்டதில்லை. அல்லாவுக்குப்பயந்து நடந்தால் போதும் என்ற சுபாவம்.

ரஹீம் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கிடையில் இந்தத் தடுப்பு முகாமுக்கு இந்தத்தடவையுடன் நான்கு தடவைகள் கொண்டு வரப்பட்டான். முதலாவது தடவை கொண்டு வரப்பட்ட பொழுது ரஹீம் மிகப் பிரபலமான சட்டத்தரணி ஒருவரை அமர்த்தி விவாகாரங்களைப் பார்த்தான். பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டாலும் பாதகமில்லை. பிறப்புச் சான்றிதழ் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன் மூலம் அவனை இலங்கைப் பிரஜை என்று ஏற்றுக் கொண்டார்கள். இனி, தன்னுடைய பிறப்புப் பற்றி அரசுக்கு எவ்வித சந்தேகமும் எழ நியாயமில்லை என்ற நிம்மதியுடன், தடுப்புமுகாம் என்ற நரக லோகத்திற்கு ஒரு பெரிய குட் பை கூறிவிட்டு வெளியேறினான்.

ரஹீமினுடைய வியாபார விரோதிகள் வீசியெறிந்த பணம் இன்னும் ஆழமான பாதாளத்தினை அடைந்தன. ரஹீம் கூட அறியாத பல உண்மைகளைக் கிளறி வெளியே கொண்டு வந்தன. ரஹீமின் தந்தை இலங்கையிலே பிறந்தவர், ஆனால், இந்திய வம்சாவழியினர், அவர் தமது பூர்வீகக் கிராமத்திற்குச் சென்று ஓர் உறவுப் பெண்ணை மணந்து கொண்டு திரும்பியவர். வெள்ளைக்காரன் இந்தியாவையும் இலங்கையையும் ஒரே குடையின் கீழ் கட்டி ஆண்ட அந்தக் காலத்திலே பாஸ்போட் 'வீஸா' என்ற எந்தச் சள்ளையும் இருக்கவில்லை. நினைத்தால் அங்கே; நினைத்தால் இங்கே என்ற வாழ்க்கை. ரஹீமைப் பிரசவித்த பொழுது தாய் இந்தியாவில் வாழ்ந்தாள் என்பதையும் அப்பொழுது ரஹீமின் பிறப்பு அங்கே பதிவாகியிருக்கின்றது என்றும் இமிகிரேஷன் பகுதியார் ஆதாரங்கள் சமர்ப்பித்து நாலாவது தடவையாகப் பிடித்து இங்கே தள்ளியிருக்கின்றார்கள். வந்து ஒரு

ஆண்டுக்கு மேலாகியது. ரஹீம் உள்ளேயிருந்து கொண்டு நீதிமன்றத்தின் கருணையைக் கூட யாசித்தான்.

"ஐயா! என் தந்தை இங்கே பிறந்தவர். என் அண்ணனும், என் தம்பியும் இங்கே பிறந்தவர்கள். நான் இந்தியாவிலே பிறந்தவனாக இருக்கலாம். நான் பிறந்தமண் என்ன நிறம் என்பதை நான் இன்றுவரை அறிய மாட்டேன்! என் தம்பி சின்ன வயதிலே இறந்து போனான். அவனுடைய பிறப்புக் கொப்பியைக் காட்டினால் எல்லா விஷயமும் சரியாகிவிடும் என்று ஆலோசனை கூறப் பட்டது. என் குடும்பத்தை இந்நாட்டிலேயே வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையைத் தவிர வேறு எந்த ஆசையும் எனக்குக் கிடையாது. நான் ஆள்மாறாட்டம் செய்யவோ, அரசை ஏமாற்றவோ என்றும் நினைத்தது கிடையாது. நான் ஆள்மாறாட்டம் செய்தேன் என்று நீங்கள் கருதினால், அதற்கான தண்டனையை எனக்குத் தாருங்கள். இதுதான் என் நாடு. இந்நாட்டிலே தான் நான் வாழ்வும் வளமும் பெற்றேன். இங்கேயே என் உடலும் மண்ணுக்குப் பசளையாகப் போகட்டும். நீங்கள் விதிக்கும் எந்தத் தண்டனையையும் இந்த மண்ணிலே அநுபவித்து மாண்டு விடுகின்றேன். நான் கண்ணாலும் பார்க்காத ஒரு மண்ணிலே—அதுதான் என் பிறந்த மண் என்று உங்கள் சட்டம் சாதிப்பதற்காக—எப்படி என்னால் புதிய வாழ்வு ஒன்றினை ஆரம்பிக்க முடியும்? என்மனைவி இலங்கையிலே பிறந்தவள். பிள்ளைகள் ஒன்பது பேர். எங்களுடைய சமூகத்தின் அரசியல் தலைவர்களின் ஆலோசனைப்படி, அவர்கள் எல்லோரும் சிங்கள மொழிமூலம் கல்வி கற்றவர்கள். சிங்கள மொழியே வழங்காத ஒரு நாட்டிலே அவர்களாலே எப்படிக் கல்வியைத் தொடரமுடியும்? என் மனைவியையும் பிள்ளைகளையும் இங்கேயே விட்டுச் செல்லலாம் என்றும் கூறப்படுகின்றது. இருபது வருஷங்கள் பேணிக்காக்கப்பட்ட புனிதமான சம்சார பந்தத்தினை எப்படித் தன்னந் தனியனாக அறுத்துக்

கொண்டு ஓடமுடியும். ஐயா! மனுஷத்துவம், மொழி—இனம் —நாடு என்ற எல்லைகளைக் கடந்த ஓர் உன்னத இலட்சியம். இந்த மனுஷத்துவமே மனித குலத்தை மிருகங்களிலிருந்து வேறுபடுத்துகின்றது. அந்த மனுஷத்துவத்தின் பெயராலே உங்களிடம் கருணைப் பிச்சை கேட்கின்றேன். இந்த நாட்டின் காற்றைச் சுவாசித்து, உப்பைத் தின்று, நீரைக் குடித்து, இந்த மண்ணிலே தங்கள் சிரிப்பை உதிர்த்து, கண்ணீரைச் சிந்தி, இந்த மண்ணின் வளத்திலேயே தங்கள் எதிர் காலத்தினை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளதைத் தவிர வேறு பாவங்கள் எதனையும் அறியாத இந்நாட்டுப் பிரஜைகளான ஒன்பது பிள்ளைகள். இருபதாம் நூற்றாண்டிலே பெண்மையின் தலைமையைப் பெருமை யுடன் ஏற்ற நாட்டிலே, தாய்க்குலத்தின் பிரதிநிதியாக வாழும் அவர்களுடைய தாய், இந்தப்—பத்துப் பேருக்கும் நான் ஓர் ஊன்று கோல்—உதவி—ஓர் உழைப்புச் சக்தி. இந்தப் பத்துப் பேரையும் இங்கு விட்டு விட்டு, நான் ஒருவன் மட்டும் நாடு கடத்தப்படுவதினால் இந்நாடு பொருளாதார ரீதியிலாவது, தார்மீக ரீதியிலாவது அடையப்போகும் ஆதாயம் என்ன? என்னை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிடுவதிலும் பார்க்க, கருணை மிகவுங்கூர்ந்து, எனக்கு மரணதண்டனை விதியுங்கள். என்னுடைய சிறிய சமாதியாவது என் வழித்தோன்றல்களுக்கு ஆதாரமாக இருக்கிறது என்ற ஆறுதல் நிச்சயமாக இருக்கும்...''

சுல்தான் ராவுத்தர் கொடுத்த பயிற்சியினால், ரஹீம் இவ்வளவற்றையும் தனது கருணை மனுவாக நீதி மன்றத்திலே கூறி, அழுதும் விட்டான்.

ஈற்றில் நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைத்தது. ரஹீம் ஒரு வாரத்திற்கிடையில் இந்நாட்டைவிட்டு, 'ஸ்ரீமா—

சாஸ்திரி' ஒப்பந்தம் அமுலாகும் வகையில், வெளியேறி விடவேண்டும்.

★★★

ரஹீமுக்கு இந்தச் சுல்தான் ராவுத்தர் என்ன ஓதியிருப்பார் என்பதை எண்ணி எண்ணி மலைப்புக் கொண்டான் பரமசிவம். நீதி மன்றத் தீர்ப்புக் கிடைத்ததிலிருந்து அன்ன ஆகாரமின்றி அழுது புலம்பிய ரஹீமின் முகத்திலே அந்த அமானுஷ்ஷ அமைதியை ஏற்படுத்தும் இரகசியத்தை ராவுத்தர் எப்படி அறிந்திருந்தார்.

காலையிலே, சில தஸ்தாவேஜுகளுடன் சுல்தான் ராவுத்தர் வந்து சேர்ந்தார். பரமசிவமும் ரஹீமும் அவருடைய வருகைக்காகவே காத்திருந்தார்கள்.

"பரமசிவம்! நீ நினைத்ததுபோல உன் நண்பர்கள் என்று நீ நினைத்தவர்கள் நண்பர்களாக நடந்து கொள்ளவில்லை. இந்த அநுபவம் எனக்குப் பழைய பாடம். ஆனால், உன் நண்பர்கள் சிலரைப் பற்றி நீ புதிய தகவல்கள் அறியப் போகின்றாய் அதற்காக மனம் உடைந்து போகாதே....!" என்று சுல்தான் ராவுத்தர் ஒரு பீடிகை போட்டு நிறுத்தினார்.

"இந்த முகாமிலே உள்ள ஒவ்வொருவனும், நண்பன் என்ற போர்வையிலே நம் ரத்தத்தைக் குடித்து வளம் பெற விரும்பிய, ஓர் அயோக்கியனின் துரோகச் செயலாலேதான் அடைபட்டுக் கிடக்கின்றோம்..." என்றான் ரஹீம்.

"கடமையைப் பார்ப்பதாகக் கூறிக்கொண்டு அட்டகாசம் செய்யும் சில யாழ்ப்பாண உத்தியோகத்தருடைய சிறுமைகளை மன்னிப்பதற்கான பக்குவத்தை நாம் எப்படிப் பெற்றோம்?" என்று கேட்டு ராவுத்தர் சிரித்தார்.

ராவுத்தர் யாழ்ப்பாணத் தமிழர்களைச் சாடுவது போலப் பேசியதாகவும் தோன்றியது. இந்த எண்ணம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதை அவரே நிதானித்தார்.

"யாழ்ப்பாண மண்ணிலே எனக்கு நண்பர்கள் பலர். அவர்களுடைய விருந்தோம்பலை அநுபவித்தும் இருக்கின்றேன். சோற்றுக் கடனுக்காக, இந்தக் குட்டி உத்தியோகத்தர்களுடைய அட்டகாசங்களையும், யாழ்ப்பாண மண்ணின் அரசியல் மனோபாவத்தையும் விமர்சனஞ் செய்யக்கூடாது என்று அர்த்தமா? தமிழர்கள் தமிழர்கள் தானே? இலங்கைத் தமிழர் என்றும், இந்தியத் தமிழர் என்றும் இரண்டு சாதியார் தோன்றக் காரணமாக இருந்தவர்கள் யார்? இந்தியத் தமிழர்களுடைய வாக்குரிமை பறிக்கப்பட்ட பொழுது, இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் எத்தகைய மனோபாவத்தைக் கடைப்பிடித்தார்கள்? ஏன்? இந்தியத் தமிழர்கள் எல்லோரும் கப்பலேற்றப்பட்டதும் அவர்களுடைய சம்பந்துகளும் உத்தியோகங்களும் நமக்கே கிடைக்கும் என்று உண்மையாக நினைத்திருந்த எத்தனை இலங்கைத் தமிழர்கள் நம் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் தெரியுமா? "ஐம்பதுக்கு ஐம்பது" 'சமஷ்டி', 'தமிழ்ஈழம்' எல்லாம் கோசங்களே. இந்தக் கோசங்களை முன் வைத்த தலைவர்கள், யாழ்ப்பாண அரசியல் ஆதிக்கத்திற்கே முதலிடம் அளித்தார்கள் என்பதை மறுக்க முடியுமா?..." என்று ஆக்ரோஷமாகப் பேசிய ராவுத்தர், சடுதியாக நிதானம்அடைந்து "நான் ஒரு முஸ்லீம் என்ற காரணத்தினால், தமிழர்களுடைய அரசியலைப் பற்றிக் காட்டமான விமர்சனஞ் செய்யும் உரிமையை எடுத்திருக்கக் கூடாதுதான்..." என்று நிறுத்தினார்.

★ ★ ★

"பரமசிவம், நீ சொல்வது அத்தனையும் சரி. நீ, 1949 ஆம் ஆண்டிற்கு முன்னர், இந்த நாட்டிற்கு வந்தவன். இந்த ஆண்டிலேதான் உலகமே கண்டிராத விநோதமான பிரஜா உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது அதற்குப் பின்னர், நீ இந்தியாவுக்கே திரும்பிப் போகவில்லை. 1953 ஆம் ஆண்டிலே கைச்சாத்தாகிய "நேரு—

கொத்தலாவலை'' ஒப்பந்தத்தின் கீழ், இளைப்பாறும் வரையிலே இங்கே தொழில் பார்க்கும் தகைமையை நீ பெற்றிருக்கலாம். இப்படிச் செய்யலாம் என்று புத்தி சொல்லுவதற்கு உனக்கு ஒருவரும் இருக்கவில்லை. அத்துடன் ஆண்டுதோறும் விஸாவுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்திற்கும் உனக்கு வசதி இருக்கவில்லை. இவற்றைப் பற்றி அக்கறைப்பட வேண்டிய அவசியமில்லாத ஒன்று வாழ்க்கை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவத்தை நீ மறந்திருக்க மாட்டாய் பரமசிவம். மைக்கேல் காட்டிய உற்சாகத்தின் காரணமாக நீ கச்சதீவுக்குப் போயிருந்தாய். இந்தியப் படகுகள் ராமேஸ்வரத்திற்கும் கச்சதீவுக்கும் இடையில் போய் வந்து கொண்டிருந்தன. உன் பூர்வீகம் பரமக்குடி. அந்த மண்ணை ஒரு தடவை பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை உன் அடிமனத்திலே இருந்தது. 'வாத்தியாரின்' புதிய படம் ஒன்று அப்பொழுதுதான் மதுரையிலே ரிலிஷாகி இருந்தது. அந்தப் படத்தினை எல்லோருக்கும் முன்னதாகப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசையை மைக்கேலால் அடக்க முடியவில்லை. அவன் போட்ட தூபத்திற்கு மசிந்தாய். இருவரும் ராமேஸ்வரத்திற்குச் சென்றீர்கள். மதுரை சென்று வாத்தியார் நடித்த படத்தைப் பார்த்தீர்கள். பின்னர் பரமக்குடிக்கும் வந்திருக்கின்றீர்கள். அங்கு தங்கிய நேரத்தில் உன் பூர்வீகம் முழுவதையும் அவன் அறிந்து கொண்டான். நீங்கள் இருவரும் திரும்பும் பொழுது, ராமேஸ்வரத்தில் வைத்து மைக்கல் இராமநாதபுரம் சிறைச்சாலைக்குச் செல்ல, நீ தப்பினோம் பிழைத்தோம் என்று கொழும்பு வந்து சேர்ந்தாய்....''

பரமசிவம் பற்றி வரலாற்றிலே ஓர் ஏட்டினை வாசிப்பதைப் போல ராவுத்தர் கூறினார். பக்கத்தில் நின்று பார்த்தது போல ராவுத்தர் விவரித்தது பரமசிவத்திற்கு ஆச்சரிய மாகவும் இருந்தது.

''இதை அறிந்த ஒரே ஒருவன் மைக்கேல். அவன்தான் உன்னை இந்தத் தடுப்பு முகாமிலிருந்து காப்பாற்று

வதற்காக முயற்சிக்கிறான் என்று இரவு பகலாக நம்பிக் கொண்டிருக்கின்றாய். அப்படி இருந்தும் நான் எப்படி இவற்றை அறிந்தேன் என்பது உனக்கு ஆச்சரியமாக அல்லவா இருக்கின்றது பரமசிவம்? இவற்றை எல்லாம் மைக்கேல் அரசுக்குத் தெரிவித்த படியாற்றான் நீ இந்தத் தடுப்பு முகாமில் இருக்கின்றாய். அவன் கொடுத்துள்ள ஆதாரங்களின்படி நீ ஐந்து வருடங்களுக்கு முன்னர், கச்சதீவு வழியாக வந்து இந்நாட்டிலே குடியேறிய 'கள்ளத் தோணி' என்று அரசு நம்புகின்றது. இதனாலேதான் 'கள்ளத்தோணி'க்குரிய சகல 'மரியாதை'களுடனும் உன்னை அனுப்பி வைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது...'' ராவுத்தர் இதனைக் கூறியதும் பரமசிவம் விக்கித்துப் போனான். இப்படி ஒருமித்திரபேதம் நடந்திருக்கலாம் என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. பீறிட்டு வந்த அழுகையைப் பரமசிவத்தால் அடக்கவும் இயலவில்லை. அவன் அழுது தேறுவதற்கான அவகாசத்தினைக் கொடுத்து சுல்தான் ராவுத்தர் மௌனஞ் சாதித்தார்.

''இதனால்—இந்தத் துரோகத்தால்—மைக்கலுக்கு என்ன சார் ஆதாயம்...?'' என்று பரமசிவம் மிகவும் பரிதாபமாகக் கேட்டான்.

''அதனை மைக்கேலும் ஆண்டவனுமே அறிவார்கள். தோழர் பாண்டியன் நடத்திய விசாரணைகளிலிருந்து சில விஷயங்கள் ஊகிக்க முடிகின்றது. உண்மையான காரணம் என்னவென்பதை யார் அறிவார்கள்? மைக்கேலின் அண்ணன் சற்று வசதி படைத்தவன். வத்தளையிலே தனி வீடு ஒன்று எடுத்துத் தனிக் குடித்தனஞ் செய்பவர். அவர் மீதுகொண்ட வியாபார அறிமுகத்தினாலேதான் உனக்கும் மைக்கேலுக்கும் பிணைப்பு அதிகம் ஏற்பட்டது. எறும்பு சேர்ப்பது போலச் சிறுகச்சிறுகச் சேகரித்து, சொந்தத் தொழில்செய்ய முதல் திரட்டும் எண்ணத்திலே நீ உன் பணத்தைமைக்கேலின் அண்ணனிடம் கொடுத்து

வைத்திருக்கின்றாய். உன் பணத்தையும் முதலீடு செய்து வியாபாரம் பெரிப்பிக்கப்பட்டது.

"இரண்டு தோணியிலே கால் வைப்பது ஆபத்தானது என்று சொல்வார்கள் எதை எதையெல்லாமோ அறிந்து வைத்திருக்கும் நான் இந்த உண்மையைச்—சின்ன உண்மையை அறிந்திருக்க வில்லை... அதுதான் எனக்கு நடந்தவினை. இன்றைய அரசிலே உயர் பதவிகளிலே உள்ள சிலரின் பதவிமுன்னேற்றத்திற்கு நான் ஏணியாக உதவினேன். அவர்கள் தலையீட்டால் நான் இங்கிருந்து விடுதலை பெற்றுச் செல்வேன் என்றும் நம்பியிருந்தேன். அவர்கள் உண்மைகளுக்கு முகங்கொடுக்காது தப்பி ஓடிவிடவும் முடியாது..."

மணி அடித்தது. தூரத்தில், தகரவேலி ஒன்று உள்ளே இருப்பவர்களை வெளியுலகத்திடமிருந்து பிரித்து வைத்து எழுந்திருக்கின்றது. அந்தத் தகரவேலியிலே, சில குறிப் பிட்ட இடங்களில் உள்ளே இருப்பவர்களின் முகத்தை மட்டும் பார்க்கக்கூடிய விஸ்தீரத்தில் வலைக்கம்பி களினாலான யன்னல்கள் அமைத்திருந்தார்கள். குறிப்பிட்ட நேரங்களிலே, மிருகக் காட்சிக் கூண்டுகளில் அடைக்கப் பட்ட மிருகங்களைப்போல, கைதிகள் அந்த யன்னல் களுக்கு இப்பால் வந்துநின்று கொள்ளலாம் தகர வேலிக்கு அப்பால் சுமார் ஐந்தடி தூரம் இடைவெளியிட்டு கம்பி வேலியுண்டு, கம்பிவேலிக்கு அப்பால் நின்றுதான் உறவினர்கள் கைதிகளைப் பார்த்துச் செல்லலாம்.

மனித உரிமைகள் பற்றி ஐக்கிய நாடுகள் சபையிலே மனித சிந்தனைகள் முழக்க மிடுகின்றன.

மூன்றாவது உலகின் ஐக்கியம் பற்றி கூட்டுச் சேரா நாடுகளின் உச்சி மாநாட்டிலே தீர்மானங்கள் தீட்டப் படுகின்றன.

இந்த நாட்டின் நாகரிக மேம்பாட்டினை நிலைநாட்ட மிகப் பெரியது பெரியதாக புத்த சிலைகள் நிர்மாணிக்கப் படுகின்றன.

புத்தர் பிறந்த அந்தப் புண்ணிய மண்ணிலே ஏதோ ஒரு வழியிலே இரத்த உறவு கொண்டுவிட்ட 'பாவத்'தைத் தவிர வேறு எதையும் செய்தறியாத அப்பாவிகள் தகர வேலிக்குள் மந்தைக் கூட்டமாக அடைத்து வைக்கப் பட்டிருக்கின்றார்கள்.

உள்ளே கைதிகளாக வைக்கப்பட்டவர்களுடன் நட்புறவு வைத்த குற்றத்தைத் தவிர வேறு எதையும் செய்யாத இந்நாட்டின் சுதந்திரப் பிரஜைகள், இனியவர் களுடைய முகதரிசனம் பெறுவதற்காகக் கம்பி வேலியிலே தொங்கிக் கொண்டு நிற்கின்றார்கள்.

மணி அடித்த வேகத்தில் ஒரு பரபரப்பு!

பரமசிவம் தகர வேலியை நோக்கி நடக்கின்றான். கம்பி வேலியிலே தொங்கியபடி மரகதம் நிற்கின்றாள்.

## 7

கொழும்பு—கோட்டைப் புகையிரத நிலையத்தின் ஐந்தாம் மேடை. செவ்வாய்க் கிழமைகளிலும், வியாழக் கிழமைகளிலும் தலைமன்னார் புகையிரதம் புறப்படும் போதெல்லாம் அது சோகமேடையாக மாற்றப்படுகின்றது

நாடுகள் செய்துகொண்ட ஒப்பந்தம் என்ற பெயராலே, இந்த நாட்டிலே தமது உரிமைகளை நிலைநாட்ட வக்கற்றவர்களாகிவிட்ட இந்திய வம்சாவழியினர் இந்தத் தினங்களிலேதான் இந்தியாவுக்கு 'இறுதிப் பயணங்களை' மேற்கொள்ளுகின்றார்கள்.

இனியவர்கள்—பிரிக்க இயலாத உறவுகொண்ட இனியர்கள்—இறுதியாக விடைபெற்றுக் கொள்ளும் காட்சி எப்பொழுதுமே நெஞ்சை உருக்கும்.

ஈற்றில்...

எல்லாமே கண்ணீரிலே கரைந்து மறையும் சோகத்திட்டுக்களே!

ரயில் நகரத் தொடங்கியது...

உள்ளே, சட்டத்துறையினரின் மாமூலான பாதுகாப்புகளுடன் பரமசிவம் பயணத்தை எதிர்நோக்கி அமர்ந்திருந்தான்.

"ஏன் ரயிலடிக்கு என் மரகதம் வரல்ல?" என்று எத்தனையோ தடவைகள் பரமசிவம் தோழர் பாண்டியனிடமும் வீரையனிடமும் கேட்டுவிட்டான்.

வீரையன் அழுதான்.

பரமசிவம் அழுதான்.

தோழர் பாண்டியன் அழவில்லை என்ற ஒருவகை வீறாப்புடன் அழுது கொண்டு நின்றார்.

ரயில் ஓடத் தொடங்கியது.

பரமசிவத்தின் கேள்விக்கு அழுகையைத் தவிர வேறு பதில் எதுவும் கிடைக்கவில்லை.

"ஏன் ரயிலடிக்கு என் மரகதம் வரல்ல?" என்ற பரமசிவத்தின் கேள்விக்குத் தோழர் ஏதாவது சமாதானம் கூறத்தான் துடித்தார். வாய்மையின் திருத்தவிசிலே பொய்மையைக் குடியேற்றுவதிலும் பார்க்க, மௌனத்தை இருத்துதல் சேமமென்று நினைத்தாரா?

காரணத்தைத் தோழராலே கூட இனங்காண முடியாத அளவுக்கு அவருடைய மனமே குழம்பிப் போய்க் கிடந்தது

வீரையன் காலிமுகத் திடலிலே, போதைக்குத் தன் உடலையும் உள்ளத்தையும் உட்படுத்திய நிலையில்,

படுத்துக்கிடந்தான். அவனுடைய செயலைத் தோழர் பாண்டியன் ஆட்சேபிக்கவில்லை. அந்தப் பாமர நெஞ்சம் அப்படித்தான் அமைதி காணும் என்பதை இயல்பாக ஏற்றுக் கொண்டவர்போலக் காணப்பட்டார்.

தோழர் பாண்டியன் அலைகடலைப் பார்த்தபடி ஏதோ யோசனையில் அமர்ந்திருந்தார்.

★ ★ ★

சுல்தான் ராவுத்தர் விடுபட்டுப்போன துண்டுகளை நேர்த்தியாகப் பொருத்திக் காட்டியது ஆச்சரியமாக இருந்தது. மரகதத்தைப் பற்றிஎச்சரிக்கையாகஇருக்கும்படி ராவுத்தர் கூறியதைத் தான் செயற்படுத்தாதது தன்னுடைய குற்றமே என்று தோழர் சுயவிமர்சனஞ் செய்து வருந்தினார். 'கதைகளிலே யதார்த்தம் வேண்டும்' என்று தோழர் பாண்டியன் முழங்கியிருக்கின்றார். இனியும் அவ்வாறு முழக்கமிடுவதற்கும் அவர் தயங்கமாட்டார். ஆனால், கதைகளிலே வரும் கற்பனைகளிலும் பார்க்க உண்மைகள் மிகவும் விநோதமாக அமையலாம் என்பதற்கு அவர் ஒரு சாட்சி. 'இலக்கியத்திலே யதார்த்த வாதம்'' என்ற கோஷம் சித்தாந்த ரீதியாக எழுந்தது என்பதையும் அவராலே துறக்க முடியவில்லை

இந்த இரண்டும் கெட்டான் நிலையிலே, சுல்தான் ராவுத்தர் கூறியவற்றை மீண்டும் ஒருமுறை நினைவிற்குக் கொண்டுவந்தார். இவ்வாறு, எதையாவது நினைவுக்குக் கொண்டு வருவதைப் பார்க்கிலும் வேறு அலுவல்களும் அப்பொழுது அவருக்கு இருக்கவில்லை.

''நான் அறிந்த தகவல்களையும், நீங்கள் சொல்லும் தகவல்களையும் காரண காரியங்களுடன் தொடர்புபடுத்தி பரமசிவத்தின் கதையைப் பின்வருமாறு பூரணப்படுத்தலாம் என்று நினைக்கின்றேன். பரமசிவம் வாழ்க்கையின் அடிமட்டத்திலே பல காலம் துன்பப்பட்டிருக்கின்றான்.

மரபுரீதியாக அவன் பூண்டுவிட்ட நம்பிக்கைகளிலிருந்து அவனால் விலக முடியவில்லை. வர்க்கத்தின் விமோசனத்திற்கான விடிவு அரசியல்வாதிகளினாலே வந்து சேரும் என்று நம்பிக்கை ஊட்டுவதாக இங்கு அரசியலும் நடைபெறவில்லை. இந்நிலையிலேபரமசிவம் விதிவிட்ட வழியைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான்.''

''மைக்கேலின் அண்ணன் ஜோசப் தன்னலக்காரன், கடத்தல் மன்னர்களுடைய இடைத்தரகனாச் செயற்பட்டுக் குறுக்கு வழியிலே கொஞ்சப் பணம் சம்பாதித்திருக்கின்றான். பரமசிவத்தின் முதலாளியுடன் குறுக்கு வழிச் சம்பாத்தியத்தின் மூலமே ஜோசப்புக்குத் தொடர்பு ஏற்பட்டிருக்கின்றது. பரமசிவத்தினைக்கைக்குள் போட்டுக் கொள்வதினால், சிலபல வசதிகள் ஏற்படலாம் என்பதை ஜோசப் நிதானித்துக் கொண்டான். மேலதிக வருவாய் பெற்று, சீக்கிரமே தானும் ஒரு முதலாளியாகி விட வேண்டும் என்ற ஆசையிலே பரமசிவம் எத்தகைய சிறுமையையும் இனங் காணவில்லை. இந்த மேலதிக வருவாயை ஜோசப்பிடம் விட்டு வைப்பதுதான் பாதுகாப்பானது என்று நினைத்தான்.''

''ஆரம்பத்தில் ஜோசப் கூட பரமசிவத்தின் பணத்தை மோசடி செய்யவேண்டும் என்று நினைக்காமலும் இருந்திருக்கலாம். ரீட்டா என்ற பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி ஜோசப்பும் மைக்கேலும் அடிக்கடி ஆலோசனைகள் கூறியும் வந்துள்ளார்கள். இந்த ரீட்டா யார்? ரீடடா அவர்களுடைய ஒன்றுவிட்ட சகோதரிதான். இரண்டு கூடப் பிறந்த சகோதரிகளுடைய பிள்ளைகள் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளுடைய உறவிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, ஒன்றுவிட்ட சகோதரர் என்ற சொல்லாட்சியாலே இங்கு சில பகுதிகளிலே குறிப்பிடுதல் வழக்கம். ரீட்டாவின் தாயும் ஜோசப்பின் தாயும் கூடப் பிறந்த சகோதரிகளல்லர். கிழக்குப் பகுதியிலே

தமிழர் பண்பாட்டினையும் உரிமைகளையும் உணர்ச்சி வேகத்திலே பாதுகாக்கப் புறப்பட்டுள்ள தியாகச் செம்மலாகத் தன்னைத்தானே மேடைக்கு மேடை அறிமுகப்படுத்தும் ஓர் எழுத்தாளர் ஒன்றுவிட்ட சகோதரியை விவாகஞ் செய்யப்போவதாகப் பரவலாகப் பேச்சுகள் அடிபடுகின்றன. அப்படி நடப்பது அசிங்கமானதுதான். பண்புகளுக்கு அப்பாலும், மருத்துவ ரீதியாகவும் அத்தகைய திருமணங்கள் தவிர்க்கப்பட வேண்டியவை. சுற்றிவளைத்துக் கிளறிப் பார்க்கும் ஓர் உறவு முறையிலேதான் ரீட்டா ஜோசப்பிற்கு ஒன்றுவிட்ட சகோதரியாவாள். சிறு வயதுமுதல் இந்த ஒன்றுவிட்ட சகோதரி முறை நிலைத்துவிட்டது. இருப்பினும் சந்தர்ப்ப வசத்தினால் ரீட்டாவுக்கும் ஜோசப்பிற்கும் இடையில் தகாத தொடர்புகள் ஏற்பட்டுவிட்டன. இந்த உறவுகளைத் துண்டித்துக் கொள்ளவும் விரும்பவில்லை. பகிரங்கமாக வாழும் தைரியமும் ஏற்படவில்லை. அவர்களுக்கிடையிலே தொடர்பு இருப்பதான கதை வெறும் ஊர்ப்புரளி என்று காட்டிக் கொள்வதற்காகவும், ஜோசப் அவசரப்பட்டுக் கல்யாணம் ஒன்றைச் செய்து கொண்டான். இந்தத் திருமணம் மூலம் கவர்ச்சியான சீதனம் கிடைத்தது என்பது வேறு விடயம். ரீட்டா விசயமாக ஜோசப்பிற்கும் அவனுடைய மனைவிக்கும் இடையில் தகராறுகளும் ஏற்பட்டிருக்கின்றது. உலகத்தின் பார்வையிலே ரீட்டாவைப் பரமசிவத்தின் மனைவியாக்கிவிடுதல் சௌகரியமான ஏற்பாடு, இரண்டு வழிகளிலே இது உதவக்கூடும் என்று ஜோசப் நினைத்திருக்கலாம். ரீட்டாவின் கணவனாகி விட்ட பரமசிவத்துடன் ஜோசப் கூட்டுவியாபார முயற்சியை ஆரம்பிப்பது பற்றி யாரும் சந்தேகப்படமாட்டார்கள். கணக்கு வழக்கிலுள்ள ஓட்டைகளைமறைப்பதற்குஉதவும். இரண்டாவதாக, ரீட்டாவுக்கும் ஜோசப்பிற்கும் இடையில் தொடர்ந்தும் தொடர்பு இருந்து வந்தாலும், பரமசிவம் ஆட்சேபிக்கமாட்டான். 'ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர்

கள்ளத்தோணியாக வந்தவன்' என்பதைக் காட்டிக் கொடுத்து விடுவோம் என்ற இருட்டடிப்பின் மூலம் பரமசிவத்தின் வாயை அடைக்கப் பண்ணலாம் என்றும் ஜோசப் நம்பியிருக்கலாம்.

''ஜோசப் மிகக் கெட்டிக்காரன். எப்படி நடந்தாலும் ஊரின் கண்களிலே நல்லவனாக வாழ முனைந்திருக்கின்றான். மைக்கேல் மனம்போனவாறு பழகுபவன். அவனுடைய செயல்கள் எல்லாவற்றையும் பாலெழுச்சி உந்துதல்களே வழி நடத்தியிருக்கின்றன. கொள்ளை இன்பங்களை நாடி அலைந்தவன். 'வாத்தியா'ரிலே ஏற்பட்ட பக்திகூட, அவருடைய கதாநாயகியர் மீது கொண்ட பால்வேட்கையின் ஓர் எதிர்மறைத் தாக்கந்தான். மனம்போன வழிகளிலே வாழப் பழகிக் கொண்ட மைக்கேலினால், கத்தோலிக்க மதத்தின் சட்டங்களுக்குக் கட்டுப்படவும் முடியவில்லை. திருச்சபையினர் மைக்கேலை எந்த விஷயத்திலும் கத்தோலிக்கன் என்று ஏற்றுக் கொள்வதும் இல்லை. மைக்கேல் தான் உழைத்து, உழன்று அனுபவித்து மகிழும் உலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத ஓர் அறையைத்தான் தன் நிரந்தர வசிப்பிடமாக்கியிருக்கின்றான். மைக்கேல் நடமாடிய அந்த உலகத்தைச் சேர்ந்த எவனும் இத்தகைய ஒரு சிறு அறையில் நால்வரிலே ஒருவனாக மைக்கேல் வாழ்வான் என்று கற்பனை கூடச் செய்யமாட்டார்கள். இத்தகைய ஒரு ஏற்பாடு பரமசிவத்தை நேரடியாகக் கண்காணிக்கவும் உதவியது.

''ரீட்டா எச்சில்பட்ட கனி என்பதை பரமசிவம் அறிவான். அதற்காகத்தான் அந்த மணப் பிரஸ்தாபத்தை மறுப்பதாகச் சொல்லப் பரமசிவத்திற்குத் தைரியமில்லை. இந்தச் சிக்கலிலிருந்து நழுவுவதற்கு பரமசிவம் தன் ஆற்றலுக்கு ஏற்ற ஒரு கதையை உலவவிட வேண்டி இருந்தது. பரமசிவம் சிருஷ்டித்த காலஞ் சென்ற

அம்மாவுக்குக் கொடுத்த வாக்குறுதி என்பது இதுதான். மதமாற்றம் செய்யக்கூடாது என்ற வாக்குறுதியிலிருந்து விலகமுடியாது என்று நடித்திருக்கின்றான். ரீட்டாவை பரமசிவத்திற்குக் கட்டிவைக்க வேண்டும் என்ற தீவிரமும் அவசியமும் ஜோசப்புக்கு இருந்ததுபோல, மைக்கேலுக்கு இருக்கவில்லை.

''பரமசிவம் இரகசியத்தில் ஏற்படுத்தி வைத்த பண வசதியை ஜோசப் சகோதரர் போன்று வேறு யாரும் அறியவில்லை. அறிந்திருந்தால் வசதியாக ஓர் இடத்தில் அவனுக்குக் கல்யாணம் நடைபெற்றிருக்கலாம்.

மரகதம் பற்றிய பிரஸ்தாபம் வந்ததும், அதனைப் பரமசிவம் ஏற்றிருக்கின்றான். இதற்கான காரணத்தினை அறிய முடியவில்லை. தனிப்பட்ட மனிதனுடைய எல்லாச் செயல்களுக்கும் காரணங்களும் கற்பிக்க இயலாது. மனிதச் செயல்கள் பற்றிய ஆராய்ச்சிகளை வைத்துக் கொண்டு எல்லைக் கட்டுடைய பொதுப் பண்புகளையே நாம் அறிந்து கொள்ளலாம்.

''ஜோசப்பின் நஞ்சரிப்பை ஓரளவுக்கேனும் திருப்தி செய்வதற்காகப் பரமசிவம் ஏலவே விவாகம் செய்தவன் என்ற கடடுக் கதையைமைக்கல் நடமாடவிட்டிருக்கின்றான். இதைப் பற்றி வீரையன் கவலைப்படவில்லை. மரகதம் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று கூறமுடியாது. இதனைப் பற்றிக் கேட்கவும் செய்திருக்கின்றாள். மரகதத்தைத் திருப்தி செய்வதற்காக பரமசிவம் அவளைக் கொழும்புக்கும் ஒரு தடவை அழைத்து வந்திருக்கின்றான். மரகதத்தினை நேரிலே பார்த்த பிறகுதான் மைக்கேலின் மனம் மாறியிருக்கின்றது.

''பரமசிவத்தைக் கள்ளத் தோணியாக அனுப்பி வைத்தால் ஜோசப்பிற்குப் பண ஆதாயம். பரமசிவம் இவ்வளவு காலமும் கொடுத்து வைத்திருந்த பணத்திற்குக்

கணக்குக் காட்டவேண்டியிருக்காது. ரீட்டாவின் சிக்கலிலிருந்து ஒரு திருப்தியான பரிகாரத்தினைத் தேடித் தராத அவனைப் பழிக்குப் பழி வாங்குவதாகவும் இருக்கும். தெரிந்தோ தெரியாமலோ, பரமசிவத்தின் நெருங்கிய நண்பன் மைக்கலே என்று மரகதம் நம்பியிருக்கின்றாள். இந்த நம்பிக்கையை வைத்துக்கொண்டு நிலைமைகளைச் சாதகமாகப் பாவித்துக் கொள்ளலாம் என்று மைக்கேல் நினைக்கலாம். மைக்கேலின் பசப்பு வலையில் மரகதம் விழாதிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்தப் பொறுப்பு உங்களுடையது தான்?

"இந்த விஷயங்களை வீரையனோ மரகதமோ அறிந்து கொள்வதினால் எந்த வித பயனும் இல்லை. மரகதத்தினைப் பரமசிவத்துடன் அனுப்பி வைப்பதற்கும் வழியில்லை. எந்தச் சூழலிலும் பரமசிவத்தின் மனைவியாக வாழ்ந்து விட வேண்டும் என்ற தீவிரம் மரகதத்திற்கு உண்டு. 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற பாரதப் பெண்களின் பண்பு என்று ஏதாவது சொல்லிக் கொள்ளலாம், ஆனால், பரமசிவத்திற்கு! அவன் கட்டிய கனவுகள் எல்லாம் நொறுங்கி விட்டன. அந்தத் தோல்வி களிலிருந்து விடுபட்டு மரகதத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கக் கூடிய நிலையிலும் அவன் இல்லை. மரகதத்தினால் பரமசிவத்தின் மனோநிலையை மாற்றவும், வாழவேண்டும் என்ற நம்பிக்கை ஊட்டவும் முடியும். ஆனால், மரகதத்தினைப் பரமசிவத்துடன் அனுப்பி வைக்கச் சட்டத்தில் இடம் இல்லை அவள் அவனுடைய சட்டபூர்வமான மனைவி என்று நிறுவுவதற்கு அவர்களுடைய திருமணம் பதிவு செய்யப்படவில்லை.

சுல்தான் ராவுத்தர் சில பல இடங்களிலே தம்முடைய ஊகங்களையும் இணைத்துத்தான் இந்த வரலாற்றினைத் தொடுத்திருக்கின்றார் என்பதைத் தோழர் பாண்டியன் உணர்ந்தார். வாழ்க்கையின் இந்த அம்ஸத்தைப் பற்றிச் சிந்திப்பதிலே தோழர் என்றுமே அக்கறைப் பட்டது

கிடையாது 'உடலுறவுகள், அதன் மூலம் ஏற்படும், சிக்கல்கள், உறவு முறைகள் எல்லாமே 'பூர்ஷ்வா' சமூகத்தின் அவலங்கள்' என்ற விளக்கத்தினையே தோழர் பாண்டியன் அடிநாளிலிருந்து ஏற்றுள்ளார். 'காதல் பற்றிய பிரஸ்தாபங்களும் கதைகளும் வர்ணனைகளும் 'பூர்ஷ்வா' வர்க்கத்தின் போகத்தினைப் பெருக்க இயற்றப்படும் போதைப்பொருள்' என்று முற்போக்கு அணியின் இலக்கியப் பிரமாக்கள் மேடைகளிலே திருவாய் மலர்ந் தருளிய போதெல்லாம் தோழர் கரகோஷம் செய்து தம்முடைய அங்கீகாரத்தினையும் திருப்தியுடன் அளித்திருக்கின்றார், அப்படிப்பட்ட சோஷலிசம் நோக்கிய பயணம் விரைவாக்கம் பெறும் வகையிலே தொழிற்சங்க நடவடிக்கைகளிலே ஈடுபடும் தான் மரகதம் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட விஷயங்களிலே ஈடுபட்டுக் கொழும்பு நகரிலே நாட்களை வீணே ஓட்டிக்கொண்டிருப்பது முறையல்ல என்ற ஒரு குற்ற உணர்வும் தோழர் பாண்டியனின் மனத்தினை உலுக்கலாயிற்று.

'மனிதனுடைய வாழ்க்கையில் எவை தனிப்பட்ட விஷயங்கள்? எவை சமுதாய விஷயங்கள்? இவற்றை நிர்ணயிப்பதற்கு விஞ்ஞான அளவு கோல்கள் உண்டா?' இத்தகைய கேள்விகள் நெஞ்சில் அலைமோத, தோழர் பாண்டியன் கடலைப்பார்த்துக் கொண்டே இருந்தார்.

## 8

''மரகதம்.... நண்பன் பரமசிவத்தை நாங்க காப்பாத்தி யாகணும்? இல்லையா?'' என்று மைக்கேல் கேட்டான்.

''இதென்ன அண்ணாச்சி கேள்வி... அவருதானே என் வாழ்வு? அவரு இல்லாட்டி நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்...'' என்று கூறிய மரகதம், என்ன செய்கின்றோம் என்ற உணர்வின்றி, கையெடுத்துக் கும்பிட்டாள்.

"உங்க அப்பா படிக்காத மனுஷன்... விஷயம் வெளங்காது..."

"ஆமா... அவருக்கு வெஷயம் வெளங்காது..."

"தோழர் பாண்டியன் ஒரு அரசியல்வாதி. ஒரு தொழிற்சங்கவாதி... அவரால் உன்னுடைய உள்ளத் துடிப்பைப் புரிஞ்சு கொள்ள முடியாது..."

"ஒத்துக்கிறேன்..."

"நாளைக்கு பரமசிவத்தைத் தலைமன்னார் கோச்சியிலே அனுப்பிவைச்சிடுவாங்க.... அதற்கிடையிலே ஏதாவது செஞ்சாகனும்..." என்று கூறிய மைக்கேல், மரகதத்தை ஏற இறங்கப் பார்த்தான்.

"நீங்க கண் கண்ட தெய்வம் அண்ணாச்சி... உங்களத் தான் நம்பியிருக்கேன்..."

தனக்கு நேர்ந்துள்ள இந்த அவலக்கதியிலிருந்து, தான் அறிந்தவர்களுள் மைக்கேலைத் தவிர வேறு யாரும் உதவக் கூடிய நிலையில் இல்லை என்பதை அவளும் உணர்ந்திருந்தாள்.

"மரகதம்! நான் சொல்றதக் கவனமாக் கேட்டுக்கோ... உனக்கு இஷ்டமெண்ணாச் செய்... இல்லாட்டி விட்டிடு..."

"அவரக் காப்பாத்திறதுக்கு நான் உயிரை விடக்கூடத் தயாரா இருக்கேன் அண்ணாச்சி..."

"இமிகிரேஷனில எனக்குத் தெரிந்த ஒரு பெரிய உத்தியோகத்தர் ஒருத்தர் இருக்கார். அவர் 'பரமசிவத்தை விடுதலை பண்ணு' என்று ஒரு ஓடர் போட்டாப்போதும், மறுகணமே பரமசிவத்தை விடுதலை செய்திடுவாங்க..."

"அந்தப் பெரிய மனுஷனக் கண்டு பேசுங்க அண்ணாச்சி..."

"நான் தனியாக் கண்டு பேசினாச் செய்திடுவாரா? நீ ஒண்ணு விஷயம் தெரியாத பொண்ணா உளர்றியே..."

"ஒங்களுக்குத் தெரிஞ்சவர்...செய்ய மாட்டார்களா?.." சற்று முன்னர் ஏற்றப்பட்ட நம்பிக்கைச் சுடர் தன் கண் முன்னாலே அவிந்துபோகும் அவசரத்திலே மரகதம் கூறினாள்.

"இந்த உத்தியோகத்தருடைய போக்கே இப்படித்தான். அறிமுகத்துக்காக மட்டும் ஒரு விஷயத்த செஞ்சு தர மாட்டாங்க... ஒரு விஷயம் நமக்கு ஆகணும் எண்ணா ஒரு சிலரைப் 'பொல்'லோட போயப் பார்க்கணும்... வேறு சிலரைப் பணத்தோட போய்ப் பார்க்கணும்...வேறு சிலரைப் பெண்ணோட போய்ப் பார்க்கணும்... இவர் அந்த மூணாவது டைப்..."

"பெண்ணோட போய்ப் பார்த்தா எதுக்காகச் செஞ்சு கொடுக்கிறாங்க?..." கருத்து விளங்கியும் விளங்காத ஒரு நிலையிலே மரக்தம் கேட்டாள். மரகதத்தின் தயக்கத்தினை மைக்கேல் சட்டென்று விளங்கிக் கொண்டான்.

"பெண் எண்ணாப் பேயும் இரங்கும்' என்று தெரியமலா பெரியவங்க சொல்லி இருக்காங்க. இதோ பாரு மரகதம். பரமசிவம் வெளியிலே வரணும் எண்ணா நீ போய் அந்த உத்தியோகத்தரைப் பார்த்துத்தான் ஆகணும்...வேறு வழியே இல்ல..."

"எப்படியோ அண்ணாச்சி. அவரு வெளியே வந்தாப் போதும்..."

"உத்தியோகத்தரை பார்க்கப் போறப்போ...உன் அப்பாவோ, தோழர் பாண்டியனோ வ்ரக்கூடாது...."

"ஏன்? அவங்க வந்தா என்ன?"

"அவங்க வந்தா என்ன எண்ணு நல்ல கேள்வி கேட்டியே...அந்த உத்தியோகத்தர் செய்யிறது ஸ்பெஷல்

உதவி, அதைப் பத்துப் பேரு பாக்கவா செஞ்சு கொடுப்பாரு? தோழர் பாண்டியன் 'நேர்மை' அது இதெண்ணு புலம்பினா அந்த மேலதிகாரியினுடைய உத்தியோகத்துக் கெல்லா ஆபத்து?... உதவி செய்யிறவருக்கு, அவர கஷ்டத்தில மாட்டி வைக்கிறதுதான் நாம் செய்யிற கைமாத்தா? அவங்க ரெண்டு பேரயும் நீதான் 'கட்' செய்ய வேணும்....அது உன் சமத்து..."

"சரி பார்க்கிறேன்..."

"மூணு மணிக்கு இங்க ஒரு பெண் வருவா...அவள் உனக்கு நல்லா 'டிரெஸ்' செய்து அலங்காரஞ் செய்து விடுவா..."

"இதெல்லாம் என்னத்துக்கு அண்ணாச்சி?..."

"என்ன மரகதம் நீ...உன் மூஞ்சியைப் போயி ஒரு தடவை கண்ணாடியில பார்த்துக்கோ... 'நான் ஒரு தோட்டத்து பெண்' என்று உன் டிரெஸிலயும் மூஞ்சியில யும் எழுதி வைச்சிருக்கே!"

"அதுக்கென்ன? நான் தோட்டத்துப் பெண்ணுதானே? இதில் வெக்கப்படுறதுக்கு என்னா இருக்கி..."

"அதில வெட்கப்படுறதுக்கு ஒண்ணும் இல்லை என்றத நான் ஒத்துக்கிறேன்....அந்த உத்தியோக ஐயாவோட இந்தத் தோட்டத்துப் பெண்ணுக்கு என்ன வேல எண்ணு நாலு பேரு உத்துப்பாக்க மாட்டங்களா என்னா...ஏன்?" எதுக்கு என்னு கேள்வி கேட்டுக்கொண்டு நிக்காதே... பரமசிவம் வெளியே வரணுமென்னா நான் சொல்றபடி செய்யணும்... இல்லாட்டி ஏன் எனக்கு இந்த வீண் வம்பு? பரமசிவம் என் நண்பன் ஆனா, அவன் இந்தியா போறதால எனக்கு என்ன நஷ்டம்? நான் வாறன்" என்று பொய்க் கோபத்துடன் மைக்கேல் எழுந்தான்.

"இல்ல அண்ணாச்சி...நான் நல்ல பிள்ளையாட்டம் நீ சொல்றபடி எல்லாம் கேட்டு நடந்துகிறேன்..."

"குட்...அதுதான் ஒரு நல்ல பெண்ணுக்கான இலட்சணம்..." என்று கூறிய மைக்கேல் புன்னகைத்தான்.

★ ★ ★

மரகதம் காரிலே ஏறினாள். வீரையாகூட, தான் பெற்ற மகளை இந்தக் கோலத்திலே கண்டால் சட்டென்று இனங்கண்டு கொள்ள முடியாது. அவள் ஒரு நவநாகரிக யுவதி போலக் காட்சியளித்தாள்.

மைக்கேல் ஏறிக் காருக்குள் அமர்ந்துகொண்டதும், கார் புறப்பட்டது.

கார் ஓடும் இரைச்சலைத் தவிரக் காருக்குள் அமைதியே நிலவியது. அந்த நீண்ட மௌனம் எரிச்சல் தருவதாகவும் இருந்தது.

"மைக்! எப்படி நான் இந்தப் பெண்ணுக்குப் போட்ட மேக்—அப்? அசல் சினிமா ஸ்டார்போல இல்லையா?" என்று மஞ்சுளா மௌனத்தைக் கலைத்தாள்..

மைக்கேல் வேறு ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். மஞ்சுளா நாலு பாராட்டு வார்த்தைகளை எதிர்பார்த்துத்தான் இப்படிக்கேட்கின்றாள் என்று நினைத்துப் பாராமல், நீ கொழும்பிலுள்ள நாடக மேடையிலே நடிப்பை ஒழுங்காக் கத்துக்காவிட்டாலும், இந்த மற்ற விஷயங்களை ஒழுங்காக் கற்று வைச்சிருக்கிறாய்...நான், "வன் நாட் செவன்" பஸ்போற ரூட்டிலே 'ட்றொப்' பண்றன்..." என்று கூறி, காரின் பின் பக்கமாகத் திரும்பி, வேறெதாவது கார் பின்தொடருகின்றதா என்பதை நிதானித்தான்.

கார் ஓடிக் கொண்டிருந்தது.

★★★

அந்த ஹோட்டேல் அறைக்குள் நுழைந்ததும் மரகதம் திடுக்கிட்டே போனாள். இப்படி ஏதாவது நடக்கும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத அப்பாவி. இல்லாவிட்டால், இங்கு மைக்கேலுடன் தனிமையில் வருவதற்கு தோழர் பாண்டியனிடம் அவ்வளவு பொய் பேசியும் இருக்க மாட்டாள். அலங்காரஞ் செய்த பெண்—மஞ்சுளா—சில அங்கங்களைத் தொட்டு விரசமாகப் பேசியதையும் அனுமதித்திருக்க மாட்டாள்.

நடந்தவை நடந்துவிட்டன, 'பெண் புத்தி பின் புத்தி' என்று அழுது புலம்பினால் பயனில்லை. இனி விஷயங்களை விழிப்புடன் இருந்து சமாளித்தால் மட்டுமே தப்பலாம் என்ற உண்மையை மரகதம் நன்கு தெரிந்து கொண்டாள்.

ஹோட்டல் அறையின் கதவைத் தாழ்ப்பாளிட்டு மைக்கேல் திரும்பினான் தன்னுடைய திட்டம் இவ்வளவு நேர்த்தியாகச் செயற்படும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை 'இது சட்டியில் போட்ட கறி... போட்டு ஒரு பிடி பிடிக்க வேண்டியதுதான்' என்று மைக்கேல் நினைத்துக் கொண்டாலும், மரகதம் தனது திட்டத்திற்கு இசையாமல் எதிர்த்துப் போராடவுங்கூடும் எனவும் எதிர்பார்த்தான்.

"அண்ணாச்சி! மேலதிகாரியப் பாக்கணும் பேசணும் என்னு சொன்னீங்க.... ஒங்க பேச்சைத் தட்டாம ஒங்ககூட வந்தன்... நீங்க இங்க கொண்டாந்து..."

"மரகதம்! உத்தியோககாரனுக்குப் போத்தல் கொடுக்கணுமென்னா அவங்க வீட்ட கொண்டு போய்க் கொடுத்திடனும்... பணம் கொடுக்கிற எண்ணா அவர் சொல்ற ஏஜண்டிடங் கொடுத்திடணும்... பெண் எண்டா இப்படி ஏற்பாட்டோடதான் சந்திப்பாங்க.... ஏனென்னாப் பாரு... அவங்க சட்டம் படிச்சவங்க... சட்டத்தை நடைமுறைப் படுத்திறவங்க... அதனால எதயும் ஒரு ஒழுங்கு முறையிலதான் செய்வாங்க... அவரு கொஞ்ச

நேரத்தில இங்க வந்திடுவாரு... அவரு வந்தோடன என்ன செய்யனும் எண்ணு தெரியுந்தானே..."

"அவருடைய கால்களைப் பிடிச்சுக்கொண்டு, 'எனக்கு வாழ்வுப் பிச்சை தாரும் சுவாமி' என்று கெஞ்சிக் கதறுவேன்... அதச் சொல்றதுக்குக்கூட ஒத்திகை அவசியமா?..." என்று மரகதம் அலுத்துக் கொண்டாள்.

இதற்குமேல் மைக்கேலால் பொறுமையுடன் இருக்க முடியவில்லை. "மரகதம்... இப்படி வந்து இதில இரு... என்ன சொல்லனும்... என்ன செய்யனும் என்னு நான் சொல்லித்தாரேன்..." என்று மரகத்தின் கையைப்பிடித்து இழுத்து வலுக்கட்டாயமாகக் கட்டிலில் அமர்த்தினான்.

இதற்கு மேலும் வசனம் பேசி நிலைமையைச் சமாளிக்க முடியாது என்பதை மரகதம் பூரணமாக உணர்ந்தாள் பரமசிவத்தினைத் தடுப்பு முகாமிலிருந்து விடுவிப்பதற்கு அவள் உயிரைக் கொடுப்பதற்குக்கூடச் சித்தமாக இருந்தாள். பரமசிவத்தின் விடுதலை என்ற தூண்டிலை மைக்கேல் எறிந்ததும், அதிலே தான் அசட்டு மீனைப்போன்று வகையாக மாட்டிக் கொண்டதும் ஒரு புறமிருக்க...சந்தர்ப்ப சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு, தன்னுடைய உடலைச் சுவைக்க மைக்கேல் நன்றாகத் திட்டம் போடடுச் செயற்பட்டு விட்டான் என்ற உண்மையையும் அவளால் உணர முடிந்தது.

மனித வாழ்க்கை தன் தேவைகளைத் திருப்தி செய்வதற்கு நடத்தப்படும் போராட்டந்தான். மனித உலகின் விசித்திரந்தான் என்ன? தேவைகளை நிராகரிப் பதற்காகவும் போராட வேண்டியிருக்கின்றதே!

தன் ஆசையை அடைய மைக்கேல் மூர்க்கங் கொண்டான்.

அயோக்கியத்தனமான அந்த ஆசையை நிராகரித்து, காலங் காலமாகப் பாரதப் பெண்கள் காத்து வந்த பண்புகளை நிலைநாட்டும் வெறியிலே மரகதம் போராடினாள்.

★★★

மரகதத்தின் நடமாட்டத்தினை எச்சரிக்கையுடன் கவனிக்கும்படி சுல்தான் ராவுத்தர் கூறியிருந்தார். "எதற்கான எச்சரிக்கையாக இருக்கவேண்டும்?" என்று கேட்டு, விஷயத்தைத் தோழர் விளங்கிக் கொள்ளவில்லை பரமசிவத்திற்கு நேர்ந்துள்ள துர்க்கதியினால் அதிகம் பாதிக்கப்படுவது மரகதம். இத்தகைய சஞ்சலங்களுக்குள்ளே மாட்டிக்கொண்ட ஒரு பெண் எப்படி எல்லாம் நடந்து கொள்ளுவாள் என்பதைச் சொல்வதற்கில்லை. எனவே எதற்கும் அவளை விழிப்புடன் கவனித்து, நல்லபடியாக அவளுடைய தோட்டத்திலே கொண்டு போய் விடவேண்டும் என்ற பொறுப்பினைத் தோழர் பாண்டியன் தன்னுடைய பொறுப்பாக ஏற்றுக்கொண்டார்.

தான் ஒரு முறை மேலதிகாரியைப் போய்ப் பார்த்தால் விஷயத்திலே அநுகூலம் பிறக்கலாம் என்ற யோசனையை மரகதம் முன் வைத்தபோதுகூடத் தோழர் பாண்டியன் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. 'குறிக்கோள் முக்கியமே ஒழிய,தேனை அடையத் தேர்ந்தெடுக்கும்வழி முக்கியமானதல்ல' என்பதைத் தோழர் தமது சித்தாந்தமாகவே ஏற்றிருந்தார்.தண்ணீரிலே மூழ்கிக் கொண்டிருப்பவனுக்கு எதிரிலே மிதந்துவரும் துரும்புகூட ஓர் ஆதாரமாக நம்பிக்கை தருகின்றது. எனவே, மரகதத்தின் யோசனை மிக இயல்பானது என்றும் அர்த்தப்படுத்திக் கொண்டார். ஆனால், தான் மேலதிகாரியைச் சந்திக்கச் செல்லும் பொழுது, தோழர் பாண்டியனோ தந்தை வீரையனோ தன்கூட வரக்கூடாது என்பதிலே மரகதம் காட்டிய தீவிரந்தான் தோழருக்கு விளங்கவில்லை. மரகதத்தை வற்புறுத்திக் கேட்டால், வீரையன் குழம்பக்கூடும்

என்பதற்காகத் தோழர் வாளாவிருந்தார். இந்த ஏற்பாட்டிலே ஏதோ ஒரு போலித்தன்மை மறைந்து கிடக்கின்றது என்ற உள்ளுணர்வு மட்டும் அவரை உதைத்துக் கொண்டிருந்தது. "ஓர் எட்டு முன்னே செல்வதற்கு இரண்டு எட்டுகள் பின்னே வைக்கலாம்" என்ற உபாயத்தையும் தோழர் அறிவார். எனவே, தாம் எதையும் சந்தேகிக்கவில்லை என்னும் தோரணையில் நடந்து கொண்டார்.

காரிலே மரகதம் ஏறிய கோலத்தையும், அவள் கூட மைக்கேல் ஏறிக்கொண்டதையும் பார்த்ததும், சுல்தான் ராவுத்தர் மைக்கேலின் குணவியல்புகளைப் பற்றிச் சொன்ன செய்திகள் நினைவிலே பளிச்சிட்டன.

நேரத்தினை வீணடிக்காமல், அந்தக் காரினைப் பின் தொடரத் துரித ஏற்பாடுகளைச் செய்தார்.

பஸ் 'ஹோல்ற்' ஒன்றிலே, மஞ்சுளாவை இறக்கி விடுவதற்கு கார் நின்றபொழுதுதான், தோழர் பாண்டியன், மரகதம் சென்று கொண்டிருக்கும் காரை இனங்கண்டார். நெடுஞ்சாலையிலே கார் ஓடத்தொடங்கிய பின்னர், தங்களை யாராவது பின் தொடரக் கூடும் என்ற நினைவிலிருந்து மைக்கேல் முற்றாக விடுபட்டுப் போனான்.

# 9

உறவுகளையும் அவை தோற்றிய பாசங்களையும் எவையெவை நிர்ணயிக்கின்றன? இவை பற்றிய தெளிவினைப் பெறுவதற்கு அகலியதும் ஆழமானதுமான ஓர் ஆராய்ச்சியிலே ஈடுபடவேண்டும். இவற்றை நிர்ணயிப்பதிலே வயதுக்கும் பருவத்திற்கும் ஓர் இடம் இருக்கவே செய்யும். பெண்ணின் வளர்ச்சிக் கட்டத்திலே முதலில் அவள் குழந்தை. அந்த நிலையை அவள் விரும்புகின்றாள்.

பின்னர் அவள் காதலி, அந்த நிலையையும் அவள் விரும்புகின்றாள். பின்னர் அவள் தாய். அந்த நிலையையும் அவள் விரும்புகின்றாள். பாட்டியாக இருக்க விரும்பாது, வீட்டிலிருந்து ஒதுங்கி விடும் கிழவிகளைக் கண்டிருக்கிறோமா? நிலைகளைப் பொறுத்து விருப்பு—வெறுப்களும், வார்த்தைப் பிரயோகங்களும் மாறுகின்றன.

பெருமாள் தன்னுடைய மகன் பெரியசாமியை வளர்த்து ஆளாக்கினான். அவனைப் படிப்பிப்பதற்காக அவன் இயற்றிய நோன்பு பெரியது, தியாகமயமான நோன்பு. தன்னுடைய அவசிய தேவைகளைக்கூட முன்பின் யோசிக்காது பெருமாள் தியாகஞ் செய்திருக்கின்றான். தியாகத்திலே தெய்வீகமான சுகம் இருக்கின்றது என்பதைச் சாமானியர்களினாலே இனங்காண முடியாது. சாதாரண மனிதன் வாழ்க்கையிலே தான் செய்யும் தியாகங்களுக்குப் பிரதியுபகாரம் எதிர்பார்த்தே வாழுகின்றான் தான் செய்த தியாகத்திற்கு எதிர்பார்த்த பிரதியுபகாரம் கிடைக்காவிட்டால், தான் செய்த தியாகத்தை நினைக்க அவனுக்கு வெறுப்பு உண்டாகின்றது. மேற்படி தியாகங்களினாலே பயன் பெற்றவனைக் கண்டால் எரிச்சல் உண்டாகின்றது.

பெரியசாமி, தோழர் பாண்டியன் கொண்டு வந்திருந்த புத்தகங்கள் யாவற்றையும் பரீட்சைக்குப் படிக்கும் மாணவனின் அக்கறையுடன் வாசித்தான். எங்கெங்கோ அலைந்து திரிந்தான். எதைப் பற்றி எல்லாமோ ஆழ்ந்து சிந்தித்தான். தொழிலாளருடைய பிரச்சினைகள் பற்றி அதிக அக்கறையுடன் பல்வேறு தரப்பட்டதளங்களிலிருந்து விசாரித்தான். இந்தப் போக்குப் பெருமாளுக்குப் புரியவில்லை. அத்துடன் எரிச்சலையும் ஊட்டியது.

பெருமாளுக்கும் பெரியசாமிக்கும் இடையே இருந்த உறவில் விரிசல் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், அவர்களுக்கிடையிலே அடிக்கடி ஏற்பட்டு வந்த தர்க்கம் அவர்

களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்திவிடுமோ எனக் கோமதி பயந்தாள்.

அன்று காலையிலும் பெருமாள் முணு முணுக்க ஆரம்பித்தான். அந்த முணுமுணுப்பு இப்பொழுதெல்லாம் பெருமாளின் சுபாவமாகக்கூட மாறிவிட்டது.

"மாரியாயி, நீ எப்பவும் ரோஷக்காரிதான். ஒன் மகன் ஒழைபபில சாப்பிடக்கூடாது என்று போயிட்ட..." இது பெரியசாமியின் செவிகளிலும் விழ வேண்டும் என்ற அழுத்தத்துடனேயே முணுமுணுத்தான்.

"நீங்க சொல்லுறதப் பார்த்தா, எனக்கு வேலயே கெடைக்காது மாதிரியல்ல பேசுறீங்க... போனது போகட்டும்.... நாளைக்கே நம்ம பெரியதொரை கிட்ட சொல்லி என் பெயர பதிஞ்சிடச் சொல்லு.... நாளையில இருந்து நானும் தோட்டத்திலே வேலைக்குப் போறன்..." இதைப் பெரியசாமி ஒரு தர்க்கத்திற்காகச் சொல்ல வில்லை அப்படி வேலையிலே சேர்ந்து கொள்வதை உண்மையில் பெரிய சாமியின் மனம் நாடியது.

"அட சாமி... இந்தத் தோட்டத்தில கூலிவேல செய்ய வாடா இவ்வளவு கஷ்டப் பட்டு படிக்க வைச்சேன்? மத்தவங்க புள்ளைங்க மாதிரி இல்லாம நீ படிச்சி பாஸ் பண்ணி இந்தத் தோட்டத்து ஆபீசு கிளாக்கரையா மாதிரி, டீ மேக்கர் ஐயா மாதிரி நீயும் நீட்ட கால்சட்டையப் போட்டுக்கிட்டு, அவங்களோட ஏஸ்பூசுன்னு இங்கிலிசுல பேசனும்... நீ தோட்டக் காட்டிலேயே வேலை செய்யாம டவனுக்குப் போய் பெரிய உத்தியோகம் பார்க்கணுங்கிற ஆசையில தாண்டா படிக்க வைச்சேன். என் ஆசையில மண்ணை வாரிப் போட்டு கூலி வேலை செய்யப் போறேங்கிற... ஒனக்கு மூள இருக்கா?" என்று பெருமாள் தன் உள்ளத்திலே வியாபித்துக் கிடந்த ஆசைகளை எல்லாம் கூச்சநாச்சம் எதுவுமின்றிப் பொரிந்து தள்ளினான்.

''என்ன என்னதான் செய்யச் சொல்றீங்க... நானும் முயற்சி பண்ணித்தான் பார்க்கிறேன்...''

''நீ பெரிய உத்தியோகம் பார்க்கணும்... அதப் பார்த்து தோட்டத்து ஆளுங்க மூக்கில கை வைக்கணும். அது மட்டுமில்லடா... 'அட பெருமாளு, ஒனக்கென்ன குறைச்சல்? நீ கொடுத்து வைச்சவன்... உனக்கென்னா ராஜாமாதிரி ஒன் மகன்தான் பெரிய உத்தியோகம் பார்க்கிறானே.... ஆயிரம் ஐநூறுன்னு சம்பாதிக்கிறானே...' என்று இந்தத் தோட்டத்து ஆளுங்களே சொல்லணும்... அத இந்தக் காதுகளாலே கேட்கணும்னு தாண்டா இந்த உசிரையே வெச்சிக்கிட்டிருக்கேன்...''

முன்னரும் ஒரு சந்தர்ப்பத்திலே, இதே ஆசைகளை, வேறுவார்த்தைகளிலே பெருமாள் வெளியிட்டிருக்கின்றான். அதற்குப் பெரியசாமி கூறிய பதிலை நினைத்துப் பார்த்தான். 'அப்பா நம் மாதிரி ஆசை இருந்தா இல்ல தோட்டத்தில எல்லாத் தாய் தகப்பனுக்கும் இருந்திருக்குமுன்னா, இந்த மலைநாடு எப்பவோ முன்னேறியிருக்கும். படிக்கிற வயதிலே வேலை செய்ய வேண்டியிருக்கே... பெத்தவங்கதான் பிள்ளைகளைச் சீரழிச்சி விடுறாங்க.. தன் பிள்ளைகளை யெல்லாம் எப்படியும் படிக்கவைக்கனுங்கிற எண்ணமாவது நம்ம தோட்டத்து ஆளுங்களுக்கு எப்ப வருமோ...' என்று ஏதோ சொன்னதாக ஞாபகம். இந்தப் பதிலை அவன் கூறியபொழுது அவனுடைய சிந்தனைகளின் பக்குவம் வேறுநிலையில் இருந்தது

ஆனால் இன்று....

''தோட்டத்துல வேலை செய்த முந்தின தலைமுறையினர் கோழைகள். தாங்கள் சுரண்டப்படுவதை உணராது, 'வேலை தந்தவனுக்கு விசுவாசமா உழைக்கணும்' என்கிற அடிமைப் புத்தியிலே ஓடாக உழைத்த அப்பாவிகள். அவங்க வர்க்க போதம் அடையல்ல...தாங்க வாழ்ந்த

தோட்டமே முழு உலகமும் என்ற அறியாமையில வாழ்ந்துட்டாங்க.. விசுவாசம் என்ற சொல்லு முதலாளி வர்க்கத்தை பொறுத்த மட்டில் வெறும் அலங்காரச் சொல்... தொழிலாள வர்க்கத்தச் சுரண்டித் தன் வசதிகளைப் பெருக்கிக் கொள்வதுதான் முதலாளி வர்க்கத்தின் சுபாவம்.. இந்த இரண்டு வர்க்கங்களும் முரண்பட்டவை. 'நடுவழி' என்றும், 'ஜனநாயக சோஷலிசம்' என்றும், 'கலப்புப் பொருளாதாரம்' என்றும் ஒட்டுப் பிளாஸ்திரி போட்டு, இந்த முரண்பட்ட இரண்டு வர்க்கங்களுக்குமிடையில் இணக்கம் கண்டுவிட முடியாது...பெற்றி பூர்ஷுவா வர்க்கத்தினரும் தேசிய முதலாளி வர்க்கத்தினரும் ஆட்சியக் கைப்பத்துறதுக்கு இந்தக் கோஷங்கள் உதவலாம்....வர்க்க முரண்பாட்டினாலே எழக்கூடிய போராட்டத்திற்கு நம்மை நம் முந்திய தலைமுறையினர் போதமடைந்தவர்களாகப் பக்குவப்படுத்தி எடுக்கவில்லை...' இவ்வாறெல்லாம் பெரியசாமியின் சிந்தனைகள் சடைத்து வளரலாயின...

'தலைமுறை இடைவெளி' என்பது முதலாளித்துவ நாடுகளிலும், முதலாளித்துவ சமுதாயத்திலும் தோன்றியுள்ள பிரச்சினையல்ல. அது உலகளாவிய ஒரு பொதுப் பிரச்சினையாகும். மார்க்ஸிஸ சித்தாந்தங்கூட ஒரு காலக் கட்டத்தின் தரவுகளை வைத்துப் பெறப் பட்டதுதான். புதிய வளர்ச்சிகளுக்கு ஏற்ப அதனைப் பொலிவுபடுத்துதல் வேறு விஷயமாகும்.

பெரியசாமி பதில் ஏதும் பேசாது, ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருப்பது பெருமாளுக்கு மேலும் எரிச்சலை ஊட்டியது.

''அட சாமி...நான் என் பாட்டுக்குப் பேசிட்டே இருக்கேன்..ஒரு மரியாதைக் கென்றாலும் ஒரு பதில் சொல்றது இல்லயா...'' இந்தப் பேச்சிலே கண்டிப்புக்குப்

பதிலாக, ஒருவகைப் பாச உணர்வும் மேலோங்கி நிற்பதைப் பெரியசாமி இனங்கண்டான்.

"ஏதோ ஒங்க ஆசை நிறைவேறும்னுதான் நானும் ஆசைப்படுறன்.."

"எல்லாற ஆசைகளையும் மாஆத்தா நெறவேத்தி வைப்பா..." என்று கூறிக்கொண்டு கோமதி தேநீருடன் அவ்விடம் வந்தாள்.

★ ★ ★

மரகதத்திற்குச் சுய நினைவு வந்ததும், தான் மருத்துவமனைக் கட்டிலிலே கிடப்பதை உணர்ந்தாள். மரகதம் தன் மானத்தைக் காப்பாற்ற மைக்கேலுடன் நடத்திய ஜீவமரணப் போராட்டத்திலே மூர்ச்சை அடைந்தாள். அதற்குப் பின்னர் நடந்த எதுவுமே அவளுக்கு நினைவில் இல்லை.

'மைக்கேல் என்னவானான்? யார் என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தது? இனி அப்பாவையும் தோழர் பாண்டியனையும் இந்தப் பெண்ணம் பெரிய கொழும்பூரிலே எப்படிக் கண்டுபிடிப்பது!' இப்படிப் பல கேள்விகள் மரகதத்தின் மனத்திலே எழலாயின.

தலையைச் சற்றே தூக்கி, சூழலை நிதானித்த பொழுது, அவள் மனத்திலே குடிகொண்டிருந்த அண்டகாரமான பயங்களிலே சில மெல்ல விலகத் தொடங்கின.

வராந்தாவில், ஓர் ஒதுக்குப் புறத்திலே, டாக்டர் ஒருவர் தோழர் பாண்டியனுடன் பேசிக் கொண்டிருப்பது மரகதத்தின் பார்வையிலே விழுந்தது. தோழர், டாக்டர் சொல்பவற்றை மிக உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

வராந்தாவுக்கு அப்பால், செழுங்கிளைகள் பரப்பி நின்ற மாமரத்தின நிழலிலே தந்தை வீரையன் சோகமே உருவாக நின்று கொண்டிருப்பதையும் மரகதம் அவதானித்தாள்.

'மரகதம் விழிகளை மூடிக்கொண்டாள். அவளுடைய மனத்திலே புதிய பிரச்சினைகள் எழத்தொடங்கின. வீரையனையும் தோழர் பாண்டியனையும் எப்படி முகம் கொடுத்துப் பார்ப்பது என்ற கவலையும் தலைதூக்கியது. மைக்கேல் அயோக்கியனாக இருக்கலாம். அப்பாவுக்கும் தோழருக்கும் தெரியாமல், நவநாகரிக அலங்காரத்துடன், தன்னந் தனியாகக் காரிலே பயணத்தினைத் தொடங்கிய அந்தக் கணமே தன்னுடைய மானத்தைத்தான் இழந்து விட்டதான குற்ற உணர்வும் அவளுடைய மனத்தை அரிக்கலாயிற்று.

மீண்டும் மரகதம் கண்விழித்துப் பார்த்த பொழுது வராந்தாவில் டாக்டரையோ தோழரையோ காணவில்லை. அப்பால், மாமரத்தை நோக்கி மரகதத்தின் பார்வை விரிந்தது. மாமரத்தின் நிழலைத் தாண்டி வீரையனும் தோழரும் நடந்து கொண்டிருப்பது தெரிந்தது.

டாக்டர் கூறிய எதையும் தோழர் வீரையனுக்குச் சொல்லவில்லை. மௌனமாகவே நடந்து கொண்டிருந்தார். ஆனால், டாக்டர் கூறியவற்றிலிருந்து அவருடைய மனம் விடுபடவில்லை.

மரகதம் மைக்கேலுடன் நடத்திய போராட்டத்தின் போது, மைக்கேல் வன்முறையைப் பிரயோகித்திருக்கின்றான். அவளை மடக்கி, அடிபணிய வைக்கும் எத்தனத்திலே, மைக்கேல் அவளை உதைத்திருக்கின்றான். ஒரு பெண்ணாலே தான் தாக்கப்படுவதைத் தாங்க முடியாத ஆவேசத்தினாலேதான் அவ்வாறு தாக்கியிருக்கின்றான். எங்கே அடிக்கின்றோம், உதைக்கின்றோம் என்ற இலக்கோ குறியோ அவனுக்கு இருக்கவில்லை. அந்த

உதையின் பலமான தாக்கம் தொடையிலும், விரல்களின் தாக்கம் அடிவயிற்றிலும் விழுந்தது. அக்கணமே மரணாவஸ்தைப்பட்டு அலறலுடன் மரகதம் மயங்கி வீழ்ந்தாள்.

அவள் அவ்வாறு மயங்கி வீழ்ந்ததைக் கண்டதும், அவள் உண்மையிலேயே செத்துப் போனாள் என்ற பயம் மைக்கேலுக்கு ஏற்பட்டு திகைத்து நின்றான் அடுத்து என்ன செய்யலாம் என்று நிதானிப்பதற்கிடையில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது கதவு பலமாகத் தட்டப் படவே, மரகதத்தைக் கொலை செய்த குற்றத்திற்காகத் தன்னைக் கைது செய்யப் போலீஸார் கதவைத் தட்டுவதாக மைக்கேல் கற்பித்துக் கொண்டான். அவர்களிடமிருந்து தப்பிவிட வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர எதுவுமே மைக்கேலுக்கு எழவில்லை. யன்னல் மூலமாக வெளியேறி, தன் சுவடுகூடத் தெரியாது தப்பி ஓடிவிட்டான்.

தோழர் பாண்டியன் ஹோட்டல் நிர்வாகத்தின் உதவி யுடன் கதவை உடைத்தே திறக்க நேர்ந்தது.

ஹோட்டல் நிர்வாகமே அவளை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தது. ஹோட்டலின் பெயருக்குக் களங்கம் ஏற்படுவதை நிர்வாகம் விரும்பவில்லை. தனிப்பட்ட மருத்துவமனையிலே மரகதத்தை அனுமதிக்க ஏற்பாடு செய்ததுடன், வைத்தியச் செலவையும் ஏற்க நிர்வாகம் முன் வந்தது. எது விஷயத்தையும் தோழர் பாண்டியனுடன் பேசி இணக்கம் காணவும் ஹோட்டல் நிர்வாகம் சம்மதித்தது.

மரகதத்திற்கு வெளிக்காயங்கள் இல்லை. உள் காயங் களாக இரண்டோர் இடங்களிலே கன்றியிருந்தது. மரகதம் பிள்ளைத்தாச்சியாக இருந்தபடியால், அடிவயிற்றில் விழுந்த உதையால் சிக்கல்கள் தோன்றக்கூடும் என்றே டாக்டர்கள் ஆரம்பத்தில் பயந்தார்கள். அந்த உதையின் தாக்கம் முழுவதும் அடிவயிற்றிலே விழுந்திருக்குமானால்,

கருச்சிதைவு ஏற்படுவதை தடுத்திருக்க முடியாது. கருச்சிதைவு ஏற்படவில்லையாயினும், சில வேளை கரு இலேசாகக் கலங்கியிருக்கக்கூடும் என்று பயந்தார்கள். அப்படி ஏதாவது ஏற்பட்டால் மட்டுமே மரகதத்திற்குப் பாரிய சிகிச்சைகள் செய்ய நேரலாம். எதற்கும் இருபத்திநான்கு மணித்தியாலம் மிக உன்னிப்பாக வைத்தியக் கண்காணிப்பிற்கு உட்படுத்தப் போவதாகவும் நாற்பத்தெட்டு மணிநேரம் பூரண ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அறிவித்தார்கள். அவளுடைய மனம் மிகவும் கலங்கிப் போய் இருப்பதாகவும், சிறு அதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய தகவல்களைத்தானும் அவளுக்குத் தெரிவித்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

சிரேஷ்ட வைத்திய அதிகாரி தோழர் பாண்டியனைத் தனிமையிலே அழைத்துச் சில விஷயங்களை மனந்திறந்து பேசினார்.

''ஹோட்டல் நிர்வாகத்தினை எனக்குத் தெரியும். அதற்காக டாக்டர் என்ற என் கடமையிலிருந்து இம்மியும் தவறியதில்லை. தவறவும் மாட்டேன். அந்தப் பெண்ணுடைய கர்ப்பம் சிதையாமலிருந்தது தெய்வச் செயல்தான். அதற்காக நான் கர்த்தரை ஸ்தோத்திரம் செய்கின்றேன். யாராக இருந்தாலும் அந்தப் பெண்ணிடம் இப்படி நடக்க முற்பட்டவன் ஒரு சமூக விரோதி, மிருகம். அவனை மன்னிக்காது, நீதி மன்றத்திலே நிறுத்தித் தண்டிக்க வேண்டும்... சில வேளைகளிலே, சில விஷயங்களைத் தெய்வ நீதிக்கு விட்டு விடுவதுதான் சேமமானது. மைக்கேல் என்று சொல்லப்படுபவன்மீது, 'நம்பிக்கை மோசடி', 'கற்பழிப்பு எத்தனம்', 'வன்முறைப் பிரயோகம்' என்று பல பிரிவிலே வழக்குத் தாக்கல் செய்யலாம். அது உங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. நீங்கள் பரந்த அநுபவமும், உலகியல் ஞானமும் உள்ள ஒருவர் என்பதை அறிந்துகொண்டதினால், வேறும் சில

விஷயங்களைக் கூறும் உரிமையை எடுத்துக் கொள்கின்றேன். 'ஒரு பெண்ணுடைய விருப்பத்தினைப் பெறாது, அவளுடன் புணர்ச்சியில் ஈடுபடுவதுதான் கற்பழிப்பு' என்ற வரையறையை ஏற்றுக் கொண்டால், அந்தப் பெண் கற்பழிக்கப்படவில்லை. வைத்தியச் சான்று எதுவுமே இல்லை அதற்குமேல், அவள் தன் மன ஒற்றுமையுடனே ஹோட்டலுக்குச் சொன்றிருக்கின்றாள். காரணம் எதுவாக இருந்தாலும், அதனை மறுக்கவும் முடியாது. அவள் தன்னை ஒரு நவ நாகரிகப் பெண்ணாக அலங்கரித்துக் கொண்டு போனது அதை நிரூபிக்கலாம். இதிலிருந்து அந்தப் பெண்ணுடைய நேர்மையான நடத்தையை யாரும் சந்தேகிக்கவே செய்வார்கள். வழக்கு என்று சொல்லிக் கோடேற ஏற்படும் செலவுகளை மட்டுமல்ல, சிரமங்களையும் நினைத்துப் பார்க்கவேண்டும். அவள் இருக்கும் உடல்நிலையில் இது மேலும் அவமானங்களைக் காசு கொடுத்து வாங்குவதாகவே அமையும். 'தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய்விட்டது' என்று அமைதி கொள்வதுதான் புத்திசாலித்தனமானது... உங்களுக்கு இஷ்டமாயின், ஒரு விதத்திலே நான் உதவி செய்ய ஆயத்தமாக இருக்கின்றேன். இப்பொழுதே பதில் சொல்ல வேண்டாம்... தீர ஆலோசித்துப் பதில் சொன்னால் போதும். பிச்சை என்று நினைக்கவும் கூடாது. இந்தச் சம்பவத்தினாலே அந்த ஏழைப் பெண்ணுக்கும், அவள் தந்தைக்கும் மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. அவற்றை ஈடுசெய்ய முடியாதுதான். ஆனாலும், அவர்களிடமிருந்து ஏதாவது நஷ்ட ஈடு பெற்றுத்தர வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், ஹோட்டல் நிர்வாகத்திடம் பேசி அந்தத் தொகையைப் பெற்றுத்தர முடியும். பணத்திற்காக எதையும் செய்யச் சில டாக்டர்கள் தயாராக இருப்பதை நான் அறிவேன். என்னைப் பொறுத்தமட்டில், செய்யுந் தொழிலைத் தெய்வம் என்று வழிபடும் சுபாவத்தினன் நான். பூரண ஓய்வின் பின்னர் பெண்ணை அழைத்துச் செல்லலாம். தோட்டத்திற்குச் சென்ற பின்னர் உடலிலே

ஏதாவது கோளாறு ஏற்படுமாயின் இங்கே அழைத்து வாருங்கள். பிரசவத்திற்கும் அழைத்து வரலாம். சகல செலவுகளையும் நான் ஏற்கத் தயார். கர்த்தர் கருணை மிக்கவர். அவர் அருளாலே அவள் ஓர் அழகிய பிள்ளையைப் பெற்றெடுப்பாள். அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், திட ஆரோக்கியத்தையும் கர்த்தர் அருள் பாலிப்பாராக!''

டாக்டருடைய அன்பான வார்த்தைகள் தோழர் பாண்டியனுக்கு வியப்பை ஊட்டின. பாட்டாளி வர்க்கத்திலே பிறந்த எத்தனை மனிதர்கள் மனுஷத் தன்மையை வணிகப் பொருளாக்கி வாழ்வதைக் கண்டு தோழர் கூனிக் குறுகியிருக்கின்றார். ஆனால், இந்த டாக்டரின் வார்த்தைகள் மிக உயர்ந்த மனிதாபிமானத்திலே தோய்ந்து வெளிவந்தபோது, தோழர் மனிதாபிமானத்திற்குப் புதிய அர்த்தச் சுருதிகளையும் கண்டு தெரிய வேண்டியிருந்தது.

## 10

காலை நேரம் என்றுமில்லாத திருநாளாக இன்று பெருமாள் நேரத்துடனேயே பெரட்டுக் களத்திற்குப் போய்விட்டான்.

ஸ்தோப்பிலே போடப்பட்டிருந்த புட்டுவத்தில் வந்தமர்ந்து, நேற்றிரவு தோழர் பாண்டியன் கொடுத்திருந்த புதிய புத்தகம் ஒன்றினை வாசிப்பதிலே பெரியசாமி ஈடுபடலானான்.

மரகதம் இப்பொழுது வழமைபோல வேலைக்குப் போய் வருகின்றாள். காலையில் அவள் வேலைக்குச் செல்வதைப் பார்ப்பதிலே பெரியசாமி இனந்தெரியாத

ஒரு மனநிறைவினைப் பெற்று வரலானான். அவளுக்கே உரித்தான அந்தப் பார்த்தும் பார்க்காத பார்வையும், சிரித்தும் சிரிக்காத சிரிப்பும், பார்க்கும் பொழுதெல்லாம் ஏதோ ஊமைத் துயர்களை எல்லாஞ் சொல்லி மனக்குறையைத் தீர்த்துக் கொள்வதற்குத் துடிப்பதாகவே பெரியசாமி கற்பித்துக் கொண்டான்.

கோமதி பெரியசாமிக்குப் பக்கத்தில் வந்தமர்ந்து கூடை பின்னத் தொடங்குவதற்கும், மரகதம் பெரட்டுக்களம் நோக்கிப் புறப்படுவதற்கும் சரியாக இருந்தது.

அதே பார்த்தும் பார்க்காத பார்வையும், சிரித்தும் சிரிக்காத சிரிப்பும்... மரகதம் சென்று மறையும் வரை அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் பெரியசாமி. அவள் கண்ணிலிருந்து மறைந்ததும் கூடை பின்னிக் கொண்டிருக்கும் கோமதியைத் திரும்பிப் பார்த்தான். அவனுள் எழுந்த வெப்பமான பெருமூச்சை அடக்கிக் கொண்டு மீண்டும் வாசிப்பிலே ஒன்ற முயன்றான். முடிய வில்லை.

கிழக்குப் பக்கமாகப் பார்வையைத் திருப்பினான். என்றுமே சலிப்புத்தராத சிவனொளிபாதமலையின் திருக்காட்சி. அதிலே சில கணநேரம் மனம் ஒன்றியதும், மனம் சிறிது இலேசாகியது.

தோழர் பாண்டியனை அன்று காலையிலே சந்திக்கும் ஏற்பாடு இருந்தது இப்பொழுதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. நேரத்துடன் போய்ப் பார்த்து வரலாம் என்ற எண்ணம் வரவே, வெளியே புறப்படத் தயாரானான்.

★ ★ ★

தோழர் பாண்டியனுடன் பேசிக் கொண்டிருந்த பெரியசாமிக்கு நேரம் போனதே தெரியவில்லை.

அப்பொழுதுதான் அங்கு குமாரவேல் ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தான். பெரியசாமியைப் பார்த்ததும் குமாரவேல் 'ஓ' வென்று கதறத் தொடங்கி விட்டான். அவன் ஏதோ துக்கச் செய்திதான் கொண்டு வந்திருக்கின்றான் என்பதை தோழரும் சாமியும் ஊகித்துக் கொண்டார்கள்.

தோழர் பாண்டியன் குமாரவேலை ஆதரவுடன் தாங்கிக் கொண்டே, "வேலு! விஷயத்தைச் சொல்லாமல், நீ உன் பாட்டுக்கே அழுதால்... என்ன விஷயம்..." என்று அமைதியாகக் கேட்டார்.

"இந்த வாயால எப்படிச் சொல்லுறது தோழர்...சாமி, உன் அப்பா செத்துப்பிட்டாரு..." என்று கூறி குமாரவேல் குழந்தைப் பிள்ளையைப்போல சத்தம்போட்டு அழுதான்.

"யார்? பெருமாளா?" என்று அதிர்ச்சியுடன் தோழர் பாண்டியன் கேட்டார்.

அழுகையின் மத்தியிலும் "ஆம்..." என்பதற்கு அடையாளமாகக் குமாரவேலு தலையசைத்தான்.

பெரியசாமி அந்தச் செய்தியை உத்தம போர் வீரனுக்குரிய பண்புடன் ஏற்றுக் கொண்டானாயினும், விழிகளிலே அருவிக் கொண்டிருந்த கண்ணீரை அவனாலே நிறுத்த முடியவில்லை.

குமாரவேலின் அழுகை நிற்பதற்கு நேரம் பிடித்தது.

பெரிய சாமியின் கண்ணீர் கட்டுப்பாட்டு நிலையை அடைந்தது.

"இவ்வளவு சீக்கிரமா எங்கப்பா எங்கள விட்டுட்டுப் போயிடுவாருன்னு நெனைக்கவேயில்ல..." என்று பெரியசாமி மெதுவாகச் சொன்னான்.

"யார்தான் நினைச்சா...? சாவு என்ன போர்ப்பறை கொட்டிக்கொண்டா வருகுது?" என்று தனக்குத்தானே

ஆறுதல் கூறும் பாவனையிலே சொன்ன தோழர் பாண்டியன், "வேலு! இது எப்படி நடந்தது என்று சுருக்கமாகச் சொல்லுவியா?" என்று கேட்டார்.

"காலையில என்னோட வேலைக்கு வந்துகிட்டிருந்த கொஞ்ச நேரத்துக்குள்ள, பொணமாத் தூக்கிக்கிட்டு வருவேன்னு நான்தான் நெனச்சேனா? சாமி, ஒனக்குத் தான் தெரியுமே... இந்தத் தோட்டத்திலேயே கல்லுவெடி வைக்கிறதுல, ஒங்கப்பாவை விட ஒருத்தரும் இல்லேன்னு..." எனக் குமாரவேலு தயக்கத்துடன் நிறுத்தினான்.

பெரியசாமி எதுவுமே பேசாது மௌனஞ் சாதித்தான்.

குமாரவேலு தொடர்ந்து கூறினான். "என்னா செய்யிறது.... நானும் பக்கத்திலே தான் இருந்தேன். திரியைப் பத்தவைச்சிட்டு எங்கள எல்லாந்தூர நடக்கச் சொல்லி விரட்டிட்டு, அவர் தூர ஓடுறதுக்குள்ள கல்லு வெடிச்சி, பெரும் பாற ஒங்க அப்பா முதுகிலே அடிச்சி குப்புற சாச்சிடிச்சி.... தோட்டத்து ஆஸ்பத்திரிக்குஎடுத்துக் கிட்டுப் போறதுக்கு முந்தி வழியிலேயே முடிஞ்சிடுச்சி..."

"பெரியசாமி... நீ குமாரவேலுகூட முன்னாலபோய் வீட்டில பார்க்கவேண்டிய ஒழுங்குகள கவனிச்சுக்கோ... தங்கச்சி கோமதியும் பயந்துபோய் இருக்கும்... நானும் இது சம்பந்தமாக இரண்டொரு ஒழுங்குகளைக் கவனிச்சுக் கொண்டு ஒரு மணி டைமில அங்கு வந்திடுவேன்..."

பெரியசாமி எதுவும் பேசவில்லை. குமாரவேல் முன்னாலே நடக்க, பெரியசாமி பின்னாலே நடந்தான்.

தோழர் பாண்டியன் சுடலை ஞானங்களுக்கு இடங்கொடுக்காமல் காரியங்களைக் கவனிப்பதிலே தீவிரமாக இறங்கினார். இருப்பினும், மரகதத்திற்கு நடந்த இழப்பினைப் பின்தொடர்ந்து, பெரியசாமிக்கு

இப்படிச் சடுதியான இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடாது என்ற சோக நினைவுகள் தோழர் பாண்டியனின் அடிமனத்தினை அரிக்காமலுமில்லை.

# 11

சிவனொளிபாத மலையின் உச்சியை முகிற்கூட்டங்கள் போர்வையிட்டிருந்தன. மழைதூறுமா, தூறாத என்பதைக் கூற இயலாதவகையில், ஓர் ஊமை இருள் அந்தத் தோட்டத்தின்மீது கூரையிட்டதுபோலக் கனத்திருந்தது.

கொடியிலே தொங்கும் பெருமாளின் துண்டைப் பார்த்தபடி பெரியசாமி இருந்தான்.

பெருமாளின் வெற்றிலை உரலும் உலக்கையும் ஒரு மூலையிலே கவனிப்பாரின்றிக் கிடந்தது. அவற்றை வாஞ்சையுடன் பார்த்த கோமதியின் விழிகளிலே நீர் முட்டியது. அதை அடக்கக் கோமதி மிகவும் பிரயாசப் பட்டாள்.

''நடக்கிறது நடக்கத்தான் செய்யும். நாம தைரியமா இருக்கணும் சீக்கிரமா நீ ஒரு வேலையைப் பாரு...'' என்று கூறியபடி குமாரவேல் வெளியே செல்வதற்குத் தயாராக எழுந்தான்.

''வேலு! நானும் அதைப் பத்தித்தான் யோசிக்கிறேன்.. தோழர் பாண்டியனுக்குத் தந்தி வந்தது. பெருமாளின் சாவீடு சம்பந்தமான கிருத்தியங்கள் எல்லாம் செவ்வையாக நடந்து முடிந்தன. அவசர காரியம் இல்லாவிட்டால், கட்சிப் பொதுச் செயலாளர் தந்தி கொடுத்திருக்க மாட்டார். எனவே, கொழும்புக்குச் சென்று உடனடியாகவே திரும்பி விடுவதாகத் தாக்கல் சொல்லிக் கொழும்பு சென்றிருந்தார். மேலும்,

பெரியசாமி வீட்டிலேயே பெரும்பாலும் தங்கியிருக்கும் படியும் குமாரவேலையும் கேட்டிருந்தார்.

"அப்பா உசிரோட இருக்கு மட்டும் தண்டச்சோறு சாப்பிடுறதுக்கு நான் வெட்கப்படல்ல... கோமதியை தனியா விட்டுட்டு எங்கபோயி வேலை தேடுறது என்னுதான் யோசனை..."

பெரியசாமியின் இந்த வார்த்தைகளைக் கேட்ட கோமதி, கண்ணீர் சிந்தியவாறு ஸ்தோப்புக்கு வந்தாள். "அண்ணா, என்னைத் தனியா விட்டுட்டு எங்கேயும் போயிடாதே... அப்பா இருந்தது எனக்கு உதவியா இருந்திச்சி... இனி எல்லாமே நீதான் அண்ணா. நீ மட்டும் இந்தத் தோட்டத்தில என்ன தனியா விட்டுட்டு போனியோ நான் செத்துத்தான் போவேன்"—அவளுடைய குரலில் பரிதாபகரமான கெஞ்சுதலும், அதே சமயம், அமானுஷ்ய மான உறுதியும் இழையோடிக் கிடந்தது.

அதைக் கேட்டதும், அவளுக்கு எத்தகைய ஆறுதல் வார்த்தையைக் கூறலாம் என்பதை அறியாது தவித்து, "அப்படிச் சொல்லாதே கோமதி..." என்று கெஞ்சினான்.

கோமதி எதுவுமே பேச இயலாது விக்கிவிக்கி அழுதாள்.

"கோமதி வீணா அழுவாத... அப்பா இருந்தது உனக்கு மட்டுமா? எனக்குந்தான் தைரியமா இருந்திச்சி... இப்ப எனக்குந்தான் யாரு இருக்கா? நீ மட்டுந்தான். ஒன்ன விட்டுட்டு எங்கம்மா நான் போக?"

"என்னால்தானே ஒங்களுக்கு இப்ப யோசன எல்லாம் இல்லியா? நான் பொறந்த வீட்டிலேயே நம்ம அம்மாவ தூக்கித் தின்னிட்டேன். அதற்கு அப்புறம் அப்பாவுக்குப் பாரமா இவ்வளவு நாளா இருந்தேன்... இப்ப ஒங்களுக்குப் பாரமா..."

"அப்படி ஒன்னுமில்ல தங்கச்சி.... நீ ஏன் அழுகிற... நான்தான் மலைபோல இருக்கேனே... ஒனக்கென்ன.... ராசாத்தியாட்டம் நான் பார்க்கிறேன்... என்னா இருந்தாலும் அப்பாவுடைய ஆசையை என்னால நிறை வேற்ற முடியாம போச்சேன்னுதான் கவலை..."

அந்த இரண்டு சகோதர உள்ளங்களுக்கு இடையில் நடைபெறும் பாச அலை மோதுதல்களைப் பார்த்துக் குமாரவேலுவின் நெஞ்சு உருகியது. முகத்தைக் கிழக்குத் திக்கிலே திருப்பி, அங்கு கம்பீரமாக எழுந்து நிற்கும் சிவனொளிபாத மலையை வணங்குவது போல அதையே பார்த்துக்கொண்டு நின்றான். சற்றே வெளியில் உலவி வரலாம் என்ற எண்ணம் தோன்றியது.

புறப்படத் தயாராகிய பொழுது குமாரவேலின் பார்வையிலே, லயத்துக் குறுக்குப் பாதையிலே சடையன் கங்காணியார் இறங்கி வருவது தெரிந்தது.

"சாமி... நான் தோழர் பாண்டியனுடைய ஆபீஸ் மட்டும் போயிட்டு வாறன்... லயத்துக் குறுக்குப் பாதையில எறங்கி கங்காணியார் இந்தப் பக்கமாகத்தான் வாறாரு... ஒனக்கு வேலை ஒண்ணு தேவையென்ற வெஷயத்தை அவர் காதிலயும் போட்டு வையேன்... எதுக்குக் கெட்டா போயிடும்..." என்று கூறிய குமாரவேல் புறப்பட்டான்.

பெரியசாமி சடையன் கங்காணி வரும் திசையிலே, அவரை வரவேற்கும் பாவனையிலே பார்த்துக் கொண்டே நின்றான் கோமதி காம்பிராவுக்குள் சென்றாள்.

வீடு தேடி வரும் சடையன் கங்காணியாரை வாய் நிறைய வரவேற்க வேண்டும் என்ற சம்பிரதாயத்துடன், "வாங்க கங்காணியாரே..." என்று வரவேற்றான் பெரியசாமி.

"என்ன தம்பி அசந்திட்டப்போல..."

அதற்கு எதுவும் பதில் கூறாத பெரியசாமி பெஞ்சைக் கொண்டு வந்து வைத்து, அதைத் துண்டால் துடைத்தான்.

"இப்படி ஒக்காருங்க கங்காணியாரே..." என்று பெரியசாமி விநயமுடன் கேட்டுக்கொள்ள, சடையன் கங்காணியார் அந்தப் பெஞ்சியிலே சற்று வசதியாகவே உட்கார்ந்து கொள்ளுகின்றார்.

"தம்பி, ஒங்க அப்பா ஏதோ ஒன்ன நல்லாப் படிக்க வைச்சாரு. ஆனா அவர் கண்ண மூடுறதுக்குள்ள ஒரு நல்ல வேலை கெடைக்காம போச்சி... என்ன செய்யலாம்? எல்லாமே அவுங்க, அவுங்க தலை எழுத்துப்படிதான் நடக்குமுன்னு பெரியவங்க சொல்லுவாங்க... அதுக்கு நாம என்ன செய்யிறது...."

"இன்னும் கொஞ்ச நாளாவது எங்க அப்பா இருந்திருக்கக் கூடாதா?" பெரியசாமியின் உள்ளத்திலே அடிக்கடி எழுந்த இந்தக் கேள்வி, சடையன் கங்காணியைக் கண்டதும் நாக்கிலிருந்து கீழே நழுவிவிட்டது

"சாவு யார கேட்டுக்கிட்டு வருது தம்பி... இன்னைக்கு இருக்கிற நாம நாளைக்கு இருப்பது என்ன நிச்சயம்? வீணா யோசன செய்யாம, ஒரு நல்ல வேலையா ஒடனே பாரு... அதுதான் நல்லது."

"இந்த நிலையில கோமதியை இங்க தனிய விட்டுட்டு எங்கையும் என்னால போக முடியாதுங்க... ஆபீசுல மூன்றாவது கிளாக்கர் வேல இருந்தும் எனக்குக் கொடுக்க மாட்டேனுட்டாங்க... ஏன்னா நான் இந்தத் தோட்டத்துல பிறந்த குற்றம்..."

"தற்சமயத்திற்கு ஏதாவது ஒரு வேலையப் பாரு... அப்புறமாக..."

"நீங்கதான் ஏதாவது தோட்டத்தில வேலை வாங்கித் தரனும் கங்காணியாரே! வேற வழியில்லே... நான் என்ன

ஆனாலும், என் தங்கச்சிக்காகவாவது வேல செய்துதான் ஆகணும்....''

''இந்தத் தோட்டத்து ஆபீஸ் வேலை கிடைக்குமுனு எனக்குத் தோணேல்ல... நீயே சொன்ன கூலி வேலதான் கிடைக்கும்...''

''எப்பவோ கூலி வேல செய்திருக்கலாமுனு இப்ப தோணுது... வேலை என்றால் பேனா பிடித்து வெள்ளைக் காகிதத்தைக் கறுப்பாக்குவதுதான் என்று நினைத்துக் கொண்டிருந்தேன் எல்லாம் அந்த வெள்ளைக்காரனுக நம்மீது திணிச்சிட்டுப்போன கல்வியைப் படிச்ச கோளாறு தான்... எப்படியோ தோட்டத்திற்கே வந்து சேர்ந் திட்டேன்... கங்காணியாரே, பரவாயில்ல; கூலி வேலையா இருந்தா என்னாங்க.... இந்த விஷயத்தில நீங்கதான் உதவி செய்யணும்...''

''இந்த மாதிரி வேல ஒனக்குப் புடிக்காதோ என்னு தான் நினைச்சிக் கொண்டிருந்தேன்... நாளைக்கே பெரிய தொரைக்கிட்டே கூட்டிக்கிட்டுப் போய்ச் சொல்லி எப்படி யும் வேல வாங்கித் தாரேன் தம்பி. ஆனா படிச்ச ஒனக்கு இந்தத் தோட்டத்துல நல்ல வேல ஒன்று வாங்கிக் கொடுக்க முடியாம இருக்கேன்னுதான் எனக்கு வருத்தமா இருக்கு... கொஞ்ச நாளைக்குப் பொறுத்துக்க... அப்புறம் பார்ப் போம்... படிச்சது ஒருநாளும் வீண் போகாது...''

''பரவாயில்ல... வேலையில நல்லது என்ன? கெட்டது என்ன?''

''தோட்டக்காட்டு வேல முந்திமாதிரி இல்ல! இப்ப, நாளொரு ஆர்ப்பாட்டமும் பொழுதொரு கிளர்ச்சியுமா இருக்குன்னு சொல்லுறேன்...''

''ஏன் அப்படி கங்காணியாரே? காரணம் என்ன?''

"நீயும் தெரிஞ்சு வச்சிக்கிறது நல்லதுதான் சொல்றேன்... இப்போது தோட்டங்களிலே ஏற்பட்டுள்ள தொழில் தகராறுக்கும், குழப்பத்திற்கும் பாதிக் காரணம் நம்ம தொழிலாளர்கிட்ட உள்ள அறியாமையும், ஒற்றுமை இல்லாத காரணமுந்தான். இதைப் பயன்படுத்தி அரசியல்வாதிகள் தங்கள் சுயநலத்திற்கு தொழிலாளிகளை ஆட்டிப் படைக்கிறானுக... நம்ம இந்தத் தோட்டத்தை எடுத்துக்கோ... எத்தனை யூனியன்கள்? ஒன்று வலது சாரி...."

"இன்னொன்று இடதுசாரி இல்லியா?"

"ஒன்று வெறும் இடது சாரி, இன்னொன்று தீவிர இடது சாரி... இப்படியே இந்தத் தோட்டத்திலே, நாட்டி லுள்ள எல்லா யூனியனும் இருக்கு... யூனியன்களுக்கு இடையே கடுமையான போட்டி. ஒரு யூனியன் ஒரு பிரச்சினையைக் கிளப்பினா, மற்ற ஒன்று ஒன்பது பிரச்சினைகளையும் கிளப்பும். இதற்கிடையில் அரசியல் தலையீடுகள் வேறு."

"நம்ம தோட்டத்துல தேயிலை ரப்பர் உற்பத்தியை விட, யூனியன்களின் தகராறு உற்பத்திதான் அதிகமாக நடக்கிறது. அப்படித்தானே?... கங்காணியாரே, குழப்பத் திற்கு ஒரு பாதிக்குக் காரணம் சொன்னீங்க... மற்றப் பாதி?"

பெரியசாமி எதைச் சுட்டுகின்றன் என்பது சடையன் கங்காணியாருக்கும் சட்டென்று விளங்கி விட்டது அதைச் சொல்லாமலும் இருக்க அவரால் முடியவில்லை. எனவே குரலைத் தாழ்த்தி, "அந்தப் பாதிக்குக் காரணம்.முதலாளி களின் பேராசையும் அவர்களின் ஆதிக்கமும். இன்னும் சொல்லப்போனா, இந்த முதலாளித்துவத்தில் ஏற்பட்டுள்ள சமூக அமைப்பு ஆனா, நான் தோட்டத்தில் கங்காணி வேலை பார்க்கிறேன்...தோட்டத்து ஸ்டாப்பு அதைப்பத்தி வாய்திறக்க முடியுமா?" என்றார்.

தந்தையின் இழைப்பைப் பற்றிய சிந்தனைகளிலிருந்து முற்றாக விடுபட்டவனாக, ''எதிர்கால பாட்டாளி சமூகமே நிலையற்ற ஒரு முடிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறதுன்னு சொல்லுறீங்க...'' என்றான். ஒத்துக் கொள்வதற்கு அடையாளமாகச் சடையன் கங்காணியார் தலையை ஆட்டிக்கொண்டார்.

''இதிலிருந்து நாம மாறவேண்டுமானால், நமது சிந்தனைகளிலும் செயல்களிலும் மாற்றம் தேவை, கங்காணியாரே, அதற்கு மேலாக நமது பாட்டாளி சமூகத்தை ஒருமுகப் படுத்த வேண்டும்...''

பெரியசாமியின் பிரசங்கத் தொனியை நாடி பிடித்துப் பார்த்துவிட்ட கங்காணியார் இடையிலே குறுக்கிட்டு, ''இதை ஏன் சொல்றேன்னா, நீ படிச்சபிள்ளை, கூடிய மட்டும் யூனியன் விவகாரங்களில் மாட்டிக் கொள்ளாம இருக்கனுங்கிறதாலத்தான்...'' என்றார்.

''கங்காணியாரே, உங்களுக்குப் பொய் சொல்ல முடியுமா? தொழிலாளி என்ற வர்க்கத்திலே நானும் ஒரு தொழிலாளியாகவே சேந்திட்டா, நானும் ஏதாவது ஒரு யூனியனில சேரத்தானே வேண்டும்...?''

''சேரவேண்டியதுதான். இருந்தாலும் முடிந்த வரைக்கும் வம்பு தும்புகளில் மாட்டிக்கொள்ளாத இந்த இடதுசாரி யூனியனில்தான் அங்கத்தவர்கள் அதிகம். அதனால வலதுசாரி யூனியன் தங்கள்பலத்தைஅதிகரித்துக் கொள்ள முழுமூச்சோடு முயற்சி பண்ணிக் கொண்டிருக்கு. அதன் தலைவன் அப்புகாமி ஒரு முரடன். நான் ஒனக்கு அதிகம் சொல்லத் தேவையில்ல. அடுத்த மாசம் வரும் மேதினக் கொண்டாட்டத்தைப் பாரேன்...எல்லாம் வெளங்கும் ஒனக்கு ...வருகிறேன்...''

சடையன் கங்காணியார் பெஞ்சியிலிருந்து எழுந்தார்.

"அண்ணா தேத்தண்ணி ஊத்திட்டேன்" என்று கோமதி உள்ளே இருந்து குரல் கொடுத்தாள்.

பெரியசாமி, "கொஞ்சம் இருங்க கங்காணியாரே..." என்று கூறிக்கொண்டு காம்பராவுக்குள் நுழைந்தான். கோமதி இரண்டு லோட்டாக்களிலே தேநீர் ஊற்றி வைத்திருந்தாள். மெதுவான குரலிலே, "எனக்குமா தேத்தண்ணி போட்டு வைச்சிருக்கிறே தங்கச்சி... நான் கங்காணியார் போனதுக்கு அப்புறமாகக் குடிச்சுக்கிறன்" என்று கூறி, கங்காணியாருக்கு மட்டும் தேநீரை எடுத்துக் கொண்டு ஸ்தோப்புக்கு வந்தான்.

கங்காணியார் தேநீரை வாங்கிக் கொண்டே, "தம்பி நாளைக்குக் காலம் காத்தாலே பெரட்டுல வந்து சந்தி, நாளைக்கு...பெரட்டுக்கு சிலநேரம் பெரிய தொரை வந்தாலும் வரலாம்....ஒண்ட வேலை வெஷபத்த அங்கேயே பேசி முடிச்சிடலாம்...ஆபீசுக்குப் போக வேண்டியதில்ல பாரு..." என்று கூறி லோட்டாவைத் திருப்பிக் கொடுத்தார்.

"பெருமாளிருந்தா ஒரு வாய்க்கு வெத்தில போட்டிருக்கலாம்..." என்று கூறிய சடையன் கங்காணியார் சாவைப் பற்றி நினைவூட்டியது தப்பு என்ற நினைப்புடன் நாக்கைக் கடித்துக்கொண்டு, "தம்பி... நாளைக்குக் காலம் காத்தாலே பெரட்டுல வந்து சந்தி...மறக்காத.." என்று கூறிக் கொண்டே வெளியேறினார்.

யாருங் கவனிப்பாரின்றி மூலையிலே கிடந்த வெற்றிலையும் உரலையும் உலக்கையையும் பார்த்துக் கோமதி பெருமூச்செறிந்தாள்.

மறுகணம் பெரியசாமிக்கு ஊற்றி வைத்த தேநீரின் ஞாபகம் வந்தது அதை எடுத்துக் கொண்டு ஸ்தோப்புக்கு வந்தாள்.

"தங்கச்சி... நீ என்னக் கூப்பிட்டிருந்தா உள்ளே வந்து குடிச்சிருக்க மாட்டேனா?" என்று சொல்லமாகக்

கண்டித்துக் கொண்டே, லோட்டாவிலிருந்த தேநீர் பாதியை அருந்தி, மிகுதியைக் கோமதியிடம் நீட்டினான்.

"இதென்ன அண்ணா தேத்தண்ணியில மிச்சம் வைச்சிருக்கிறாய்... முழுதயும் குடியேன்...."

"கோமதி! எனக்கு மட்டுந்தான் வயிறு இருக்கா? ஒனக்கு வயிறு இல்லையா? நீ குடி..."

ஆசைகளும் கனவுகளும் மனங்களை நிரப்பும் பொழுது, சாவையும் அது தரும் பிரிவுத் துயரையும் எவ்வளவு சுலபமாக மறந்துவிடுகின்றோம்.

"இத குடிக்கிறதுக்கு அண்ணா, எப்பாவது ஒரு அண்ணி வந்துதானே ஆகணும்..." என்று கேட்டாள்.

இப்படி ஒரு விமர்சனத்தினை-இல்லை ஓர் ஆசையை இன்றுதான் முதல் தடவையாகக் கோமதி வெளியிட்டாள். சற்றும் எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்திலேதான் இது வெளியாகியும் இருக்கிறது.

கோமதிக்கு ஓர் அண்ணி?

'அவள் யார்? எப்படிப் பட்டவள்?' என்ற கேள்விகள் பெரியசாமி உள்ளக் குளத்தில் எறியப்பட்ட கற்களாக அவனை அலைக்கழித்தது.

'அவள் நானாக இருக்கக்கூடாதா?' என்று பதில் கேள்வி தொடுத்து நிற்பது போல், "பசியப் போக்கத் தேத்தண்ணியா?" என்று கேட்டுக்கொண்டே மரகதம் வந்து நின்றாள்.

அவள் 'மாசக்காரி' என்பதை யாரும் சுலபத்திலே காணக்கூடிய விதத்தில் அவளுடைய கருவுற்ற வயிறு பெருத்திருந்தது.

அவளையும் அறியாது கன்னித் தாய்மை என்ற பூரிப்பிலே உடல் மேலும் கவர்ச்சி பெற்றிருந்தது.

'எனக்கு ஏற்பட்டுள்ள இழப்பினைத் தாங்கிக் கொள்ளலாம். ஆனால், இந்த மரகதத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பு? பரமசிவம் செத்திருந்தால், அத்துடன் வாழ்க்கை யின் ஒரு அத்தியாயம் முடிந்துவிடும். ஆனால், அவளுடைய வாழ்க்கையில் பரமசிவம் என்ற ஒரு அத்தியாயம் இன்னமும் ரப்பர்போல இழுபட்டுக் கொண்டே கிடக் கின்றது. கணவனின் எந்தச் சுகமுமே கிடைக்காத ஒரு வாழ்க்கை எத்தகைய கொடூரமானது. இந்தத் துக்கங்களை எல்லாம் இந்தக் கொடி உடல் எப்படித் தாங்கிக் கொள்ளுகின்றது?' இப்படிப் பல எண்ண அலைகள் பெரியசாமியின் நெஞ்சத்தில் அலைமோதின.

மரகதத்திற்குப் பக்கத்தில் அவள் தந்தை வீரையனும் நின்றான்.

"கோமதி! உனக்கும் ஒங்க அண்ணாவுக்கும் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறம்" என்று மரகதம் தனது விஜயத்தின் நோக்கத்தினை அறிவித்தாள்.

## 12

"கெதர கவுத... வீட்டில யார்?" என்ற குரல்கேட்டு, புத்தகம் ஒன்றிலே இலயித்துப் போயிருந்த பெரியசாமி தலையை நிமிர்த்தினான்.

எதிரில் அப்புகாமியும் செல்லத்துரையும் நின்றுகொண் டிருந்தார்கள்.

"வாங்க..." என்று வரவேற்று, "ஒக்காருங்க"... என்று பெஞ்சைக்காட்டி உபசரித்து, "என்னா வேணும்?" என்று அவர்கள் வந்த நோக்கத்தைப் பற்றி விசாரித் தான்.

"ஒயா பெருமாளுகே புத்தா.... நேத?" என்று அப்புகாமி கேட்டதும் ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான்.

"மம தமா அப்புகாமி கியானே...ஒயாட்ட சிங்கள தன்னவதா?"

"மட்ட சிங்கள தன்னவா..."

"ஏனங் ஹோந்தாய்...மட்டத் ஒந்தட்ட தெமில கத்தாகராண்ட தன்னவா....அப்பி மே வத்த உப்பத்தி வைச்சச கட்டியனே..."

"மட்ட ஹறி சந்தோஷம்....நீங்க தமிழிலையே பேசுங்க...."

"நீ படிச்சவன். அப்படி இருந்தும் தோட்டத்துக்கு வேலைக்கு வந்து சேர்ந்து வேலபார்க்கிறது நமக்கு சந்தோஷம். அப்பே சிங்கள கட்டிய படிச்சா கிளாக், மனேஜர் வேலைத்தான் பார்ப்பாங்க...தோட்டத்து வேலைக்கு சிங்கள ஆள் வருவதில்லை. அதனாலதான் இந்த மண்ணில பிறந்த எங்களுக்கு வேலை இல்லாமல் போச்சி.... அப்பே ரட்டே; அப்பிட்ட வெடனே..."

"நீ இந்த மண் என்று எதைச் சொல்ற...?"

"மே லங்காவ தமாய்..."

"இந்த இலங்கை மண்ணைத்தானே? நானும் இந்த மண்ணில பிறந்தவன்தான். அதனால, இந்த மண் ஒனக்கு மட்டும் சொந்தமுனு தனியா பிரிச்சு சொல்லாத..."

"ஏக கோமத... நீங்க எல்லாரும் இந்தியன்தானே... இந்தியாவில இருந்து தானே வந்தது."

"ஒரு காலத்தில எங்க மூதாதையர்கள் ஒப்பந்தக் கூலிகளாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது உண்மை

தான். அவங்க வந்து சும்மா இருந்து இந்த நாட்டச் சொரண்டல்ல...கொடூர மிருகங்களோடும், கொடிய நோய்களோடும் போராடி காட்டையும் மேட்டையும் பண்படுத்தினார்கள். எத்தனையோ ஜீவன்கள் தம் இரத்தத்தையும், சதையையும், எலும்பையும் உரமாகப் போட்டுத்தான் இந்த மண்ணைப் பொன்னாக்கினார்கள். தன்னுடைய வியர்வையும் ரத்தமும் மணம் கமழ்கின்ற இந்த மண்ணே அல்லும் பகலும் உழைக்கும் பாட்டாளி வர்க்கத்திற்குச் சொந்தமில்லாம வேறு யாருக்குச் சொந்தம்? நாங்க மாத்திரம் இல்ல; நீங்களும் அங்கிருந்து வந்தவங்கதான்....நீங்க மொத கோச்சில வந்தீங்க...நாங்க இரண்டாவது கோச்சில வந்தோம்...இதுசரித்திர உண்மை. ...அது மாத்திரம் இல்ல...இந்த மண்ணுக்குக் கலை கலாச்சாரம் எல்லாமே இந்தியாவில இருந்து வந்ததுதான். புத்தர்? அவர்கூட இந்தியாவில் பிறந்தவர்தான். அவர் போதித்த புத்த சமயம் கூட அங்கே இருந்து வந்தது தான்...''

''அது இருக்கலாம்...நீ எல்லாம் இந்தியாவதானே நெனச்சிக்கிட்டு இருக்கிறது?''

''நீ என்னாப்பா இந்த நாட்டு அரசியல்வாதிக பேசுர மாதிரி பேசுர...இந்தியாவ நெனைக்கிறவங்க எல்லாம் போய்கிட்டு இருக்காங்க....''

''அப்ப நீ எல்லாம்?''

''நாங்க இந்த மண்ணில பிறந்து வளர்ந்தவங்க... இருப்பதும், இறப்பதும் இந்த மண்ணிலேதான். போறவங் களப் பத்திப் பேசாத. ஆனா, இந்த அரசியல்வாதிக அவுங்க அவுங்க லாபத்திற்காக எங்கள பிரிச்சி பேசுற மாதிரி நீயும் பிரிச்சு பேசாத...பிரிச்சி பிரிச்சி பேசித்தான் இந்த நாட்டில தொழிலாளர்கள் ஒன்றுகூட வழி இல்லாம பண்ணிட்டாங்க... முதலாளிகளும், முதலாளித்துவ அரசியல் வாதிகளும்....''

"நீ சொல்றது நெசந்தான்...எந்த நாட்டிலையும் இல்லாத பிரிவுகள் நம் தொழிலாளர் கிட்ட இங்க இருக்கு..."

"இந்த நாட்டில நூற்றைம்பது வருஷமா நாங்களும் உங்கள் மத்தியில வாழ்ந்து வருகிறோம். இன்னும் எங்கள இந்தியன் என்று சொல்லுறாங்க. இலங்கயர் ஆவது எப்ப? அதைச் சொல்லக்கூடாதா?"

"நீ சொல்றது நியாயமாத்தான் தெரியுது...ஆனா, எங்க ஆளுக ஒத்துக்கொளுறாங்க இல்லியே...."

"நாங்கள் மத்தவங்க மாதிரி இந்த நாட்ட சுரண்டி வாழல... இந்த மண்ணில இரத்தத்தை எல்லாம் சிந்தித்தான் தேயிலையும் ரப்பரும் வளர்க்கிறோம். எங்கள் உழைப்பால மற்றவங்களுக்கும் சோறு போடுறோம். ஒத்துக்க மாட்டேங்கிற ஒங்க ஆளுங்ககூட எங்கள் உழைப்பிலே தான் சாப்பிடுறாங்க..."

"நீ சொல்றது சரி. இந்த மலைநாட்டானுடைய உழைப்பாலதான் இந்த நாடே தலைநிமிர்ந்து இருக்கு..."

"எங்களைக் காட்டிக் கொடுத்தவர்களும் எங்கள் உரிமைகளைப் பறித்தவர்களும்கூட, இன்னும் எங்கள் உழைப்பால வாழுறாங்க என்றால் எங்களைவிடத் தியாக மனப் பான்மை கொண்டவர்கள், எங்களைவிட இந்த நாட்டின் மண்ணின்மீது, இந்த நாட்டின் மக்கள் மீது விசுவாசம் கொண்டவர்கள் யார்? இந்த நாட்டைத் தாயகமாகக் கொண்டு வாழ்கிற ஒவ்வொரு மலைநாட்டுத் தமிழனும், இந்த நாட்டுக்கும் இந்த மண்ணுக்கும் விசுவாசமாக இருக்கத்தான் செய்கின்றான் என்பதை உன் போன்றவர்கள் மறக்கக்கூடாது. சில பிற்போக்குவாதிகள் தான் இந்த விஷயத்தை மிகவும் குறுகிய நோக்கில் பார்ப்பதாக எனக்குத் தெரிகிறது."

"நீ நல்லா பேசுற..."

"தொழிற்சங்கவாதி அப்படி குறுகிய நோக்கோடு பார்க்கக் கூடாது. ஏனா நீயும் நானும் ஒரே வர்க்கம். தொழிலாளர் வர்க்கம். ஓர் இனம். எல்லோரும் இந்நாட்டு மக்கள்."

"அற்புதமான கருத்து. நாம ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவங்க... நாம் குறுகிய எல்லைக்குள் அடைபடக் கூடாது நாம் எந்தப் பிரச்சினையையும் வர்க்க உணர்வோடு அணுகணும். வர்க்க உணர்வோடு போராட வேண்டும். அப்பதான் வெற்றி கிடைக்கும். எங்கள் புத்தர் கூட எல்லா மனிதர்களும் சகோதரர்கள் என்றுதான் சொல்லி இருக்கிறார்."

'அதைத்தான் நானும் சொல்றேன். ஆடு மாடுகளிடம் எல்லாம் கருணை காட்டச் சொன்ன புத்தர் போதனையைப் போற்றுகின்ற இந்த நாட்டின் பெரும் பான்மை மக்கள், மலைநாட்டு மக்களிடம் மட்டும் கருணை காட்டக் கூடாதா? என்றுதான் கேட்கிறேன்... தோட்டப் பாட்டாளிகளை நினைக்கும்போது வேதனைதான் அதிகரிக் கின்றது. சோதனைக்கென்று பிறந்துவிட்ட சமூகம். வஞ்சகமில்லாமல் உழைத்து உழைத்து ஓடாகி, இன்று செல்லாக் காசாகி, கண்ணீரும் கம்பலையுமாகப் போகும் காட்சி கண்டு மலைகளே சரிகின்றன. நம் மூதாதையர் களின் இரத்தமும் சதையும் கலந்து செந்நிறமாகிவிட்ட இந்த மண்ணுக்குப் பேசும் சக்தி இருந்தால், "என் செல்வங்களே! என்னை விட்டுப் போகாதீர்கள்" என்று மனம் பிளக்கக் கதறியிருக்கும். இரத்தக் கண்ணீர் வடித்திருக்கும்.

இவ்வளவு நேரமும் அப்புகாமிக்கும் பெரியசாமிக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருந்த பேச்சைக் கேட்ட செல்லத்துரை, "பாவம், மண் என்ன செய்யும்? சுயநல மிகளும் சூழ்ச்சிக்காரர்களும் இருக்கும் வரை மண் என்ன செய்யும்?" என்று கேட்டான்.

"முட்மான இளமறியைத் தன் தோளிலே சுமந்த போதி மாதவருடைய அகிம்சையும் அன்பு நெறியும், உண்மையில் இங்கு நிலைச்சிருக்குமானால், நம்ம நாட்டு அரசியல்வாதிகளுக்கே வேலையில்லாம போயிடும்..."

"சரி இதைப் பேசிக்கிட்டே இருந்தா முடிவே இல்லாம போயிடும். வந்ததை மறந்திட்டேன். நம்ம தோட்டத்தில முக்கிய யூனியன்கள் இரண்டுதான் இருக்கு. ஒன்றுக்கு நான்தான் தலைவர். அதிலே நீயும் சேர்ந்து கொள்ளணும்..." என்று அப்புகாமி தான் வந்த விஜயத்தின் நோக்கத்தினை மெதுவாக அவிழ்த்தான்.

'மாட்டேன்' என்று ஒரே வார்த்தையிலே கூற விரும்பாத பெரியசாமி, "என்ன மன்னிச்சிடு அப்பு காமி..." என்று நாகரிகமாகப் பதில் கூறினான்.

"என்ன சாமி பேசற... எங்க யூனியனிலதான் பல பேர் அங்கத்தவர்களாக இருப்பதாகக் கேள்விப்பட்டிருப்பாய்... எங்க சங்கத்திலே சேருவதுதான் புத்திசாலித்தனம்" என்று செல்லத்துரை, அப்புகாமியின் பேச்சுக்குச் சார்பாகப் பேசினான்.

"சாஞ்சா சாயிற பக்கம் போகுறது மாடுகள். இதுல பாரு செல்லத்துரை சங்கம் அல்லது இயக்கம் என்று ஒன்று இருந்தால், அதனுடைய மேன்மையும் சத்தியமும் அதில உள்ள அங்கத்தவர்களுடைய தொகையால நிர்ணயிக்கப்பட மாட்டாது. ஒரு சங்கத்திற்கு நோக்கமும் கொள்கையும் முக்கியமுனு நினைக்கிறேன்."

"அப்ப எங்க சங்கத்துக்கு கொள்க இல்லேனு நெனக்கிறயா?" என்று அப்புகாமி சற்றே மனத்தாங்கலுடன் கேட்டான்.

"அப்ப இருந்தாச் சொல்லேன்...." என்று பெரியசாமி மிகவும் சாதாரணமாகக் கேட்டான்.

"தொழிலாளருக்காக பாடுபடுறதுதான் எங்க கொள்கை..." என்று செல்லத்துரை முதலாவது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டான்.

"ஒவ்வொரு சங்கமும் அப்படித்தான் சொல்லுது... ஆனா, உங்க சங்கத்தின் தலைமைப் பதவி யாருடைய கையில இருக்கு? முதலாளி கையிலதானே?" என்று பெரியசாமி கேட்ட கேள்விக்கு, "முதலாளிக தலைமை தாங்குவதாலதான் எங்க பக்கம் பலம் இருக்கில்ல... பணம் இருக்கில்ல..." என்றான் செல்லத்துரை.

"அதுதான் நானும் சொல்ல வந்தேன். ஆடு நனைகிறதுனா ஓநாய்க்கு ஏன் கவலை வரணும்? முதலாளி தன்னுடைய முதலைக் காப்பாத்திறதுதான் நாயம். அவர்கள் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்க வாறதில எந்த நாயமும் இல்ல..."

அப்புசாமி குறுக்கிட்டான்.

"நீ இந்த சிவப்புப் புத்தகங்கள படிச்சிப் போட்டுப் பேசற சாமி... விவகாரத்த அறிஞ்சுக்கோ... முதலாளிக் கிட்ட பசையிருக்கு, சமூகத்தில அந்தஸ்து இருக்கு. அவர்கள் மற்ற முதலாளிகிட்ட பேசினா சலுகை இருக்கு..."

"சலுகை பெறுவதற்கல்ல சங்கம்... உரிமை பெறத் தான் சங்கம்... தொழிலாளி தன்னுடைய உரிமைகளைப் போராட்டங்கள் மூலமாகத்தான் வென்றெடுக்க முடியும். போராட்டம் என்றதும் எங்க முதலாளித் தலைவர்கள் என்ன செய்வாங்க?...."

"எங்க சங்கம் எத்தன ஸ்ட்ரைக்க வெற்றியா முடிச்சிருக்கு தெரியுமா?"

"ஸ்ட்ரைக்கும் அதன் வெற்றியுமல்ல தொழிலாளர் போராட்டம்..."என்று பெரியசாமி பெரிய விளக்கம்

ஒன்றினைச் சொல்ல இருந்தான். அதற்கிடையில் செல்லத் துரை குறுக்கிட்டு, "மலையக மக்களின் உரிமை பறிக்கப் பட்டபோது முதலில பாராளுமன்றத்தின் முன் சத்தியாக்கிரகம் செய்தவர்கள் எங்கள் தலைவர்கள்..." என்று செல்லத்துரை பெருமை பேசினான்.

"செல்லத்துரை! தலைவர்கள் தங்கள் பேரையும் பதவியையும் காப்பாத்த சக்தியாக்கிரகம் செய்தாங்க... அதனால் தோல்வி கண்டாங்க... அன்றே அந்தக் தலைவர் கள் மக்கள் சக்தியைப் பயன்படுத்தியிருந்தால் வெற்றி கிடைத்திருக்கும்... அவர்களை ஏன் பயன்படுத்தேல்ல....?"

"நீ என்ன சாமி சொல்ற?" என்று அப்புகாமி தன் குழப்பநிலையை மறைக்கும் அவதியுடன் கேட்டான்.

தீ இல்லாமல் வேள்வி இல்லை, ரத்தம் சிந்தாமல் போராட்டம் இல்லை. இரத்தம் சிந்தும் போராட்டம் ஒன்று நடக்குமுனா இந்த முதலாளிக நமக்கு எதிரான அணியிலே நம்ம அடக்க மூர்க்கம் கொண்டுள்ள அணியிலேதான் இருப்பாங்க என்னு ஒனக்குத் தெரியுமா அப்புகாமி?"

"சாமி! ரத்தம்—போராட்டம் என்னு வார்த்தையால பெரிசா சொல்லாத... தொழிலாளர் நலன் நேசிக்கிற முதலாளிகள நாங்க நம்பக் கூடாதா?" என்று செல்லத்துரை கேட்டான்.

பெரியசாமியின் கொள்கைத் தீவிரம் மற்றும் இருவரை யும் குழப்பத்தில் ஆழ்த்தவே செய்தது.

"முதலாளிகளில நல்லவங்க இருக்காங்க, கெட்டவங்க இருக்காங்க... நான் ஒத்துக்றேன். இந்த நல்லதும் கெட்டதும் மனித சுபாவத்தைப் பற்றியது. ஆனா, அதுக்காக, நல்லவனான முதலாளி தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்கலாம் என்பதை நான் ஒத்துக்கிற மாட்டேன்... தொழிலாளர் இயக்கத்திற்கு ஒரு தொழிலாளி தான் தலைமை தாங்கனும்என்பது என் கொள்கை'! என்று

பெரியசாமி வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்ற பாணியிலே தன் தளத்தை விளக்கினான்.

"முதலாளிக தொழிலாளர் இயக்கத்துக்கு தலைமை தாங்கக்கூடாதுனு சொல்லுறே?" என்று அப்புகாமி அழுத்தமாகக் கேட்டான்

"ஒரு பேச்சுக்கு, முதலாளிக தங்க சேமலாபத்துக்காக ஒரு சங்கம் ஆரம்பிக்கிறாங்கனு வைச்சுகோ...அந்த சங்கத்துக்கு ஒரு தொழிலாளியைத் தலைமை தாங்க விடுவாங்களா?" என்று கேள்வி மூலமே பெரியசாமி பதிலடி கொடுத்தான்.

"அது எப்படி விடுவாங்க...அவுங்க முதலாளிக...." என்றான் செல்லத்துரை மிகவும் பரிதாபகரமாக.

"அப்படிச் சொல்லு ...எப்படி முதலாளிகளாகிய அவர்களுக்குத் தலைமை தாங்க எங்களுக்கு உரிமை இல்லையோ, அதேபோலத் தொழிலாளர்களாகிய எங்களுக்குத் தலைமை தாங்க அவர்களுக்கும் எவ்வித தார்மீக உரிமையுமில்லை."

'அது நம்ம நாட்டிலே ஒருநாளும் நடக்காது" என்று அப்புகாமி முரட்டுப் பிடிவாதத்துடன் கூறினான்.

"வரலாற்றின் ஓட்டத்தினை எங்கள் விருப்பு வெறுப்புகளினாலே தடுத்து நிறுத்திவிட முடியாது. போராட்டத்தின் இறுதிக் கட்டத்திலே, முதலாளிகளும் தொழிலாளர்களும் எதிர் எதிர் அணிகளிலேதான் நிற்க நேரிடும் அப்படி ஒரு கட்டம் வரும்போது. தொழிலாளர் தலைவர்களாகப் பிரபலம் அடைந்துள்ள முதலாளிகள் நிச்சயமாக எங்களுக்கு எதிரான அணியிலேதான் சேர்ந்து கொள்வார்கள்..."

"உன்னுடன் பேச ஏலாது...ஒன்னுமாத்திரம் சொல்லுறேன்...நீ தெரிந்தோ தெரியாமலோ அழிவை

நோக்கிய பாதையைத்தான் தெரிந்து எடுத்துக் கொண்டாய்... நாங்கள் வாறேன்... படிச்சவன் யோசிச்சு நல்ல முடிவுக்கு வா...'' என்று கூறிக் கொண்டு அப்புகாமி புறப்பட்டான்.

செல்லத்துரை விசுவாசமுள்ள நாய்க் குட்டியைப் போல, அப்புகாமியைப் பின் தொடர்ந்து சென்றான்.

''போராட்டத்திற்கும், கூலிக்காகக் கோஷம் போடுறதுக்கும் குழம்புறாங்க...'' என்று அவர்களைப் பற்றி அநுதாபமாகச் சிந்தித்த பெரியசாமி கிழக்குத்திக்கிலே நிமிர்ந்து பார்த்தான்

அந்தச் சிவனொளிபாத மலை எவ்வளவு கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது!

இன்னொரு வழியிலே பார்க்கப்போனால், தொழிலாளர்களுடைய வர்க்கப் போராட்டம் இந்த மலையிலும் பார்க்கக் கம்பீரமானது!

பல விஷயங்களைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த பெரியசாமியின் கண்களிலே தோழர் பாண்டியன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

இவ்வளவு நேரமும் தொழிலாளருடைய வர்க்கப் போரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த பெரியசாமியின் சிந்தையிலே, சடுதியாக மரகதம் நிரம்பிக் கொண்டாள்.

'பாவம் மரகதம்' என்று வாய் முணுமுணுக்க, தோழர் பாண்டியனின் வரவினை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நின்றான்.

# 13

மரகதம் தையிலம்மையுடன் பக்கத்து நிரையில் நின்று தன் ஏழு மாதச் சிசுவை வயிற்றிலும், காலையிலிருந்து பறித்த இளம் தேயிலைத் தளிரைத் தன் பின்புறத்திலும் சுமந்தபடி, அசைந்து அசைந்து கொழுந்து பறிக்கும் காட்சியை கல்லுப்பாறையில் இருந்து சடையன் கங்காணி நோட்டமிட்டுக் கொண்டிருக்கின்றான்.

''தையிலம்மை...ஒரு வாயிககு வெத்திலை இருந்தா தாயேன்'' என்று மரகதம் இடைநடுவிலே கேட்டாள்.

''ஏண்டி, இன்னைக்கு வெத்தில பாக்கு கொண்டு வரலியா?''

''இல்லடி...காலையில் எழும்ப நேரமாயிரிச்சி... தேத்தண்ணிய சுட வைச்சி குடிச்சதோட வந்திட்டேன். சாப்பிடவும் கெடைக்கல்ல...''

''மாசக்காரி...சாப்பிடாம வேலைக்கு வரலாமா?... என்ன செய்யச் சொல்லுற? நம்ம தலை எழுத்து அப்படி இருக்கு. கிழமையில நாலு நாள் வேலை செய்யாட்டி, இந்தக் கிழம கெடைக்கிற ரேசன் அரிசியும் கெடைக்காதே அப்புறம் என்னத்த பொங்கிச் சாப்பிடுறது? அதுதான் பல்லக் கடிச்சுக்கிட்டு வேலைக்கு வந்திட்டேன்.''

தையிலம்மை மடியிலிருந்த வெத்திலையை எடுத்துக் கொடுக்க அதைப் பெற்று வாயிலே அசை போட்டுக் கொண்டே, ''நாளைக்கு ஏழு மாசம் பெறக்குதுனு நெனைக்கிறன். அப்படினா நாளைக்குக் கொழுந்து கணக்கப் பிள்ளைகிட்ட சொன்னா எங்கையாவது மட்டக் கொழுந்து எடுக்கப் போடுவாரு இல்லியா? அதோட தன்னயான லயத்தில வேலை செய்யலாம். இதுக்குமேல என்னால இந்த வரக்கட்டில ஏறி எறங்க முடியாது பாரு. அதுதாண்டி யோசிக்கிறன்...'' என்றாள்.

"இதுல என்ன யோசிக்க இருக்கு. எல்லாத்துக்கும் உள்ளது தானே? அதோட நீ தலைப்பிள்ளைக்காரி மிகக் கவனமாக இருக்கணும்"

இவர்கள் கதை அளப்பதை, வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருக்கும் சடையன் கங்காணி கண்டு, "என்னா தையிலம் கதை? கதையை விட்டுட்டு வேலையைப்பாருங்க... வேதம் பண்ணுக்கா மரத்த விட்டுட்டு வந்திடாதீங்க..." என்று சொன்னான்.

மரகதத்தால் தன் வயிற்றைச் சுமந்து கொண்டு தேயிலை மரங்களுக்கு ஊடாக நிரையில நடமாடுவது பெரும் கஷ்டமாக இருக்கிறது.

இதைக் கவனித்த தையிலம்மை, "ஏண்டி கொங்காணியில கெடக்கிற கொழுந்தை கூடையில கொட்டிட்டு வந்து எடேன். தலையில சுமந்துகொண்டு ஏண்டி கஸ்டபடுகிற?" என்று பரிதாபப்பட்டாள்.

மழையும் இலேசாகத் தூறத்தொடகிற்று.

அடுத்துக் கங்காணியின் குரல் கேட்கிறது.

"பெரிய மழை வருறதக்கு இடையில நெரைய முடிச்சு ரோட்டுக்கு ஏறுங்க... வெரசு படுத்துங்க..."

கங்காணி சொல்லி வாயை மூடுறதுக்கிடையில மழை 'சோ' என்று கொட்டவே, தன் தோளிலே தொங்கிக் கொண்டிருந்த குடையை எடுத்து விரித்துப் பிடிக்கின்றார்.

கொடும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் வேலை செய்து பக்குவப்பட்ட உழைப்பாளிகள் கொழுந்து பறிக்கும் பெண்கள். அதனால் மழையையும் பொருட் படுத்தாமல் வேகமாகக் கொழுந்து பறிக்கின்றார்கள்.

ஒருவாறு மரகதமும் நிரையை முடித்து ரோட்டுக்கு ஏறுகின்றாள்.

அப்பொழுதுதான் தன் காலிலே கடித்து இரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்துக் கொண்டிருக்கும் அட்டையைக் கண்டு விடுகின்றாள், அதனைப் பிடுங்கி எறிகின்றாள்.

"உழைப்பை முதலாளி சுரண்டுகின்றான். ரத்தத்தை அட்டை உறுஞ்சுகின்றது. உழைக்கும் சக்தி இருக்கும் வரை முதலாளி கவனிப்பான். சக்தி அற்றபோது உதறித் தள்ளிவிடுவான். அட்டையும் உடம்பில் ரத்தத்தை உறிஞ்சும் வரைதான் ஒட்டிக்கொண்டிருக்கும் உறிஞ்சி முடிஞ்சதும் ஆளை விட்டிடும்'' என்று தோழர் பாண்டியன் ஒரு கூட்டத்திலே பேசியது மரகதத்தின் நெஞ்சிலே எழுகின்றது.

திடீரென்று கொட்டத் தொடங்கிய மழை, திடீரென்றே நின்றும் விடுகின்றது.

மரகதம் உடம்பு எல்லாம் தண்ணீர் வடியத் தன் சீலையை உயர்த்தி மடக்கிப் பிழிகின்றாள்.

"நெரை முடிஞ்சதும் மடுவத்துக்கு வாங்க ...'' என்று சத்தம் போட்டுவிட்டு சடையன் கங்காணி மடுவத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

மரகதம் தன் கொங்காணியில உள்ள கொழுந்தை கூடையில தட்டி நிரபபினாள். தையிலம்மை கூடையைத் தூக்கி விடுகின்றாள்.

மரகதம் நடக்கத் தொடங்க, தையிலம்மையும் தன் கூடையைத் தூக்கிக்கொண்டு பின் தொடருகின்றாள்.

மழை மீண்டும் கொட்டத் தொடங்கிற்று!

மரகதம் பாதையை விட்டு குறுக்குப் பாதையில் ஏறினாள்.

மற்றைய பெண்கள் கொட்டும் மழையிலே மடுவத்தை அடைகின்றார்கள்.

மரகதம் தன் சுமையுடன் படிகளில் ஏறக் கஷ்டப் படுகின்றாள். நனைந்தசேலை அவளுடைய கால்களைப் பின்னுகின்றன.

கால்கள் பின்ன,படிவழுக்க, கூடையின் பாரம் அமுக்க மரகதம் இடறி விழுகின்றாள்!

அதனைக் கண்ட பெண்கள் கூட்டத்திலே ஒரே கூப்பாடு.

''அடியே வாங்கடி! மரகதம் கொழுந்துக் கூடையுடன் படியில விழுந்துட்டா....'' என்று வேலம்மா எல்லாருக்கும் கேட்கும்படி கூப்பாடு போட்டாள்.

பெண்கள் கூடையை இறக்கி வைச்சிட்டு, ஓடிவந்து மரகதத்தைத் தூக்கிக் கொண்டு ரோட்டுக்கு வருகின்றார்கள்.

மரகதத்தின் அவலநிலைக்கு இரக்கப்படுவதுபோல மழை நின்றது.

மரகதத்திற்குச் சுயநினைவே இல்லை.

பெண்கள் கூட்டம் அவளை மடுவத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றது.

மரகதத்தின் அவல நிலையைக் கண்ணுற்ற சடையன் கங்காணி, ''தையிலம்! அவ லயத்துக்குப் போயி காஞ்ச சேலை ஒன்னு எடுத்துக்கிட்டு வா...கொழுந்து லொறி இப்ப வந்திடும். தோட்டத்து ஆஸ்பத்திரிக்கு லொறியில அனுப்புவம்...'' என்று கூறி, காற்று விழும்படியாகப் பெண்களை விலகி நிற்கும்படி பார்த்துக் கொள்ளுகின்றார்.

அதற்குமேலே சடையன் கங்காணியினாலே கருணைச் சேவையில் ஈடுபடமுடியாது. வாங்கும் பணத்திற்குக் கடமையையும் செய்யவேண்டும் அல்லவா?

கொழுந்து நிறுப்பதை அவர் கங்காணிக்கத் தொடங்கினார்.

கொழுந்து நிறுத்து முடிந்தது.

லொறியும் வந்து சேர்ந்தது.

கொழுந்து லொறியிலே மரகதம் ஏற்றப்படுகின்றாள். உதவிக்கு தையலம்மையும் ஏற்றப்படுகின்றாள்.

கொழுந்து மூடைகளையும், சிசுவைக் சுமக்கும் மரகதத்தையும் ஒத்த சிப்பங்களாகவே மதிக்கும் லொறி விரைகின்றது.

★ ★ ★

மரகதத்திற்கு உயிராபத்தான நிலை. அவளைக் காப்பாற்றுவது கஷ்டம் என்ற அபிப்பிராயமே நிலவலாயிற்று.

இந்நிலையிலே தோழர் பாண்டியன் சுறுசுறுப்புடன் செயற்படத் தொடங்கினார்.

தோழர் பாண்டியனின் சத்தியத்திற்கு ஒரு பலம் இருந்ததை பெரியசாமி நேரிலே கண்டான்.

தோட்டக்காட்டுப் பெண்களுடைய வரலாற்றிலே ஒரு புதுமையைச் சாதித்தான் என்றுகூடச் சொல்லலாம். உயிருடன் போராடிக் கொண்டிருந்த மரகதத்தை முன்னர் அவள் சிகிச்சை பெற்ற மருத்துவமனைக்குச் சிகிச்சைக் காகக் கொண்டு செல்வதிலே வெற்றி பெற்றார். மரகதத் துடன் வீரையனும் சென்றிருந்தான்.

★ ★ ★

கொழும்பிலிருந்து திரும்பிய பாண்டியன் பல விஷயங் களைப் பெரியசாமிக்குத் தெரிவித்தான்.

கொழும்புக்குக் கொண்டு சென்றிருக்காவிட்டால மரகதம் பிழைத்திருக்க மாட்டாள் வயிற்றிலிருந்த சிசு செத்துவிட்டது. அதனை அறுவை சிகிச்சை மூலம் வெளியே எடுத்தார்கள். அவள் ஆபத்தான கட்டத்தினை தாண்டி உடல்தேறி வருகின்றாள் என்றும், இன்னும் சில தினங்களிலே அவள் பூரண சுகத்துடன் திரும்பி விடுவாள் என்றும் தோழர் பாண்டியன் தெரிவித்தது அவனுக்குப் பால் வார்த்ததுபோல இருந்தது.

இன்னொரு விஷயத்தினைத் தோழர் பாண்டியன் தெரிவித்ததும் பெரியசாமி அதிர்ந்து போனான்.

சுல்தான் ராவுத்தர் இந்தியா செல்வதற்கு முன்னர் தோழர் பாண்டியனுடன் தொடர்பு கொள்வதாக வாக்களித்துச் சென்றிருந்தார். அவ்வாறே அவர் கடிதமும் எழுதியிருந்தார்.

பரமசிவத்தைப் பற்றி விசாரித்து எழுதும்படி முன் யோசனையுடன் தோழர் பாண்டியன் கேட்டிருந்தார்.

ராவுத்தர் முழு விபரங்களையும் அறிந்து எழுதியிருந்தார்.

பரமசிவம் உண்மையிலே ஒரு 'கள்ளத்தோணி' தான். அதாவது சட்ட விரோதமாக, இந்நாட்டிலே வந்து குடியேறியவன். அத்துடன், பெரிய முதல்கள் இன்றிக் கள்ளக் கடத்தலிலும் ஈடுபட்டிருந்தான். இவற்றிலும் பார்க்கக் கேவலமான ஒரு விஷயத்தையும் பரமசிவம் செய்திருக்கின்றான். அவன் ஏற்கனவே சட்டப்படி ஒரு பெண்ணை இந்தியாவிலே கல்யாணமும் முடித்திருந்தான். அந்தப் பெண்மூலம் அவனுக்கு இரண்டு பிள்ளைகளும் இருந்தார்கள்.

இவற்றை எல்லாம் மூடி மறைப்பதற்குத்தான் அவன் ஒரு சிப்பந்தியாக வேலை பார்த்திருக்கின்றான். இந்த நாட்டின் பிரஜா உரிமை பெற்ற ஒரு பெண்ணை

மணந்தால், பிரஜா உரிமை பெற்றுக்கொள்ளலாம் என்று அவன் நம்பினான். இதற்காகத்தான் அவன் மரகதத்தினை மணம் முடித்தான்.

"இரண்டு பக்கமும் பிழையிருக்கிறது பெரியசாமி. இந்நாட்டிலே பரமசிவத்தினைப் போன்ற வேஷத்தாரிகள் பலர் அலைகின்றார்கள். இவர்களுடைய செயல்களிலே, இந்திய சமூகம் முழுவதும் தலைகுனிய வேண்டும்" என்றான் பாண்டியன்.

"பாவம் மரகதம்! அவளுடைய வாழ்க்கை இப்படிக் கெட்டுக்குட்டிச் சுவராகி விட்டதே..." என்று வருந்தினான் பெரியசாமி.

"நான் அப்படி நினைக்கவில்லை. மரகதம் மணம் முடித்து, அவள் கணவன் செத்துப்போனான் என்று வைத்துக்கொள். அந்த இளம் விதவைக்கு வாழ்வளிக்க ஒருத்தரும் முன் வரமாட்டார்களா?" என்று தோழர் பாண்டியன் கேட்டார்.

இந்தக் கேள்வி பெரியசாமியின் உள்ளத்திலே ஓயாத சலனத்தினை ஏற்படுத்தி விட்டது.

## 14

சிவனொளி பாதத்தின் உச்சியை அடைவதற்கான படிக்கட்டுகளிலே ஒளிரும் தீபங்கள் இங்கிருந்து பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருக்கின்றன. இருளை யும் இருட்டையும் போக்கும் ஒளிக் குஞ்சுகளின் மெதுவான மென்மையான, ஆனாலும் நிச்சயமான உயிர்ப்புகள்.

இருளின் பிடிமையிலிருந்து விடுதலை பெறுவதற்காகத் தான் மனிதன் தீபத்தை வகுத்தமைத்தானா? அன்றேல், இருளின் தனித்துவமா? அழகின் இரகசியத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சியாகத் தீபத்தை ஏற்றினானா?

இரவிலே, மேலே மேலே ஏறிக்கொண்டே இருக்கும் தீபப் பொட்டுகளுடன், சிவனொளி பாதமலை மேலும் அழகும் காம்பீரியமும் பெற்ற புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. இதனைப் பார்க்கும்பொழுது கவிஞனுடைய மனத்திலே எத்தனை காவியக் கற்பனைகள் தோன்றக் கூடும்?

கோமதி இந்தக் காட்சியை நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டே நின்றாளாயினும், அவளுக்கு எவ்வகையான அழகியற் கற்பனைத் தாக்கங்களும் ஏற்படவில்லை. தனிமையின் அச்சம் அவள் மனத்திலே கவிந்திருந்தது. பெரியசாமி பெரியதுரையின் பங்களாவுக்கு இந்த அகால நேரத்திலே சென்றிருக்கின்றான். இன்னமும் வீடு திரும்பவில்லை. இருட்டிலும் தனிமையிலும் அவளுடைய மனம் படபடத்துக் கொண்டது. பயத்திலே அந்தத் துடிப்பு அயலெல்லாம் கேட்கக் கூடும் போலவும் கோமதிக்குத் தோன்றியது.

லயத்துக்கு இறங்கும் பாதை வழியிலே தீப்பந்தம் ஒன்று நகர்ந்து வருவது கோமதியின் கண்களிலே படுகின்றது. ஒரு வேளை அண்ணன் பெரியசாமி தோழர் பாண்டியனுடன் அல்லது குமாரவேலுடன் திரும்பிக் கொண்டிருக்கலாம் என்று ஒருகணம் நினைத்தாள். ஆனால், அடுத்த கணமே அந்த எண்ணம் அழிந்தது. பெரியசாமி எந்தக் கும்மிருட்டிலும் தீப்பந்தத் துணை நாடாமல் சர்வ சுதந்திரமாகவே திரிவான். எனவே, வேறு யாராவது வழிப்போக்கர்களாக இருக்கலாமோ என்றும் நினைத்துக் கொண்டாள்.

ஆனால், தீப்பந்தம் தங்களுடைய காம்பராவை நோக்கி நகர்ந்து வருவது அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. பெரியசாமி வரவில்லை. இந்தப் புதியவர்கள் ஏன் வரவேண்டும்? பயத்தினால் அவளுடைய இதயத் துடிப்பே நின்றுவிடும் போல இருந்தது.

தீப்பந்தத்தினைத் தாங்கி வருபவன் செல்லத்துரை என்பதை அடையாளம் கண்ட பின்னர்தான் அவளுடைய நெஞ்சம் அமைதி அடைந்தது. அந்தச் சில மணித்துளி நேரத்திற்கிடையில் பல தடவைகள் செத்துப் பிறந்தது போன்ற விநோத பய உணர்ச்சியிலிருந்து விடுதலை பெற்றாள்.

''கோமதி... கோமதி...'' என்று செல்லத்துரை குரல் கொடுத்தான்.

''யாரது? செல்லத்துரை அண்ணாச்சியா!'' என்று பதிலுக்குக் கேட்டு வைத்தாள்.

''ஆமா கோமதி. ஒன் அண்ணன் பெரியசாமியைப் பார்த்துப் போகலாமெண்ணு ஜெயராமை அழைச்சுக் கொண்டு வந்தேன்...''

''எதுக்காக அண்ணாச்சி, இந்த அகால நேரத்திலே அண்ணாவைத் தேடுறீங்க?''

''ஒரு காரியமா ஒன் அண்ணன பார்க்கணும்... பெரியசாமி இல்லையா? எங்க போனான்?''

''அண்ணன் தொர பங்களாவுக்கு போயிருக்கு... இப்ப திரும்பி வந்துடும்'' என்று கூறிக்கொண்டே, ஸ்தோப்பிலே போடப்பட்டிருந்த பெஞ்சை கோமதி துண்டினாலே துடைத்து விட்டாள். ஸ்தோப்பு லாம்புத் திரியை ஏற்றி வைத்தாள்.

''இப்படிக் குந்துங்க...'' என்று இருவருக்கும் பெஞ்சைக் காட்டிவிட்டு, கோமதி உள்ளே போனாள்.

இருவரும் பெஞ்சிலே அமர்ந்து கொண்டார்கள்.

'வேலை நிறுத்தத்தை ஒழிப்பதற்கு தொர ஏதோ சதி செய்து கொண்டிருக்கிறான் போல வெளங்குது... இல்லாட்டி தொர பங்களாவுக்கு சாமி இந்த நேரத்தில எதற்காகப் போகிறான்' —இப்படிச் சில எண்ணங்கள் செல்லத் துரையின் மனத்திலே தோன்றியது.

பெஞ்சிலே உட்கார்ந்திருந்தவர்கள் பேசாமல் இருப்பதைக் கண்ட கோமதி, காம்பரா வாசலுக்கு வந்து, "எதுக்கு யோசன பண்ணிக்கிட்டு பேசாமஇருக்கிறீங்க?.." என்று கேட்டாள்.

"சாமி எதுக்காக தொர வீட்டுக்குப் போயிருக்கான்?" என்று செல்லத்துரை கேட்டான்.

"தொர ஆளனுப்பித்தான் அண்ணன் போச்சி. நாளைக்கு தோட்டத்தில ஸ்ட்ரைக்காமே. அதனால்தான் வரச்சொல்லி இருக்காரு தொர..." என்று கோமதி வஞ்சகம் எதுவும் இல்லாமல் பதில் அளித்தாள்

"ஓகோ அப்படியா விஷயம்?..கூப்பிட்டு அனுப்பித்தான் போயிருக்கானா?" என்று ஜெயராமன் உச்சுக் கொட்டிக் கொண்டான்.

பின்னர் மௌனமே நிலவியது.

"நாளைக்கு ஸ்ட்ரைக்காமே? நடக்குமா?" என்று கோமதி கேட்டாள்.

"நிச்சயமாக வேலைநிறுத்தம் நடைபெறத்தான் போகுது.. அத எந்தச் சக்தியாலும் நிப்பாட்டமுடியாது...' என்றான் செல்லத்துரை. மேடைப் பிரசங்கி போன்று இன்னும் பல விஷயங்களை புழக்க வேண்டும் என்றுதான் செல்லத்துரை நினைததான் ஆனால் அதற்கிடையில் பெரியசாமி அங்கு வந்து சேர்ந்தான்.

செல்லத்துரையையும் ஜெயராமனையும் இனங் கண்டு கொண்டு, "உம்...என்ன வழக்கமில்லாம புதுசா இந்தப் பக்கம் வந்திருக்கீங்க...!" என்று பெரியசாமி கேட்டான்.

செல்லத்துரையும் ஜெயராமனும் பெஞ்சிலிருந்து எழுந்தார்கள்.

"நாங்க சாமி ஒரு விஷயமா உன்கிட்ட பேசத்தான் வந்திருக்கோம்....நம்ம அபபுகாமி தலைவர்தான் எங்கள

அனுப்பி வைச்சாரு...'' என்று செல்லத்துரை இழுத்தான்.

“அப்படியா வெஷயம்?'' என்று பெரியசாமி அசிரத்தையுடன் கேட்டான்.

‘‘நாளைக்கு தோட்டத்தில வேலைநிறுத்தம் நடக்குது. ஒனக்குத் தெரியுந்தானே... அது வெஷயமாத்தான் ..'' இந்தத் தடவை ஜெயராமன் இழுத்தான்.

‘‘வேலை நிறுத்தம் எதுக்காக?'' என்று பெரியசாமி ஒன்றுமே அறியாதவனைப் போல கேட்டான்.

‘‘ஒனக்குத் தெரியாதா? .. நிர்வாகம் ஒரு மாதம் போனஸ் தருவதாகச் சொன்னதை உன் யூனியன் ஒப்புக் கொண்டு விட்டதாமே...'' என்று செல்லத்துரை ஒரு சம்பவாதத்திற்குப் பிள்ளையார் சுழிபோட்டான்.

‘‘ஆமாம்...'' என்று பெரியசாமி கூறினான்.

இந்த ஆமோதிப்புடன் தொடர்ந்து நடைபெற்ற சம்பவாதம் வருமாறு; ‘‘ஏன் ஒப்புக்கொண்டீர்கள்?'' என்றான் செல்லத்துரை.

பெரியசாமி: போனஸ் விஷயமா எல்லா யூனியனும் கலந்து பேசினோம். தேயிலை விலையின் வீழ்ச்சி காரணமாக இந்த ஆண்டு போனஸே கொடுக்க முடியாது என்று தோட்ட நிர்வாகம் அறிவித்திச்சி ..நாங்க பேசிய தன் பயனாக ஒரு மாத போனஸ் கொடுக்கலாமுனு நிர்வாகம் ஒப்புக்கொண்டிருச்சி...அந்த முடிவை நாங்களும் ஒத்துக் கொண்டோம்!

ஜெயராமன்: அத எங்க யூனியன் ஒத்துக் கொள்ளல...''

செல்லத்துரை: சாமி! நீயும் ஒன் யூனியனும் அத ஒத்துக்கொண்டதுதான் பிசகு... தொர விரிச்ச வலையில் நீ விழுந்திட்ட...எங்க யூனியன் இரண்டுமாத போனச கேட்டு கடிதம் போட்டிச்சி...எங்க கோரிக்கையை ஒத்துக்கொள்ள வில்லை. ஸ்ட்ரைக்கில் குதிக்கப் போறோம்!

பெரியசாமி: இதோ பார் செல்லத்துரை.... என்னப் பத்தி எது வேணுமானலும் சொல்லு. அனா, தொரயிடம் கைக்கூலி வாங்கி ஏமாந்து போகும் அளவுக்கு இந்தப் பெரியசாமி முட்டாளுமில்ல, சுயநலவாதியுமில்ல.... நான் பாட்டாளி வர்க்கத்திலே ஒருவன். இதநான் பெரிய கௌரவமாக நெனைக்கிறேன். எங்கள் யூனியனின் முந்திய தலைவர்களின் மோசக்கார நடவடிக்கைகளை தைரியமா அம்பலப்படுத்தினேன்... என்மீது தொழிலாளர்களுக்கு நம்பிக்கை இருப்பதாலேதான் இந்தக் தோட்டத்தின் தலைவராக என்ன தேர்ந்தெடுத்தாங்க... இது உங்களுக்குத் தெரியும்...

செல்லத்துரை: அது எங்களுக்குத் தெரியும் சாமி... உன்னைத் தலைவராக்கணும் என்று தோழர் பாண்டியன் செய்த காரியங்களும் தெரியும் சாமி... அதுவேற வெஷயம். ஆனா, மற்ற எல்லா யூனியன்களும் ரெண்டு மாச போனசுக்கு ஆதரவு தருவதாக சொல்லியிருக்காங்க... நாளைக்கு எல்லாரும் வேலை நிறுத்தம் செய்யும்போது நீ மட்டும்...

ஜெயராமன்: வேலை நிறுத்தம் செய்ய எங்க தலைமைக் காரியாலயமே அனுமதிச்சிரிச்சி...

பெரியசாமி: வேலை நிறுத்தத்தாலே கஷ்டப்படப் போறது யார்? தொரையா? முதலாளிகளா? அல்லது உங்களுக்கு அனுமதி தந்த தலைவர்களா? அவர்களுக்கு லாபம் குறையலாம்...இது கொசு கடிக்கிற கஷ்டத்தைக்கூட அவர்களுக்குக் கொடுக்காது. நாமோ சாப்பாட்டுக்குத் திண்டாட நேரும்.

செல்லத்துரை: அப்ப நாங்க ஸ்ட்ரைக் பண்ணவே கூடாது என்னு சொல்றியா?

பெரியசாமி: அப்படி நான் சொன்னேனா? வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர்களுடைய உரிமைகளை

வென்றெடுப்பதற்கான ஆயுதங்களிலே ஒன்று என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன்.

ஜெயராமன்: அப்படியென்றால் நாளை வேலை நிறுத்தத்தில் எங்களுடன் சேர்ந்துகொள். இந்த ஸ்ட்ரைக்கிற்காக நாங்கள் பலநாட்கள் பட்டினி கிடக்கவும் தயார்

பெரியசாமி: உங்களுடைய போராட்டம் அர்த்தமற்றது. ஒரு மாத போனஸுக்குப் பதிலாக ரெண்டு மாச போனஸ் கிடைச்சிட்டா தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் தீர்ந்து விடப் போவதில்லை. வண்டி இழுக்கும் மாட்டிற்குப் புண்ணாக்குத் தொட்டி காட்டுற மாதிரி...

செல்லத்துரை: இப்படியான சாதுர்ய பேச்சாலே நீ தப்பிக் கொள்ளலாம் எண்ணுபார்க்காத....நீ தொரையின் கைக்கூலி என்றும், தொழிலாளர்களின் துரோகி என்றும் உன்னைப் பற்றிப் பிரசாரம் செய்வோம். தொழிலாளர்கள் எங்கள் பிரசாரத்தை நம்புவார்கள். நீ செல்லாக்காசு ஆவாய். அந்தப் பிரசாரத்தால ஆக்ரோஷம் கொள்ளும் தொழிலாளர்கள் உன்னை அடித்து இந்தத் தோட்டத்தை விட்டே துரத்துவார்கள்.

பெரியசாமி: போற்றுவார் போற்றட்டும்! —புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும்! எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. பாட்டாளி வர்க்கம் தன்னுடைய உரிமைகள் முழுவதையும் வென்றெடுப்பதற்கு என்னையே பலியாக்கவும் நான் பின்நிற்கப் போவதில்லை. ஆனா, உங்கள் ஸ்ட்ரைக் அர்த்தமற்றது. தொழிலாளருடைய தலைவர்கள் என்று வேஷம் போடுபவர்களின் அரசியல் ஆதாயங்களுக்காக, தொழிலாளர் பலி கடாக்கள் ஆக்கப்படுவதை நான் அனுமதிக்க மாட்டேன். வர்க்க உணர்விலே சுத்தஞ் செய்யப்பட்டுள்ள இந்த மனச்சாட்சியின் படிதான் நான் நடப்பேன்.

ஜெயராமன்: உன் மனச்சாட்சி எவ்வளவு தூரத்திற்கு உன்னைக் காப்பாத்தப் போகின்றது என்பதை நாங்களும் பார்த்துக் கொள்ளுகின்றோம்.

சம்ப வாதத்தினை இந்தப் பயமுறுத்தலுடன் முடித்துக் கொண்டு அவர்கள் வெளியேறினர்.

★ ★ ★

அவர்களுக்கிடையில் நடைபெற்ற சம்பாஷனை முழுவதையும் கோமதி காம்பராவுக்குள் இருந்து, கேட்டுக் கொண்டே இருந்தாள். அவர்கள் பெரியசாமியை அச்சுறுத்திச் சென்றதை நினைக்க அவளுக்குப் பயமாக இருந்தது.

ஸ்தோப்பில் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்த பெரியசாமிக்கு அருகிலே கோமதி மெதுவாக வந்தாள்.

"அண்ணா! நீ ஒண்ணுக்கும் போகாதே!.... ஊரோட நாமும் ஒத்து ஓடினாத்தான் நல்லது. அந்தப் பயலுக எதயும் செய்வானுக..." என்று கோமதி நடுங்கியவாறு கூறினாள்.

"கோமதி! நீ சும்மா இரம்மா.... இதுக்கெல்லாம் பயந்தா முடியுமா? தொழிலாளர்களை மிரட்டியும் பயங் காட்டியும் சில தொழிற்சங்கங்களும், அவற்றின் தலைவர் களும் வளர்ந்துக் கிட்டிருங்காங்க.... தொழிலாளர்களுடைய வயித்தில அடிச்சி அவுங்க வயித்த நிரப்புறாங்க... மலையகப் பாட்டாளி வர்க்கத்தின் மனச்சாட்சிகள் நீண்ட காலமாக உறங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களை விழிப்படையச் செய்வதுதான் எங்களுடைய இலட்சியம்.. அவர்கள் விழித்துக் கொண்டால், இந்தப் போலித் தொழிலாளர் தலைவர்கள் எல்லாம் ஒரே நொடியிலே பஸ்பமாகி விடுவார்கள்.

"நீ ரொம்ப... ரொம்ப சொல்லுற! நீ சொல்லுற தெல்லாம் நம்ம ஆளுகளுக்கு விளங்கவா போகுது?..."

எதை எப்படிச் சொல்வது என்று அறியாது கோமதி தடுமாறினாள்.

"தங்கச்சி! விளங்கிற காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கு... இப்ப கொஞ்ச பேர் தொழிலாளர் மத்தியில செல்ல முடியாம, என்னா செய்யிறதென்று தெரியாம, ஏதோ தொழிலாளர்களுக்குச் சேவை செய்வதாகப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்காங்க... எல்லாம் ஹம்பக்! இந்த வியாபாரம் ரொம்ப நாளைக்கு நின்று பிடிக்காது" என்று கூறிய பெரியசாமி, தைரியமூட்டும் வகையிலே கோமதியைப் பார்த்து மானசீகமாகச் சிரித்தான்.

"நீங்க சொல்றது நியாயம் என்று எனக்குத் தெரியிது. ஆனா, வந்திட்டுப் போனவங்கள நெனச்சா எனக்குப் பயமாவும் இருக்கு...." என்று கூறிய கண்கள் பயத்தினாலே படபடப்பதைப் பெரியசாமி அவதானித்தான்.

"தங்கச்சி! உன்னை ஒன்று கேக்கிறேன். நேர்மையாப் பதில் சொல்லு. நான் கோழையாக, பாட்டாளி வர்க்கத்துக்குத் துரோகியாக, நூறு வயசு வாழணும் எனறத விரும்பிறியா? இல்ல, பாட்டாளி வர்க்கத்துப் போரணியிலே ஒரு வீரனாக இருக்கிறத விரும்பிறியா?" என்று மிக ஆதரவுடன் கேட்டான்.

"ஒண்ணு சொல்றன் அண்ணா... உன்மூலந்தான் நான் வெளியுலகப் பாக்கிறன். ஒன் உடம்பிலே ஓடுற ரத்தந்தான், ஒங்க தங்கை உடம்பிலயும் ஓடுது... தனக்காக வாழ்றது மிருகம்... மத்தவங்களுடைய வாழ்க்கைக்காகத் தன் உயிரைக் கொடுக்கிறவன் தெய்வம்..."

கோமதிக்கு இப்படி எல்லாம் எப்படிப் பேச வருகின்றது என்று பெரியசாமி ஆச்சரியப்பட்டான்.

"துணிவே துணை! பயம் என்ற நோய் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்" என்று அடிக்கடி கூறும் மரகதத்தின் நினைவும் அவனுடைய மனத்திலே எழுந்தது.

அவளுக்குத்தான் அடுக்கடுக்காக எத்தனை துன்பங்கள் வந்து விட்டன? அவற்றை எல்லாம் அவள் எப்படி எல்லாம் தாங்கிக் கொண்டாள். அந்தத் துன்பங்களின் மத்தியிலே கூட, அவள் தொழிற்சங்க நடவடிக்கைகளிலே காட்டும் அக்கறை பிரமிப்பை ஊட்டவல்லது.

''கோமதி! சில அவசர அலுவல்கள் இருக்கின்றன. நான் வெளியிலே சென்று உடன் கவனிச்சுத் திரும்பணும். காம்பராவைப் பூட்டு கோமதி. நான் உன்னை மரகதத்தின் காம்பராவுக்குக் கொண்டு போய் விடுகின்றேன். இன்று அங்கேயே படுத்துக்கோ...'' என்று பெரியசாமி கூறினான்

''எனக்கு ஒரு பயமும் இல்ல அண்ணா....'' என்று கோமதி கூறினாள்.

''நான் அதுக்காகச் சொல்லேல்ல... இன்னைக்கு நீ மரகதத்தின் காம்பாரவிலே தூங்கு... பரவாயில்லை''

கோமதி கம்பிராவை ஒதுங்க வைத்து, அதனைப் பூட்டுவதிலே முனைந்தாள்.

பெரியசாமி சிவனொளிபாத மலையின் கம்பீரத்தினைப் பார்த்தபடி நின்றான்.

## 15

பெரியசாமி வாழும் காம்பராவுள்ள லயத்துக்கு அருகிலே செல்லும் பாதையில் தொழிலாளர் கோஷ்டி ஒன்று பல்வேறு கோஷங்களைக் கோஷித்துக் கொண்டு சென்றது. அவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் என்பதை தலைவர்கள் போட்ட கோஷங்கள் எடுத்துக் காட்டின.

பெரியசாமி காம்பராவுக்கு வெளியே வரவில்லை. கோஷங்களை மட்டும் உன்னிப்பாகக் கேட்டான்.

“தொழிலாளர் வாழ்க!”

“ஐக்கியம் ஓங்குக!”

“துரோகிகள் ஒழிக!”

“கருங்காலிகள் ஒழிக!”

“வெற்றி நமக்கே!”

“இரண்டு மாத போனஸ் பெற்றே தீருவோம்!”

இந்தக் கோஷங்களுடன் சென்று தொழிலாளர் கோஷ்மகள் ஓரிடத்திலே கூடினார்கள். அந்தக் கூட்டத்திலே செல்லத்துரை மிகவும் ஆக்ரோஷமாகப் பேசினான்.

“தோழர்களே! இன்று வேலை நிறுத்தத்திலே குதிக்கின்றோம். நாம் இரண்டு மாத போனஸ் தரவேண்டும் என்று கேட்டிருந்தோம். தோட்டத்துப் பெரிய தொரயும் நிர்வாகமும் நமது கோரிக்கைக்கு இணங்கவில்லை. முறையாகக் கேட்டோம் பலன் இல்லை. அதனால இன்று வேலை நிறுத்தத்திலே இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது நம்மோடு சேர்ந்து எல்லோரும் ஒத்துழைக்கின்றார்கள். ஆனால், ஒரேயொரு யூனியன் மட்டும்வேலைநிறுத்தத்திலே கலந்து கொள்ளவில்லை. அவர்கள் இன்று வேலை செய்யப் போகின்றார்கள் இந்த நயவஞ்சகச் செயலால் அவர்கள் நம் ஒற்றுமையைச் சீர்குலைக்கப் பார்க்கின்றார்கள் இப்பொழுது நமது சகாக்கள் யார் என்பதை அறிந்து கொண்டதைப் போலவே, நமது பகைவர்கள் யார், நம்மைக் காட்டிக் கொடுக்கின்ற கருங்காலிகள் யார் என்பதையும் இனங் கண்டு கொண்டோம் கருங்காலிகளுடைய சதிவேலைகளை முறியடிப்போம். வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவோம். தோட்ட நிர்வாகத்திற்கு

அடிபணிய மாட்டோம். இரண்டு மாச போனஸ பெற்றே தீருவோம்...''

செல்லத்துரை இவ்வாறு பேசிக் கொண்டிருக்க, வேலை நிறுத்தத்திலே குதித்துள்ள தொழிலாளர்கள் மத்தியில் அப்புகாமி பம்பரம்போல செயற்பட்டு வந்தான்.

பெரியசாமியின் தலைமையிலான யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள், தனித்தனியே வேலைக்குச் செல்லலாம் என்றுதான் முதலிலே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நள்ளிரவு வரை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அந்தத் தீர்மானம் மாற்றப்பட்டது. வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களைப் பயமுறுத்தவும், அவசியம் ஏற்பட்டால் வன்முறையைப் பிரயோகித்து, அவர்களைத் தாக்கி அச்சுறுத்தவும் அப்புகாமி ஏற்பாடுகள் செய்துவருகின்றான் என்று கிடைத்த தகவல்களை வைத்துத்தான் இந்த மாற்றம் செய்யப்பட்டது. வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் எல்லோரும் பெரியசாமியின்காம்பராவுக்கு முன்னாலே ஒன்று சேர்ந்து, அங்கிருந்து எல்லோரும் அமைதியாகப் பெரட்டுக் களத்திற்குச் செல்லவேண்டும். ''வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் வன்முறையில் இறங்கினாலும், நாங்க சாத்வீகத்தினையே கடைப் பிடிப்போம்'' என்று பெரியசாமி அறிவித்ததை குமாரவேலும் சில சகாக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை.

''அவங்க எங்கள அடிச்சா, நாங்க அத வாங்கிக் கட்டிக் கொண்டு சும்மா போவதா? அவங்க அடிக்க, நமது கை பூப்பறிக்கப் போக வேணுமா? நாம கோழைகளா?'' என்று குமாரவேல் கேள்விகளை அடுக்கினான்.

''சாத்வீகம் என்பது கோழைகளின் ஆயுதமல்ல. நாங்கள் வேலைக்குச் செல்லத் தீர்மானித்துள்ளோம். இதற்கான காரணத்தை நீங்கள் அறிவீர்கள். முன்வைக்கப் பட்டுள்ள கோரிக்கை நியாயமானதல்ல. ஆனால், வேலை நிறுத்தத்திலே குதிப்பவர்கள் யார்? அவர்களும்

தொழிலாளர்களே. அவர்கள் நியாயங்களைப் பிழையாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அறியாமையிலே அவர்கள் பிழையாக நடக்கலாம். அவர்கள் நம்மைத் தாக்கினால், நாம் திருப்பித் தாக்கினால் என்ன நடக்கும்? தொழிலாளரும் தொழிலாளரும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொல்லுவதிலே தான் வந்து நிற்கும். எதற்காக இந்த இரத்தம் சிந்தப்படுகின்றது? இறுதியாக என்ன பலன் கிடைக்கப் போகின்றது? அறியாமையினாலே, நம்மை விரோதக் கண்களுடன் நோக்கும் அவர்களை அன்பாலே வென்று, நமது அணிக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அதுதான் முறையும் நியாயமும்'' என்று பெரியசாமி கொடுத்த விளக்கங்களை ஈற்றிலே அவர்கள் ஒரு முகமாக ஏற்றுக்கொண்டார்கள்.

வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் கூடியிருந்தார்கள். ஆண்கள் கோஷ்டிக்குத் தலைமை தாங்குவதுபோன்று குமாரவேல் முன்னணியில் நின்றான். பெண்கள் கோஷ்டிக்குத் தலைமை தாங்குவதுபோல மரகதம்முன்னணியிலே நின்றாள். இந்த இரண்டு கோஷ்டிகளுக்கு ஐந்தடி முன்னாலே பெரியசாமி நடந்து கொண்டிருந்தான். அவர்கள் மிக அமைதியாகப் பின்னாலே நடந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது செல்லத்துரை தலைமையிலே ஒரு கோஷ்டி வந்து அவர்களைத் தடுத்து நிறுத்தியது. வேலைக்குச் சென்ற கோஷ்டியினரை அப்படியே நிற்கும் படி சமிக்ஞை செய்து, பெரியசாமி மட்டும் முன்னுக்குச் சென்றான்.

''இதோ கருங்காலிகள் கூட்டத்தின் தலைவன் வருகின்றான்!'' என்று செல்லத்துரை கத்தினாள்.

''செல்லத்துரை! வீணாகக் கத்தாதே! எங்களுக்கும் கத்தத் தெரியும். நீங்கள் வேலை நிறுத்தத்திலே இறங்கியுள்ளீர்கள். அந்த உரிமை உங்களுக்கு இருக்கின்றது.

நாங்கள் வேலைக்குச் செல்லுகின்றோம். வேலைக்குச் செல்ல எங்களுக்கு உரிமை இருக்கிறது. வீணாகத் தகராறு செய்யாமல், வழியை விட்டு ஒதுங்கி நில்லுங்கள்'' என்று பெரியசாமி கூறினான்.

இவ்வாறு பெரியசாமி கூறிக்கொண்டிருக்கும் பொழுது, எதிர்பாராதது நடந்தது. தேயிலைப் புதர்களின் மறைவிலே ஒளித்திருந்த கோஷ்டி ஒன்று திடீரென்று பெரியசாமிக்குப் பின்னாலே தோன்றியது. ஒருவன் தன் கையிலே வைத்திருந்த கம்பு ஒன்றினாலே பெரியசாமியின் மண்டையிலே ஓங்கி அடித்தான். பெரியசாமி அந்த இடத்திலே மயங்கி விழுந்தான். பெரியசாமி நிலத்தில் வீழ்ந்ததும், தாக்குதல் நடத்திய கோஷ்டி மீண்டும் தேயிலைச் செடிகளின் ஊடாகச் சென்று மறைந்தது.

எல்லாமே மிகச் சடுதியாக நடைபெற்றதினால், வேலைக்குச் சென்ற கோஷ்டி அப்படியே ஸ்தம்பித்து நின்றது.

முதலில் மரகதமே ஓடிவந்து, கீழே விழுந்த பெரியசாமியைத் தூக்கினாள்.

அவன் யார்? அவனுக்கும் தனக்கும் என்ன உறவு? மற்றவர்கள் இதைப்பற்றி என்ன நினைப்பார்கள்? இவற்றைப் பற்றி எல்லாம், மரகதம் கிஞ்சித்தும் கவலைப் படவில்லை.

## 16

''பெரியசாமி! உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள் உன்முடிவு சரியென்றுதான் நினைக்கின்றேன். நீ செய்துள்ள முடிவை அநுசரித்துத்தான் நான் நடவடிக்கை எடுப்பேன். அப்ப நான் வரட்டுமா?'' என்று கூறிய தோழர் பாண்டியன் புறப்படத் தயாரானார்.

அப்பொழுது மரகதம் கஞ்சியுடன் அங்கு வந்து நின்றாள். பெரியசாமி மட்டுமே இருப்பான் என்ற நினைவிலே வந்த மரகதம், தோழர் பாண்டியனைக் கண்டதும் வெட்கம் பிய்த்துத் தின்னத் தடுமாறினாள்.

''மரகதமா? பெரியசாமிக்குக் கஞ்சி கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று கூறிக் கொண்டு தோழர் பாண்டியன் வெளியேறினார்.

பெரியசாமி எழுந்திருக்க முயன்றான். அவனை அவ்வாறு செய்யாதவாறு தடுத்து, கஞ்சியைப் பருக்கினாள்.

மரகதத்தின் மெல்லிய ஸ்பரிசத்துடன் கஞ்சியைக் குடித்த பொழுது அவனுக்கு ஏதோ நினைவுகள் எல்லாம் எழுந்தன. மரகதத்தின் எதிர்காலம் பற்றி அவன் ஒரு முடிவுக்கு வந்திருந்தான். தோழர் பாண்டியன் தன் முடிவினை வரவேற்றது ஆறுதலாகவும் இருந்தது.

எதற்கும், முதலிலே கோமதிக்கு ஒரு வாழ்வு தேடி வைப்பதுதான் பெரியசாமிக்குப் பெரிய பிரச்சினையாக இருந்தது. நேற்று முன்தினம், பெரியசாமியைப் பார்ப்பதற்குத் தோழர் பாண்டியன் குமாரவேலுடன் வந்திருந்தார். ''சாமி, கோமதியின் வருங்காலம் பற்றி நீ இனிக் கவலைப் படத் தேவையில்லை. அதைப் பற்றிக் கவலைப்படுவதற்கு இன்னொருவனும் இருக்கின்றான்'' என்று கூறிய பாண்டியன். வேலுவைப் பார்த்துச் சிரித்தார். குமாரவேல் மிகவும் சங்கடப்பட்டான். ''தோழர்! முதலிலே பெரியசாமி எழுந்து நடமாடட்டும்... ஒன்று சொல்லுவேன் தோழர். நீங்க கோபப்படக் கூடாது நல்ல மார்க்ஸிஸவாதி ஒருவன் நல்ல கல்யாணத் தரகனாகவும் இருக்கவேணும் என்கிற நியதி இல்லை. அல்லவா?'' என்று பொடி வைத்துப் பேசி, தோழர் பாண்டியனை அடக்கினான். இந்த உரையாடலிலே ஆழ்ந்த அர்த்தம் இருப்பதைப் பெரியசாமி புரிந்து கொண்டான். உடனடியாக அதன் அர்த்தத்தினை

அறிந்து கொள்ளவேண்டும் என்று அவன் அவசரப்படவும் இல்லை.

பெரியசாமியையும் மரகதத்தையும் சம்பந்தப்படுத்திப் பலவிதமான கதைகள் தோட்டத்தின் பல பகுதிகளிலே அடிபடத் தொடங்கின. இந்தக் கதைகள் முதலிலே மரகதத்தைக் கூனிக் குறுகச் செய்தன. அதே சமயம், அந்தக் கனவுகளைத் தனிமையிலே அசைபோட்டுப் பார்த்து, மரகதம் ஊமை இன்பமும் அநுபவித்திருக் கின்றாள். காட்டுத் தீ போலப் பரவும் இக்கதைகள், இப்பொழுதுள்ள நிலையில் பெரியசாமியின் செவிகளை அடையக்கூடாது என்பதைப் பற்றியும் சஞ்சலப்பட்டிருக் கின்றாள்.

பெரியசாமி, மரகதத்தின் வற்புறுத்தலினாலே கஞ்சி முழுவதையும் குடித்து முடித்தான். அவனுடைய இடது இதழ் கோடியிலே கஞ்சி கொஞ்சம் சிந்திக் கிடந்தது. எதுவித யோசனையும் இல்லாமல், மரகதம் அதைத் தன் முந்தானையினாலே துடைத்து விட்டாள்.

அப்பொழுது, "அண்ணா! கங்காணியார் உங்களப் பார்க்க வந்துகொண்டிருக்கிறார்." என்று அறிவித்தபடி கோமதி உள்ளே வந்தாள். மரகதத்தையும் அங்கு கண்டதும் கோமதியின் மனம் சற்றே பின்வாங்கியது. அதனைச் சமாளித்து, "மரகதம்! நீயும் இங்.தான் இருக்கிறியா?" என்று கேட்டாள்.

மரகதம் குற்ற உணர்வோடு தயங்குவதைக் கண்ட பெரியசாமி. "மரகதம் கஞ்சி கொண்டாந்தா கோமதி" என்று கூறினான.

வாசற் பக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்த மரகதம், "வாங்க கங்காணியாரே." என்று சடையன் கங்காணியை வரவேற்றாள்.

“என்னப்பா சாமி ஒனக்கு? நான் எவ்வளவோ சொல்லியிருந்தும் கேட்டபாடில்லையே இப்ப பார்த்தியா?” என்று அலுத்த சடையன் கங்காணி அருகிலிருந்த புட்டுவத்திலே அமர்ந்து கொண்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மரகதமும் கோமதியும் வெளியேறினார்கள்.

பெரியசாமி எதுவுமே பேசாது முறுவலித்தான்.

“நீ சரியா வாக்குமூலம் கொடுக்காததினால் ஒன்ன அடிச்சவங்களுக்கு மேல வழக்குத் தொடர முடியாமப் போயிடிச்சி...” என்று பெரியசாமியைக் குற்றஞ்சாட்டும் தோரணையிலே கங்காணியார் கூறினார்.

“அப்புகாமி, செல்லத்துரை, ராமசாமி மூணு பேரையும் போலீஸ் விடுதலை பண்ணிட்டாங்களா?”

“ஆமா சாமி...”

“நல்லது. அறியாமச் செய்த பிழைக்கு அவங்களைத் தண்டிக்கிறது முறையல்ல...”

“மண்டையை இப்படிப் பிளந்து வைச்சிருக்காங்களே. இதுவா அறியாமல் செய்த குத்தம்?”

“கங்காணியாரே என் மண்டையைப் பிளந்தது ஒரு கம்பு... அதற்காக அந்தக் கம்புக்கு தண்டனை கொடுக்கிறதுதான் நியாயம்... இவர்கள் கருவிகள், கர்த்தாக்களை எனக்குத் தெரியும். அவர்களுக்கு எதிராகத்தான் நான் போராடுவேன்...”

“அவன் அப்புகாமி மகா முரடன்...”

“ஆனா, கெட்டவன் அல்ல. நான் ஏன் ஸ்ட்ரைக்கில கலந்து கொள்ளவில்லை? இதற்கான நியாயம் அவனுக்கு விளங்கேல்ல. நான் தொழிலாளருக்கு விரோதமானவன் என்று தவறா நினைக்கிறாங்க... உண்மையை உணரும் போது அவர்கள் என்னுடன் ஒரே அணியில் நிற்பாங்க...”

"நீ இப்படிச் சொல்லிக்கிட்டிரு...ஏதோ அவங்கள வெளியில விட்டு வச்சிருக்கிறது நல்லதா எனக்குப் படல்ல..."

"என்னால நம்ம தோட்டத்தில எந்தத் தொழிலாளிக்கும் எந்தக் கஷ்டமும் வருகிறத நான் விரும்பல்ல. அவர்களுக்கு எதிராக எடுக்கிற நடவடிக்கையால தொழிலாளர் வாழ்வில் ஒரு தாழ்வு ஏற்படுறதையும் நான் விரும்பல்ல..."

"இப்படி எதிரிகள மன்னிக்கிற பண்பைதான் வேறு யாரிடமும் பார்க்கல்ல சாமி..."

"இது ஒன்னும் புதுமை இல்லை கங்காணியாரே... வர்க்கபோதம் பெற்ற ஒவ்வொரு பாட்டாளியும் தன் வர்க்கத்தினை உற்ற உறவினர் எண்ணு நேசிக்கும் பண்பைப் பெற்று விடுகின்றான். பாட்டாளி வர்க்கம் பிரகடனப் படுத்தியுள்ள போராட்டம் நீண்டது. போராட்டம் இறுதியில் வெற்றி பெற்றே ஆகவேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியம் மேலும் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். இந்த ஐக்கியத்தை வலுப்படுத்தி பாட்டாளி மக்களை வெற்றிப் பாதையிலே கொடி தாங்கிச் செல்லும் ஒரு பரமார்த்த தொண்டனாக முன்னேறுவதுதான் என் லட்சியம்.இதனாலதான் என்னை அடிச்சவங்களுக்கு எதிராகப் போலீஸில் வாக்குமூலம் தரமுடியாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டேன்.."

"நீ சொல்லிட்ட..." ஆனா,நம்ம பெரிய தொரை விடுவாரா, என்ன? வழக்குப் போட முடியாது என்று தெரிஞ்சதும் அவர் என்ன செய்தார் தெரியுமா?"

"என்ன செய்தார்?"

"உனக்குத் தெரியாதா? சட்ட விரோதமான வேலை நிறுத்தத்துக்கு தொழிலாளரைத் தூண்டிவிட்டதாகக் குற்றஞ்சாட்டி அப்புகாமியை வேலையிலிருந்து நிப்பாட்டி விட்டுட்டார். தோட்டத்தை விட்டும் கணக்குத் தீர்த்துவிடும் நோட்டீசும் கொடுத்து விட்டாராம்."

"என்ன? அப்புகாமிய வேலையிலிருந்து நிப்பாட்டி யாச்சா? என்ன சொல்றீங்க கங்காணியாரே..."

"ஆமா. அவன் குடும்பம் பெரிசு. வயசான தாய் மனுஷி. கல்யாண வயசில ஒரு குமரு. அவன் தங்கச்சி, ஸ்கூல்ல படிக்கிற தம்பி. அவன் பொம்பில ரெண்டு பிள்ளைக இனி என்ன செய்யப்போகுதுகளோ? இந்தக் காலத்தில தோட்டக் காட்டுகளில் வேலை கிடைக்கிறது குதிரைக் கொம்பாக இருக்கிறது. அதிலயும் இவன்ட வெஷயம் தெரிஞ்சா எந்தத் தோட்டத்திலேதான் பெயர் பதிவாங்க?"

அப்பொழுது குமாரவேலும், ஜெயராமனும் வந்து சேர்ந்தார்கள். அவர்களை முறுவல் பூத்து வரவேற்றான். ஆனால், கங்காணியாருடன் நடத்திய உரையாடலையே அவன் தொடர்ந்தான்.

"நம்ம பெரிய தொரை வேணு முன்னுதான் அப்புகாமி யைப் பழி வாங்கீட்டாரு...இது பெரிய அநியாயம் கங்காணியாரே..."

"அப்புகாமிய வேலையிலிருந்து நிப்பாட்டக் காரணம் தேடிக்கிட்டே இருந்தாரு....அவனே வலிய வந்து மாட்டிக் கிட்டான். இந்தச் சந்தர்ப்பத்தை தொரை விடுவாரா என்ன? அதுக்கு நாம என்ன செய்யமுடியும்?"

"இது பெரிய அநியாயம்... ஒரு தொழிலாளியின் தந்திரத்தையும், வாழ்க்கையையும் நசுக்க முதலாளி வர்க்கம் எடுத்துள்ள ஒரு திமிர் நடவடிக்கையாகும். இதைச் சும்மா விடக்கூடாது. இதை இப்பவே தட்டிக் கேட்காவிட்டால், இது நாளைக்கு எனக்கும் நடக்கும், உங்களுக்கும் நடக்கும்."

"எனக்கா? நான் பெரிய சம்பளம் எடுக்கிற கங்காணி...."

"இருந்தாலும் நீங்களும் தொழிலாளிதானே...."

“நானும் உங்க மாதிரி தொழிலாளிதான். ஒத்துக்கறேன். ஆனா, உங்களுக்கு இருக்கிற சுதந்திரங் கூட எனக்கில்ல... சரி, நான் வருகிறேன்...”

சடையன் கங்காணியார் விடை பெற்றுச் சென்றார்.

“என்னப்பா அப்புகாமியை வேலையில இருந்து தொரை நிப்பாட்டிட்டாராமே...” என்று குமாரவேலைப் பார்த்துப் பெரியசாமி கேட்டான்.

“ஆமா, அதற்கு நாம என்ன செய்யிறது?” என்றான் குமாரவேல்.

“மறுபடியும் அவனை வேலையில சேர்த்துக்கொள்ளும் படி எல்லா யூனியன்களும் ஒன்று சேர்ந்து தொரையை வற்புறுத்த வேண்டும்...” என்று பெரியசாமி சொன்னது குமாரவேலுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

“நீ என்ன சொல்லுற சாமி... அவன்தான் உன் மண்டையை உடைச்சவன். அவனுக்கு சிபார்சு செய்யப்போறியா? அவன் சிங்களவன். துவேஷம் பிடிச்சவன்...”

“அவன் சிங்களவனா இருக்கலாம். துவேஷம் பிடிச்சவனாக இருக்கலாம். என் மண்டையை உடைச்சவ னாகக்கூட இருக்கலாம். ஆனா, அவன் ஒரு தொழிலாளி என்கிற உண்மையை மறந்துவிட வேண்டாம். நாமெல்லாரும் ஒரு இனம், ஒரு வர்க்கம்! வர்க்க உணர்வும் பாசமும் உலகளாவியது. மொழி-இனம் மதம் என்கிற குறுகிய எல்லைகளைக் கடந்து, சத்தியமாய் நிலைத்து நற்கும் ஒப்பற்ற பாச உணர்ச்சிதான் பாட்டாளி வர்க்கத்தின் நேசமும் உறவும். என் வர்க்கத்திலே ஒருவன் இம்சிக்கப்படுவதைப் பார்த்து நான் சும்ம இருந்தால், நான் என் சொந்த இரத்தத்திற்கும், தசைக் கட்டிகளுக்கும் துரோகம் செய்த பாவியாகிவிடுவேன்...”

இந்தக் கட்டத்திலே ஜெயராமன் உரையாடலிலே புகுந்து கொண்டான். “சாமி நீதான் எங்க தலைவர்.

நான் அப்புகாமி கூடச் சேர்ந்து செய்ததை எல்லாம் நீ மன்னிச்சிடு... எனக்கு இப்ப நல்ல புத்தி வந்திடிச்சி ஒரு காலத்தில எங்களுடைய வாழ்வு இப்படி இரிந்திரிச்சி? அது நெனைச்சுப் பார்க்க இயலாத பயங்கரம்! தோட்டங்களிலே தொழிற்சங்க இயக்கம் இடம்பெற்ற பிறகுதான் கொஞ்சமாவது விமோசனம் கிடைச்சிது...''

''ஜெயராம்! நீ என்னுடையவன். மன்னிப்புக் கேட்கலாமா?'' என்று பெரியசாமி வாஞ்சையுடன் கேட்டான்

''அன்று தொழிற் சங்கத்தின் வழியில் ஒரே குரலில் ஒலித்த சமூகம் இன்று சிதறிப் போய்க் கொண்டிருக்கின்றது...'' என்று குமாரவேல் உரையாடலைப் பழைய தடத்திற்கே கொண்டு வந்தான்.

''அதற்குக் காரணம், தொழிற்சங்க இயக்கத்திலே இடம் பெற்றுள்ள முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கம். இதனால தொழிலாளிகளுக்கு இயக்கத்தில் நம்பிக்கையில்லாமல் போய்விட்டது. எது எப்படி இருந்தாலும், இன்றுகூட நமக்குள்ளே பல பிற்போக்குவாதிகள் நுழைந்து நமது ஒற்றுமையைக் குலைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் களையப்பட வேண்டும். கட்டுக்கோப்பான பாட்டாளி சமூகத்தை ஒன்றாகத் திரட்ட வேணும்.''

''நடக்கக் கூடியதா இது? தோட்டத்தில எத்தனை பிரிவுகள்? அரசியல் என்னு ஒரு பிரிவு; தொழிற்சங்கமென்னு இன்னொரு பிரிவு. இவை ரெண்டிற்கும் மாறான கருத்துடைய ஒரு சார்பு. இதில் எதிலுமே நம்பிக்கை இல்லாத இன்னொரு தரப்பு...'' என்றான் ஜெயராமன்

''எல்லாரும் ஒருவொரு கோணத்தில நம் சமூகத்தின் தலைவிதியை வரைந்து கொண்டிருக்கிறார்கள். முதலில நாம எல்லாரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமை

மனப்பான்மையை உருவாக்க வேண்டும். ஒற்றுமை மூலம் பொருளாதாரத்தினை ஒருமுகப்படுத்தித் தோட்டங்களைத் தொழிலாளர் உடமைகளாகக் கூட மாற்றலாம். இவை எல்லாம் ஒரு இடைக்கால ஏற்பாடுதான் என்ற உணர்வையும் நாம் கைவிடலாகாது''... என்று பெரியசாமி விளக்கினான்.

''நீ சொல்றதைக் கேட்க நல்லாத்தான் இருக்கு. நடைமுறைக்குக் கொண்டு வரணுமே, சொன்னா புரியனுமே நம்ம ஆளுகளுக்கு?'' என்றான் ஜெயராமன்.

''இளைஞர் மத்தியிலதான் முதலில் விழிப்பு ஏற்படுத்த வேண்டும். அவர்கள் விழித்துக் கொண்டால் கிழடு கட்டைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. வாழவேண்டியவர்கள் இளம் பரம்பரையினர்...'' என்றான் பெரியசாமி.

''இவை உணர்ச்சிகள்.... உணர்ச்சி சோறு போடாது...'' என்றான் குமாரவேலு.

''வெறும் உணர்ச்சிகள்... சோறு போடாதுதான். தன்னம்பிக்கைதான் சோறுபோடும். இதெல்லாம் மேலோட்டமாகச் சிந்திச்சா மட்டும் போதாது. நான் சொல்லுறத ஆழமா சிந்திச்சிப் பாருங்க. நம்ம மத்தியிலே புதிய சிந்தனைகள் தோன்றாது இருந்தால், நம்ம அப்பா அம்மா செஞ்ச குற்றத்தைத்தான் நாமும் செய்வோம். ஒத்துமையா இருந்து வர்க்க உணர்வோடு காரியம் செஞ்சா நாம வாழலாம். எதிர்காலத்திற்கே நாம் சவால் விடலாம்... இவற்றிற்குக் காலம் இருக்கிறது. ஆனா, முதலில அப்புகாமி விஷயத்தை முன் வைத்து போராட்டத்தில குதிக்க வேண்டியதுதான்.'' என்றான் பெரியசாமி.

''நீ சொல்றது சாத்தியமாத் தெரியல்ல... ஏன்னா, தொரைக்கு அவனக் கண்டால் பிடிக்காது...'' என்றான் குமாரவேல்.

"தொரையின் விருப்பு வெறுப்புகளுக்கு கட்டுப்பட்ட தல்ல தொழிலாளர்களுடைய உரிமைகள்... ஒரு தொழிலாளியின் உரிமைகள் பறிக்கப்படுவதை சும்மா பார்த்துக் கொண்டிருப்போமானால், நாம நம்முடைய அடிமைச் சாசனங்களைத் தொரைக்கு எழுதிக் கொடுத்தவர்களாவோம். இப்ப பாட்டாளி வர்க்கம் என்ற உணர்வுகூட வேண்டாம். சாதாரண மனுஷர்களாகச் சிந்தித்துப் பார்ப்போம். அப்புகாமியின் எதிர் காலம் என்ன? அவன் குடும்பத்தின் எதிர்காலம் என்ன?"

"பேரியசாமி, நீ சொல்றதிலயும் நியாயம் இருக்குத் தான்... நாம கேட்டு தொரை வேலை கொடுப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை..." என்றான் குமாரவேல்.

"தொரை கொடுக்க மாட்டாரென்பது எனக்கும் தெரியும் அவர் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதி. அந்த வர்க்கத்திற்கு மனிதாபிமானமும் மனச்சாட்சியும் இல்லை என்பதும் எனக்குத் தெரியும்.... 'அப்புகாமிக்கு வேலை கொடுங்கள்' என்று நாங்கள் யாசிக்கப் போவதில்லை. அவனுக்கு மீண்டும் வேலை கொடுப்பது என்பது நமது வர்க்கத்தின் உரிமைப் பிரச்சினையாக மாறியிருக்கிறது. உரிமையை நிலை நாட்டுவதற்கு அப்படி ஒரு அவசியம் ஏற்பட்டால், வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தையும் அவசியம் பிரயோகிப்போம்... இந்தத் தோட்டத்தின் மூலைமுடுக்குகளெல்லாம் இந்தக்கோஷம் இப்பொழுதே முழங்கட்டும்... அப்புகாமிக்கு வேலை கொடுக்கும் வரை வேலை நிறுத்தம்..."

"பெரியசாமி, ஏற்கனவே ஒரு வேலை நிறுத்தம் பிசுபிசுத்துப் போச்சுது" என்றான் ஜெயராமன்.

"அந்த வேலையை நிறுத்தம் எதற்கு நடந்தது? 'இன்னொரு மாத போனஸ்?' என்றயாசகக் கோரிக்கையை அந்த வேலைநிறுத்தம் முன்வைத்தது. தலைவர்கள் என்று

வேஷம் போடுபவர்களின் அரசியல் ஆதாயமே அதன் குறிக்கோள். ஆனால், இது? நம்முள் ஒருவனான ஒரு தொழிலாளியின் உரிமைகளைப் பாதுகாக்கும் உரிமைப் பிரச்சினை. இந்தத் தோட்டத்திலே வேலை செய்த ஒவ்வொருவனுக்கும், இந்தத் தோட்டத்திலே தொடர்ந்து வேலை செய்ய உரிமை இருக்கிறது...'' நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தபடியால் பெரியசாமிக்குக் களைப்பு மேலிட்டது.

''சாமி, நீ முதலில் ஒன் ஒடம்பைப் பார்த்துக்கோ...'' என்று ஜெயராமன் பரிவுடன் கூறினான்.

''போராட்டத்திற்கு உடற்பலமல்ல, மனோபலந்தான் அதிகம் தேவை...'' என்று கூறிய பெரியசாமி புன்னகைத் தான்.

# 17

தோழர் பாண்டியனுடன் பெரியசாமி நீண்ட நேரங்கள் ஆலோசனைகள் நடத்திய பின்னர், பின்வரும் அறிக்கை யைத் தயாரித்தான். 'மண்ணின் மக்களே, ஒரு கொடியின் கீழ் திரளுவீர்!'' என்று அதற்கு மகுடமும் இட்டான். அந்த அறிக்கை அச்சாகி தோட்டம் முழுவதும் விநியோகிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் பிரதான பகுதிகள் பின்வருமாறு அமைந்தன.

''மண்ணின் மக்களே! எனதருமைத் தோழர்களே!!

இந்தத் தோட்டத்திலே ஒரு தொழிலாளி வேலையி லிருந்து நிறுத்தப்பட்டிருக்கின்றான் என்பதை நீங்கள்

அறிவீர்கள். முதலாளி வர்க்கத்தின் நிர்வாக இயந்திரம் ஒரு மனிதனுக்கு இழைத்துள்ள இந்த அநியாயத்தை எதிர்த்து நாம் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டுள்ளோம். இந்த வேலை நிறுத்தத்திலே தொழிலாளர்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் பங்குபற்றுகின்றார்கள் என்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். எல்லோருமே சகல கொடிகளையும் தூக்கி எறிந்துவிட்டு, உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒரே கொடியான சிவப்புக்கொடியின் கீழேதிரண்டிருக்கின்றார் கள். இது நமது தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைத்துள்ள முதலாவது வெற்றியாகும். இதைக் கண்டு ஏனைய தோட்டங்களிலுள்ள சகல தொழிலாளர்களும் நமது சிவப்புக் கொடியின் கீழே திரளப்போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

ஆரம்பத்தில், பல தோழர்கள் என்னைத் தனிப்பட்ட முறையிலே சந்தித்து,'மண்டையை உடைத்தவனுக்காகவா வேலை நிறுத்தம்?' என்றும் கேட்டார்கள். 'அப்புகாமி சிங்கள இனத்தைச் சேர்ந்தவன்' என்று சிலர் வகுப்பு வாதம் பேசினார்கள். இந்தப் பேதங்களை எல்லாம்கடந்து, பாட்டாளிவர்க்கம் என்ற ஒரே உணர்ச்சி இந்தத் தோட்டம் முழுவதையும் ஆட்கொண்டிருப்பதைக் காணும் பொழுது உண்மையிலேயே பெருமையாகவும் இருக்கின்றது 'இந்த உணர்ச்சியைக் கைவிட மாட்டோம்' என்று நாம் பிறந்த மண்ணைக் கையிலே ஏந்தி, சிவப்புக் கொடியின் கீழ் நின்று வீர சபதம் இயற்றுவோம்.

அப்புகாமியை வேலையிலிருந்து நீக்கினால் நம்ம யூனியன் நடவடிக்கை எடுக்காது என்று பெரியதுரை உண்மையிலேயே தப்புக் கணக்குப் போட்டிருந்தார். முதலாளி வர்க்கம் மொழி - மதம் — இனம் — சொந்தப் பகைமை ஆகிய பேதங்களைக் கற்பித்துத் தொழிலாளி வர்க்கத்தைப் பிரித்து வைத்திருக்கின்றது. இந்தப் பிரிவினை வேலிகள் அனைத்தையும் அறுத்தெறிந்து, நீங்கள்

இப்பொழுது ஒன்றாக ஐக்கியப் பட்டிருப்பதற்காக உங்களுக்கு உளமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நாட்டின் பாட்டாளி வர்க்கத்திற்கு ஒரு மகத்தான சரித்திரம் உண்டு என்பதை நிரூபிக்கும் மானவீரர்களாகவும், நாளைப் படையினராயும் சிவப்புக் கொடியின் கீழ் திரண்டுள்ள நீங்கள், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் புனித வரலாற்றிலே ஒரு முக்கிய அத்தியாயம் எழுதும் பணியிலே ஈடுபட்டிருப்பதை மறக்காதிர்கள்.

உலக வரலாற்றைப் பாருங்கள். ஐக்கியத்துடன் சீறியெழுந்த பாட்டாளி வர்க்கம் எந்தப் போராட்டத்திலேயும் தோல்வி கண்டதில்லை. அந்த வெற்றிப் பாரம்பரியத்தை நம் நாட்டின் மண்ணிலும் புகழுடன் நிலைநாட்டி வைப்போம்.

உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியம் ஓங்குக!

இந்த ஐக்கியத்தின் மூலம் நாம் நமது நியாயமான உரிமைகளை வென்றெடுப்போம்!

உங்கள் அனைவரினது சார்பாகப் பின்வரும் கோரிக்கைகளைத் தோட்ட நிர்வாகத்திடம் சமர்ப்பித்திருக்கின்றோம்.

1. அப்புகாமி உடனடியாக மீண்டும் வேலையில் அமர்த்தப்படுதல் வேண்டும். அவனும் அவனுடைய குடும்பத்தினரும் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்படக் கூடாது.

2. மனிதன் விண்வெளிப் பயணங்களை மேற்கொண்டுள்ள இந்தக் காலத்திலே கூட, பத்தொன்பதாம் நூற்றாண்டிலே நிலைநாட்டப்பட்ட ‘கொலோனியன்’

ஆதிக்கத்தின் உச்சக் கட்டத்திலே, மனித மாடுகளுக்காகக் கட்டப்பட்ட எட்டடிக் 'காம்பரா' விலேதான். மனித உணர்வுகளைப் பெற்றுள்ள நாம் வாழ வேண்டியிருக்கின்றது. மனிதர்கள் மானத்துடன் வாழத்தக்க வீடுகளைத் தோட்ட நிர்வாகம் நமக்குக் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. தொழிலாளர்களுக்கான சுகாதார வசதிகள் பெருக்கப்படுதல் வேண்டும். நாற்பது குடும்பங்களுக்குள் கூட ஒரு கக்கூசு என்ற வீதத்திலேனும் இந்து அடிப்படைச் சுகாதார வசதி இந்தத் தோட்டத்திலே கிடையது. இந்த இழிநிலையைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4 தொழிலாளர்களுக்கான சம சம்பள அடிப்படையிலே தோட்டத் தொழிலாளருடைய சம்பளம் மறுசீரமைக்கப் படுதல் வேண்டும். மாதச்சம்பளம் என்ற அடிப்படையில் தொழிலாளர்களுடைய மிகக் குறைந்த சம்பளம் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

5. நமது தோட்டத்துக் குழந்தைகளுக்குச் சம கல்வி வசதிகள் ஏற்படுத்தப் படுதல் வேண்டும். ஆறாந்தரம் தொடக்கம் புதிதாய் அமைக்கப்பட்டுள்ள புதிய கல்வித் திட்டத்தில் கற்பதற்கான சகல வசதிகளும் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

எனதருமைத் தோழர்களே! இவை அனைத்தும் நாம் யாசிக்கும் சலுகைகளல்ல. இவை அனைத்தும் நாம் அநுபவிக்க உரித்துள்ள உரிமைகள். தோட்டத் தொழிலாளர்களைத் தவிர்த்த, இந்நாட்டிலுள்ள ஏனைய தொழிலாளர்கள் அனைவரும் நாம் மேலே கோரியுள்ள வசதிகளைப் பெற்றிருக்கின்றார்கள்.

நாம் இந்த நாட்டின் ஒவ்வொரு அங்குல மண்ணின் வளத்திற்கும், நம் வியர்வையையும், இரத்தத்தையும் பிழிந்து கொடுத்திருக்கிறோம். ஈற்றிலே நமது உயிரற்ற சடலங்களை இந்த மண்ணிற்கே உரமாக அளித்திருக்கின்றோம்.

நாளைக்கு, வழமையாக நாம் வேலைக்குச் செல்லும் நேரத்தில், மாரியாயி கோயில் முன்றிலிலே சகல தொழிலாளர்களும் ஒன்று திரளும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள். அங்கு உங்கள் அனைவரினதும் ஆலோசனைப்படி வேலை நிறுத்தத்தினை இன்னொரு தீவிரமான கட்டத்திற்கு உயர்த்துவதற்குத் திட்டங்கள் தீட்டப்படும்.

ஐக்கியம் ஓங்குக!

பாட்டாளி வர்க்கம் வாழ்க!

வெல்க நமது போராட்டம்!

★ ★ ★

மாரியாயி கோயில் முன்றில் கொள்ளவில்லை. சகல தொழிலாளர்களும் ஆண் பெண் பேதமின்றி உற்சாகத்துடன் திரண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தையும், அதிலே பிரவாகித்து ஓடிய உற்சாகத்தையும் கண்டு தோழர் பாண்டியனும் பெரியசாமியும் சந்தோஷத்துடன் காணப்பட்டார்கள். பெரியசாமியின் மண்டைப்புண் இன்னும் முற்றாக ஆறவில்லை. அவனுடைய தலையிலே பண்டேஜ் ஒன்று கட்டப்பட்டிருந்தது.

கூட்டத்திலே பேசிய பெரியசாமி மிகவும் சுருக்கமாகக் கூறினான்.

"தோழர்களே! ஒவ்வொரு நாளும் இந்த இடத்திலேயே, இந்த நேரத்திற்குச் சந்திப்போம். நமது வேலை நிறுத்தப் போராட்டத்தின் ஒவ்வொரு சட்டங்களையும் அன்றைக்கே

முடிவெடுப்போம். இல்லாவிட்டால், எதிரணியினர் நமது திட்டங்களை முறியடிக்க முற்கூட்டியே நடவடிக்கை எடுத்து விடுவார்கள். நம்திட்டங்களை அவர்கள் முற்கூட்டி அறிவது, நமது அணியைப் பலவீனப்படுத்தக்கூடும். நமது வேலை நிறுத்தப் போராட்டத்தின் இன்றைய கட்டமாகப் பின்வரு வதைச் செயற்படுத்தலாம் என்ற பிரேரணையை உங்கள் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கின்றேன்.

"நமது ஐக்கியத்தைப் பறை சாற்றும் சிவப்புக் கொமயைத் தாங்கி இந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கும்படி நீங்கள் அளித்துள்ள கௌரவத்தினால், பெரியசாமி ஆகிய நான் தாங்கிக் கொள்கின்றேன் நமது இயக்கத்தின் மாவட்டப் பிரதிநிதியான தோழர் பாண்டியனும் இந்தப் போராட்டத்தின் நாயகனாக இன்று நிகழும் அப்புகாமியும் என் இரு பக்கங்களில் வருவார்கள். மற்றும் தொழிலாளர்கள், பெண்கள் ஒரு வரிசையிலும், ஆண்கள் ஒரு வரிசையிலும் என்ற வகையிலே அணி திரண்டு பின்னால் வருவார்கள். இந்த ஏற்பாட்டிலே நாங்கள் பெரியதுரையின் பங்களாவைச் சென்றடைவோம். தோழர் பாண்டியனையும், என்னையும் அப்புகாமியையும் உள்ளே அழைத்துப் பெரியதுரை பேச்சு வார்த்தைகள் நடத்தும் வரை, பெரியதுரையின்பங்களாவுக்கு முன்னாலே சாத்வீகமான முறையிலே குந்தியிருப்போம். எங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தும் வரை, அவரையோ அவருடைய குடுப்பத்தினர் எவரையோ வெளியேற அனுமதிக்க மாட்டோம். பேச்சு வார்த்தை நடத்தும்வரை அவருடைய பங்களாவுக்கு உள்ளேயும், பங்களாவிலிருந்து வெளியேயும் எந்த வாகனமும் செல்ல அனுமதிக்கப்படக் கூடாது."

இந்தப் பிரேரணையை எல்லோரும் ஒருமுகமாக அனுமதித்தார்கள்.

சிவனொளிபாத மலை நித்திய கம்பீரத்தை ஏந்திய வண்ணம் எழுந்து நிற்கின்றது.

திட்டத்தின்படி ஊர்வலம் பெரிய துரை பங்களாவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

புதிய அத்தியாயத்தின் நாயக புருஷர்களாக அந்த ஊர்வலத்திலே பங்கு பற்றிய எல்லோரும் தோன்றினார்கள். அந்த ஊர்வலத்தின் ஒழுங்கினை விதந்துரைக்க வார்த்தைகளில்லை.

பெரியசாமியின் கைகளிலே சிவப்புக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. 'செங்கொடியில் திரண்டதடா மனித சக்தி' என்று உரத்து இசைமீட்டுவது போல அது கம்பீரமாகப் பறந்தது.

சிவனொளி பாதத்தின் கம்பீரம் ஆசிர்வதிக்க, செங்கொடியின் கம்பீரம் பெரிய துரையின் பங்களாவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

□ □ □

[illegible]


இளவழகன் பதிப்பகம்